பகவான் மகாவீரர் 2500-ஆம்
பரிநிர்வாண ஆண்டு நினைவு வெளியீடு

# இலக்கியவானில் சிந்தாமணி

மு. வை. அரவிந்தன்

தமிழ்நாடு ஜைன சங்கம்
சென்னை

# இலக்கிய வானில்
# சிந்தாமணி

தமிழ்நாடு ஜைன சங்க வெளியீடு

புலவர் மு. வை. அரவிந்தன், எம்.ஓ.எல்.
தமிழ்த் துணைப் பேராசிரியர்,
அரசினர் கலைக் கல்லூரி,
வேலூர், வ. ஆ.

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை-1

முதற்பதிப்பு : ஜனவரி, 1975
உரிமை ஆசிரியர்க்கு

விலை ரூ. 4-00

## ஆசிரியரின் பிறநூல்கள்

1. உரையாசிரியர்கள்
   (1968, தமிழக அரசின்
   முதற்பரிசு பெற்றது)
2. திருக்குறளும் சங்க இலக்கியமும்
3. தமிழக நாட்டுப் பாடல்கள்
   (இரு தொகுதிகள்)
4. பிழையின்றி எழுதுங்கள்
5. சிறுவர் உலகம் (கவிதைகள்)
6. வரலாற்றிலே வேலூர்
7. இளங்கோ அடிகளின்
   நாடகத் திறன்
8. சிலம்புச்செல்வி
   (சிலப்பதிகார இலக்கிய நாடகம்)
9. அருகன் புகழ்மாலை
   (இசைப் பாடல்கள்)

ஸ்ரீமதி அச்சகம்,
3/80, மவுண்ட் ரோடு,
சென்னை-600 002.

# முன்னுரை

தமிழ் இலக்கிய வானில் சீவகசிந்தாமணி, ஒளி வீசுகின்ற விண்மீன்களின் நடுவே அமுத ஒளி பரப்பும் முழு வெண்மதியாய்த் திகழ்கின்றது. காலந்தோறும் இந்தப் பெருங் காப்பியம், கற்போர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுள்ளது. இது தோன்றிய காலத்திலும் அதற்குப் பின்னரும், பல நூறு ஆண்டுகள் மிகுந்த செல்வாக்குடன் விளங்கியது; மாமன்னர்களும் சான்றோர்களும் இதனைப் போற்றினர்; கற்றோரும் மற்றோரும் பாராட்டினர். மன்னர்களின் அரண்மனைகளிலும் திருக்கோயில்களிலும் கல்வி நிலையங்களிலும் இந்த நூல் சிறப்பிடம் பெற்றிருந்தது. சீவகன் கதையை மக்கள் ஊர்தோறும் கேட்டு மகிழ்ந்தனர். இவ்வாறு சிந்தாமணிச் சுவை, பல நூற்றாண்டுகள் தமிழகமெங்கும் மண்டிக் கிடந்தது.

இடைக் காலத்தில் சமயப் போராட்டங்களின் விளைவால் சிந்தாமணியின் செல்வாக்கை குறைப்பதற்குப் பிற சமயத்தவர் பெரிதும் முயன்றனர். ஆனால் அவர்கள் செய்த முயற்சிகள் யாவும் தோற்றுப் போயின. இக்காப்பியத்தின் இலக்கியச் சுவையும், கலைத்திறனும், கற்பனை அழகும், மொழிவளமும் அனைவரையும் போற்றிக் கற்குமாறு செய்தன. சமய வேறுபாடுகளைக் கடந்து, நாகரிக மாற்றங்களை வென்று பிறமொழிகளின் ஆதிக்கத்தைப் புறங்கண்டு விளங்குகின்ற பேராற்றல் படைத்ததாய் இக்காப்பியம் உள்ளது.

இருபதாம் நூற்றாண்டில் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் சிந்தாமணியை முழுமையாகவும் செப்பமாகவும் உரையுடன் அச்சிட்டு உலக மக்களுக்கு வழங்கினார்கள். சிந்தாமணியைக் கற்போர் அனைவரும் அப்பெரியவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர்.

சிந்தாமணிக் காப்பியத்தை, முழுமையாகப் பயிலும் வாய்ப்பு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எம். ஓ. எல். பட்ட வகுப்பில் (1963-65) பயின்றபோது எனக்குக் கிடைத்தது. உயர்திரு. மு. அருணாசலம் பிள்ளை அவர்கள் ஆசிரியராய் இருந்து இக்காப்பியத்தைக் கற்பித்த போது பல நுட்பங்களை விளக்கிக் காட்டினார்கள். சிந்தாமணிச் செல்வத்தை எனக்கு வழங்கிய அப்புலவர் பெருமகனாரை நன்றியறிதலோடு நினைத்து வணங்குகிறேன்.

1964ஆம் ஆண்டில் ஆர். கே. சண்முகம் செட்டியார் நினைவுத் தமிழ்க் கட்டுரைப் போட்டிக்காக, 'சீவக சிந்தாமணி—ஒரு பெருங்காப்பியம்' என்னும் தலைப்பை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையினர் தேர்ந்தெடுத்தனர். நான் அந்தப் போட்டியில் கலந்து கொண்டு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதிப் பரிசு பெற்றேன். பின்னர் அக் கட்டுரையை விரிவுப்படுத்தி, பல பகுதிகளாகப் பிரித்து அவ்வப்போது இலக்கிய இதழ்களுக்கு அனுப்பி வந்தேன் அவை செந்தமிழ் செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில், தமிழ்நாடு (ஞாயிறுமலர்), தென்மொழி, ஞானசம்பந்தம், குமர குருபரன் ஆகிய இதழ்களில் வெளிவந்தன. சிந்தாமணிக் கட்டுரைகளுக்குப் பரிசு நல்கி என்னை ஊக்குவித்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையினர்க்கும், கட்டுரைகளை வெளியிட்ட இலக்கிய இதழ்களின் ஆசிரியர்க்கும் என் நன்றி உரியதாகும்.

சிந்தாமணிக் கட்டுரைகள் இலக்கிய இதழ்களில் வெளி வந்த போது அவற்றைப் படித்த தமிழன்பர் பலர் எனக்கு நண்பராயினர். அச்சில் வந்த கட்டுரைகளின் தொகுப்பைக் கண்ட நண்பர் திரு கோவிந்தன், எம். ஏ., (வேலூர் அரசினர் கலைக்கல்லூரியில் பணியாற்றியவர்) ஆர்வத்துடன் படித்துப் பார்த்துப் பெரிதும் மகிழ்ந்தார். சிந்தாமணிக் கட்டுரைகளை நூல் வடிவில் காண விரும்பினார். அவரது நன் முயற்சியால் சிந்தாமணி ஆராய்ச்சிக் கட்டுரைகள், ஜைன

சமயக் காவலர், டி. எஸ். ஸ்ரீபால் அவர்களிடம் சென்று சேர்ந்தன. அவற்றை அவர்கள் ஆழ்ந்து படித்துப்பார்த்து, பெரிதும் இன்புற்று நீண்ட கடிதத்தின் வாயிலாகத் தம் பாராட்டுதலை எனக்குத் தெரிவித்தார்கள். சிந்தாமணி ஆராய்ச்சிக் கட்டுரைகளை நூலாக வெளியிடப் போவதாக வாக்களித்து அவ்வாறே செய்து முடித்தார்கள். பெரியோர் துணைவலிமை எதைத்தான் செய்து முடிக்காது? அப்பெரியவர்க்கும், தமிழ்நாடு ஜைன சங்கத்தார்க்கும் நான் நன்றி செலுத்தப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

இவ்வாறு சிந்தாமணியைப் பற்றிய ஆராய்ச்சி தோன்றி வளர்ந்து முழுமைபெற்று நூல்வடிவம் பெற்றதை நினைக்கும் போது என் உள்ளம் கரையில்லாக் களிப்பில் மூழ்குகின்றது. நினைத்தவர் நினைக்கின்ற பொருள்களை எல்லாம் அளிக்கின்ற 'சிந்தாமணி' எனக்குத் தமிழின்பம் ஊட்டி இலக்கியப் புலமை தந்து திறனாய்வில் ஈடுபடுத்திக் கற்றறிந்த பெருமக்களோடும், ஜைன அன்பர்களுடனும் தொடர்புபடுத்தி நல்லுறவை வளர்த்துப் பல நன்மைகளைச் செய்து வருகின்றது.

இந்த நூலைப் படித்துப்பார்த்து அணிந்துரை வழங்கி என்னை வாழ்த்தியருளிய தமிழ்ச் சான்றோர் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை அவர்களுக்கும், ஆய்வுரை வழங்கி என்னை ஊக்குவித்த டாக்டர் ந. சஞ்சீவி அவர்களுக்கும் தமிழறிஞர் மு. சண்முகம்பிள்ளை அவர்களுக்கும் நன்றி செலுத்துகின்றேன்.

தமிழ்கூறும் நல்லுலகம் இதனை ஆதரிக்கும் என்று நம்புகின்றேன்.

வேலூர்
21—3—75

மு. வை. அரவிந்தன்

# பதிப்புரை

**ஜைன சமயக் காவலர், பிராணி மித்ரா, சமாஜ ரத்ன, ஜீவபந்து**
**உயர்திரு. டி. எஸ். ஸ்ரீபால் அவர்கள்**

பேராசிரியர் திரு. மு. வை. அரவிந்தன் எம். ஓ. எல்., அவர்கள் தாம் எழுதிய 'இலக்கியவானில் — சிந்தாமணி' என்னும் திறனாய்வு நூலின் கையெழுத்துப் பிரதியை, புலவர் திரு. கோவிந்தன் எம். ஏ., வாயிலாக நமது பார்வைக்கு அனுப்பி வைத்தார். பேராசிரியர் அரவிந்தன் பன்னூற் புலவர்; அரும்பெருந் ஆராய்ச்சி நூல்களை எழுதிப் புகழ் பெற்றவர்; காய்தல் உவத்தல் அகற்றி நேரிதின் ஆராயும் பண்புடையவர் என்பதை அறிந்தோம்.

இத்தகு சிறப்புக்கள் அமைந்த பேராசிரியரின் 'இலக்கிய வானில் — சிந்தாமணி' என்னும் புதிய படைப்பை ஆர்வத்தோடு படித்துப் பார்த்தோம். ஆசிரியரின் புலமைத் திறம் அனைத்தும் இந்த நூலில் விளங்கக் கண்டு மகிழ்ந்தோம். சீவக சிந்தாமணியின் சிறப்பனைத்தும் இந்நூலில் பேரொளி வீசுகிறது. இதுவரை சிந்தாமணியைப் பற்றி இத்தகைய ஆய்வு நூல் வெளிவந்ததாகத் தெரியவில்லை. சிந்தாமணி பற்றிய ஆய்வுரைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போன்று இது சிறந்து விளங்குகின்றது. சிந்தாமணியைப் படிப்பவர் காணும் இன்பம் அனைத்தும் இதில் அடங்கியுள்ளது.

சீவக சிந்தாமணியைப் பயில்வோர்க்கு இந்நூல் கலங்கரை விளக்காகக் காட்சியளிக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே இந்நூலை எவ்வாறேனும் அச்சிட்டு வெளியிட வேண்டும் என விழைந்தோம்.

இவ்வரிய நூலை அச்சிடப் பொருள் உதவி வேண்டு மல்லவா! அதற்குரிய வழியை யோசித்துக் கொண்டிருந்தோம். ''எண்ணிய எண்ணியாங்கு எய்தும்'' என்னும் ஆன்றோர் மொழிக்கு ஏற்ப அதே நேரத்தில் பேராவூர் உயர்திரு. V. வீரகுமார்ஜெயின் அவர்கள் எங்களிடையே வந்து சேர்ந்தார். எதிர்பாராத அவர் வருகையை ஒரு நல்ல வாய்ப்பாக எண்ணி அப்பெரியாரிடம் எங்கள் எண்ணத்தையும், நூலின் பெருமையையும் கூறினோம். அப்பெரியார் தமிழகத்து ஜைனத்தாபனங்களுக்கும், விழாக்கள் முதலியனவற்றுக்கும், பல்வேறு அறங்களைச் செய்து வருபவராகையால் எங்கள் வேண்டுகோளை ஆர்வமோடு ஏற்றுக்கொண்டு அச்சகத்திற்கு அளித்துவிடுங்கள் என்று ஊக்கமளிக்கும் வகையில் ரூபா 700 அளித்தார். அவ் வள்ளலின் பெருந்தன்மையை வரவேற்று நன்றி கூறினோம்.

## அப்பெரியாரின் வாழ்க்கை வரலாறு :

தென்னார்க்காடு மாவட்டம் திண்டிவனம்வட்டம், பேராவூர் கிராமத்தைச் சேர்ந்தவரும் திருமகளும், புகழ்மகளும், விளங்க வாழ்ந்தவருமான திரு. வாசுதேவநயினார் அவர்களுக்கும், இலக்ஷுமி அம்மையாருக்கும் அருமை மகனாகத் தோன்றினார். நம் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய திரு. வீரகுமார்ஜெயின் அவர்கள் வீடூரைச் சேர்ந்த திருமதி விஜயலட்சுமியம்மையாரை மணந்தார்.

திரு வீரகுமார்ஜெயின் அவர்களும், அவருடைய தமக்கையார் சொர்ணபாய் அம்மையார் அவர்களும் சமய வளர்ச்சிக்கும், சமூக நலத்திற்கும், பொருள் உதவி புரியும் அறநெறிச் செல்வர்களாய் விளங்கி வருகின்றனர். திரு வீரகுமார்ஜெயின் அவர்களின் அருமை மனைவியார் விஜயலட்சுமி அம்மாள் தம் கணவரின் மனம் உவக்கும்வகையில் ஒழுகி அவர்தம் அறக்கொடைகளுக்கு உறுதுணையாக இருந்து வருகின்றார்கள். இக்குடும்பத்தினர் பெயரால் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் அறக்கொடைகள் வழங்கப் பட்டுள்ளன.

நூலைப் படித்துக்காட்டிய உடனே தடையாதும் சொல்லாமல் மனமுவந்து தானே பொருள் உதவிபுரிய முன் வந்தார் என்றால் அது அப்பெரியாரின் பாரம்பர்யத்தின் மேன்மையையும், தன்மையையும், அங்கை நெல்லிக்கனி போல் தெள்ளிதின் விளங்குகின்றது.

ஈதலும் அதன் பயத்தலான இசைபட வாழ்தலுமே உயிர்க்கு ஊதியம் என்பதை அறிந்து தெளிந்து, ஈத்துவக்கும், இன்பமுடையவரான திரு. வீரகுமார்ஜெயின் அவர்களும், அவரது குடும்பத்தினரும் நீடுவாழ வாழ்த்துகின்றோம். அவருக்குத் தமிழ்நாடு ஜைன சங்கத்தின் சார்பில் நன்றியையும், வணக்கத்தையும் உரிமம் செய்கின்றோம்.

அணிந்துரை வழங்கிச் சிறப்பித்த அறிஞர் பெருமக்கள் மூவர்க்கும் எம் அன்பு கலந்த நன்றி உரித்தாகும்.

நூலை நன்முறையில் அச்சிட்டுத் தந்த ஸ்ரீமதி அச்சகத்தார்க்கும் உதவிபுரிந்த நண்பர்களுக்கும் எம் நன்றி உரியதாகும்.

30-8-75
சென்னை -1

இங்ஙனம்
தமிழ்நாடு ஜைன சங்கத்தார்

# சிறப்புரை

மகாவித்துவான், சிந்தாமணிச் செல்வர், செந்தமிழ்க் களஞ்சியம்
**உயர்திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள்**

'ஓதுவ தொழியேல்' என்பது ஔவையார் அருளிய கோதகல் கட்டுரை. இதனை மறவாது கடைப்பிடித் தொழுகும் தமிழறிஞர் பெருமக்களுள் என் சிந்தைவிட்டகாலச் செந்தமிழ்ச் செல்வருள் ஒருவர், திரு. மு. வை. அரவிந்தன். ஏற்கனவே 'உரையாசிரியர்கள்' என்னும் சீரிய ஆராய்ச்சி நூலை மிக முயன்று எழுதி வெளியிட்டு அறிஞர்களின் பாராட்டையும், தமிழக அரசின் பரிசையும் பெற்ற சிறப்பை உடையவர் இவர்.

'இலக்கியவானில் — சிந்தாமணி' என்னும் இச்சீரிய ஆராய்ச்சி நூல் காய்தல் உவத்தல் அகற்றி இயற்றப் பட்டுள்ளமை, இவரது இலக்கிய இலக்கண நுண்மாண் நுழை புலத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் இலங்குகிறது. இஃது உருவத்தாற் சிறியதெனினும் பயனால் மிகப்பெரியது.

இந்நூலை யான் கருத்தூன்றிப் படித்துக் கழிபேருவகை எய்தினேன். இலக்கியவானிற் சிந்தாமணியின் எழிலை விளக்குகின்ற முழுமதியாய் விளங்கும் இவ்வாராய்ச்சி நூல் தமிழாராய்ச்சியில் ஈடுபடுவோர்க்குப் பெரிதும் பயன்படும். மாணாக்கர்கள் தமிழ்க் காப்பியங்களை எம்முறையில் ஆராய வேண்டும் என்பதற்கு நல்வழி காட்டுவதாய் அமைந்துள்ளதை இந்நூலை ஆழ்ந்து கற்பார் அனைவரும் அறிந்து போற்றுவர்.

இந்நூலைத் தந்த ஆராய்ச்சியாளர் அரவிந்தனும், இதனை அச்சிட்டுத் தமிழுலகில் உலாவரச் செய்த தமிழ்நாட்டு ஜைனக் கழகத்தினரும் பெரும் பாராட்டுக்குரியவர்.

'வாழ்க, இவர்தம் தமிழ்த் தொண்டு!' என வாழ்த்துகிறேன்.

சென்னை - 7
14-2-75.

**மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை**

# அணிந்துரை

டாக்டர் ந. சஞ்சீவி
தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்

பேராசிரியர் புலவர் மு. வை. அரவிந்தன், எம். ஓ. எல். அவர்களின் 'இலக்கிய வானில்—சிந்தாமணி' என்னும் இனிய திறனாய்வு நூலைப் பல்வேறு கடமைகளுக்கு இடையில் ஒரே ஒரு முறை முடிந்தவரை ஊன்றிப் படித்தேன். ஆம்; படித்தேன் குடித்தேன்!

பேராசிரியர் அரவிந்தனின் 'இலக்கிய வானில்—சிந்தாமணி' இலக்கியத் திறனாய்வு வானில் ஒரு சிந்தாமணி என்று போற்றத் தக்கது

பேராசிரியர் அரவிந்தன் கலை பயில் தெளிவும், கட்டுரை வன்மையும் நிறைந்தவர் என்பது தமிழுலகு அறிந்த உண்மை. அவருடைய பழுத்த புலமை, அவருடைய பாரித்த இளமைக்கு வியப்பும் விழுப்பமும் செய்வதாகும்.

செந்தமிழ்க் காப்பியங்களுள் விருத்தப்பாவில் முதலாவதும் முதன்மையானதும் சிந்தாமணி. இளமைத் தமிழுக்கு விருத்தப்பாவால் திருத்தமும் தெளிவும் சேர்த்தவர் திருத்தக்க தேவர். திருத்தக்க தேவர் தந்த பெருந்தகுதியால், தமிழ் மொழியில் பெருகிவளர்ந்தன விருத்தப் பெருங்காப்பியங்கள். ''கல்வி சிறந்த தமிழ்நாடு'' என்ற பெரும் புகழைக் கவிச் சக்கரவர்த்தி கம்பர் வாயிலாகத் தமிழ்நாடு மணந்து கொள்ளத் தனிவழி செய்தவர் 'நரிவிருத்தம்' பாடிய நற்றுறவி திருத்தக்க தேவர். வண்ணமும் வடிவும் எண்ணுவதற்குச் செய்யும் வளமும் வளர்ச்சியும் இமயப் பெருமை படைத்த தன்றோ! அவ் வகையில்தான் விருத்தம் கண்ட திருத்தமும் பொருத்தமும், அருத்தம் வளரவும் அதன் ஆதரவு பெரிது அல்லவா!

இந்தக் காலம் எளிமையின் சொந்தக் காலம். எளிமையின் வலிமை வலிமையையும் எளிமையாக்கும் காலம். இந்தக் காலத்தின் வேறு பெயர்கள் மக்களாட்சி, சமதர்மம்.

மனித குலத்தின் வளர்ச்சி நெறியில் மாபெரும் குறிக்கோளே எளிமை ஆக்குதலும் ஆகுதலும் தான் போலும். காரல்மார்க்ஸ் நமக்குத் தெரிந்து கருவுற்ற காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே 'எல்லார்க்கும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தக்' கனவு கண்ட கவிச்சக்கரவர்த்தியே, சக்கரவர்த்தி திருமகன் சரித்திரத்தைக் காப்பியம் ஆக்கியவன் அன்றோ! அந்தப் 'பாவி' (=பாடலோன்!) கண்ட கனவு பலிக்காமல் போகுமோ!

ஓர் அகப்பை கொடுத்தே கம்பனுக்குப் பன்னீராயிரம் பாடல் பாடச் செய்த சிந்தாமணியின் சிறப்பைப் பேராசிரியர் அரவிந்தன் இந்த நூலில் பிழிந்து கொடுத்துள்ளார். இந்த நூலைப் படித்தவர்கள் மூல நூலாகிய சிந்தாமணியைப் படிப்பார்களோ என்பதுதான் எனக்குள்ள ஐயம்/அச்சம்! காரணம், அத்தகைய மன நிறைவை அள்ளி வழங்கும் வகையில் வள்ளல் அரவிந்தன் தன்னுடைய திறனாய்வுத் தெளிவுத் தமிழை மழையெனப் பொழிந்துள்ளார். இந்த வறட்சிக் காலத்தில் இந்த மழை இன்ப ஊற்று அன்றோ?

1. வல்லான் வகுத்த வாய்க்கால் 2 தலைமைக் காப்பியம் 3. தமிழ் மணம் 4. காப்பிய இலக்கணமும் சிந்தாமணியும் 5. காப்பிய உலகம் 6 காப்பியத்தலைவன் 7 காப்பியத் திறன் 8. சொல் விருந்து 9. ஓசை தரும் இன்பம் 10. உவமை நயம் 11. ஓவியக் காட்சிகள்; 12. நோக்கு; 13. கருத்துக்கனிகள்; 14. குறைகள் உண்டா? 15. துறவி தந்த மணநூல்; 16. காலத்தின் அடிச்சுவடு; 17. புனையா ஓவியம்; 18. மறைந்த மணிகள்; 19. இடைச் செருகல்; 20. சிந்தாமணி தந்த ஒளி; 21. காலத்தை வென்ற கலைச் செல்வம்; 22. நச்சினார்க்கினியர் பார்வையில் சிந்தாமணி என்னும் இருபத்திரண்டு தலைப்புகளில் 116 பக்கத்தில் சிந்தாமணி மூலத்தையும் நச்சினார்க்கினியர் உரையையும் முற் சொன்னவாறு பிழிந்து தந்துள்ள பெருமையே திரு. அரவிந்தரின் தனிச் சிறப்பு!

ஆசிரியர் திரு அரவிந்தன் அவர்கள் இந்நூலில் இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகள் பலவற்றுக்கும் எடுத்துக் காட்டாய் விளங்கும் சிந்தாமணிப் பகுதிகளைச் சிறப்புற

எடுத்துக் காட்டியிருப்பது, தமிழிலக்கியத்தில் இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகளைக் காண விரும்புவோர்க்குப் பேரின்பம் பயப்பதாகும். இந்நூலின் தொடக்கத்தில் ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ள அயலக அறிஞர் பலரின் மேற்கோள்கள் எந்த நூலில் எந்தவிடத்தில் இடம் பெற்றுள்ளன என்பதையும் சுட்டியிருப்பதால் நன்றாக இருக்கும். இந்நூலைப் படிப்பார் எவருக்கும் பனம்பாரனார் பாயிரம் முதல் கவிமணியின் கவிதைகள் வரை அரவிந்தனார் ஆழ்ந்து படித்திருக்கும் படிப்பின் அருமை புலனாகும். அந்த அருமை அவர் ஏற்றவிடங்களில் ஏற்ற கருத்துக்களை எடுத்துக்காட்டுவதால் பெருமை பெறுவது குறிக்கத் தக்கது. கவிதை இலக்கியங்களில் மெத்த ஈடுபாடு கொண்ட ஆசிரியர் புதுமை இலக்கியங்களிலும் வேகமான வேட்கை கொண்டவர் என்ற இக்காலத் திறனாய்வாளர்களின் கருத்துக்கேற்ப நாவல்களைப் பல இடங்களில் 'உரைநடைக் காப்பியங்கள்' என்று அவர் ஓதுவதால் விளங்கும். 'குறைகளுண்டா?' என்ற தலைப்பில் ஆசிரியர் எழுதியுள்ள எழுத்தும், அவர்தம் பண்பையும் படிப்பையும் காட்டுவன. 'சிந்தாமணி தந்த ஒளி' என்ற தலைப்பு, 'சிந்தாமணியின் செல்வாக்கு' என்று மாற்றம் பெறுதல் நன்று.

முடிவாகவும் முழுமனத்தோடும் மொழியத்தக்கது, தமிழ் நாட்டுச் சமணர்களின் தலைவர் எனத்திகழும் ஜீவபந்து ஸ்ரீபால் அவர்கள், உயிர் இரக்கத்திற்காக இந்தியக் குடியரசுத் தலைவரிடமிருந்து பட்டயமும் பாராட்டும் பெறும் இந்த ஆண்டில், அஃறிணை உயிர்கள்பால் வைக்கும் அருளைப் பல்லாற்றானும் போற்றும்சிந்தாமணிக்கு இத்தகைய ஒரு சிறந்த கைவிளக்குப் போன்ற கையேடு வெளிவருதல் பொருத்தம் என்பதேயாகும்.

'இலக்கிய வானில்—சிந்தாமணி' போல், தமிழிலக்கிய வானில் சுடர்விடும் பிற மீன்கள் பற்றியும் அரவிந்தரின் நூல்கள் வெளிவரும் நாள் எந்நாளோ?

சென்னை
12—3—75

ந. சஞ்சீவி

# மதிப்புரை

மு. சண்முகம் பிள்ளை
(தமிழ் விரிவுரையாளர், திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி, சென்னைப் பல்கலைக் கழகம்.)

தமிழ்க் காப்பிய உலகில் காப்பியத்தின் போக்கிலே புதுமை கண்ட பெருங்காவியம் திருத்தக்கதேவர் தந்த சீவக சிந்தாமணி; ஐம்பெருங் காப்பியங்களுள் முதன்மையாய் வைத்துப் போற்றப்படுவது. விருத்த யாப்பில் தோன்றிய இம் முதற்காப்பியம் பின்னர் எழுந்த காவியங்களுக்கெல்லாம் வழிகாட்டிய பெருமையும் உடையதாம்.

சீவகசிந்தாமணிக் காவியத்தைச் சுவடிகளில் சுவைத்து, நச்சினார்க்கினியர் உரையுடன் முழுமையாய்த் தமிழுலகிற்குத் தந்த (1887) பெருமை டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களைச் சாரும். இதன் ஆய்வில் ஈடுபட்டிருந்தபோது தாம் அடைந்த அனுபவ நிலையை ஐயர் அவர்கள்,

> "சிந்தாமணியிலும் அதன் உரையிலும் மூழ்கியிருந்த எனக்கு மற்ற வேலைகளில் கவனம் செல்லவே இல்லை. அந்த நூலின் புதுமைச் சுவையை நுகர்ந்து இன்புற்றேன். அதனைப் படிக்கப் படிக்கப் பிற்காலத்து நூல்கள் எல்லாம் எவ்வளவு தூரம் அந்தக் காவியத்திலிருந்து காவிய மரபுகளை அறிந்து அமைத்துக் கொண்டுள்ளன வென்பது நன்கு விளங்கியது"

என்று 'என் சரித்திரம்' நூலில் (பக். 758) எழுதியுள்ளார்கள். இவர்களுடைய பதிப்பினால்தான் சீவகசிந்தாமணி தமிழுலகிற்கு அறிமுகமாகியது.

சிந்தாமணி தன்மையாற் பெயர் பெற்றது என்பது மயிலை நாதர், 'தன்மையாற் பெயர் பெற்றன சிந்தாமணி, சூளாமணி, நன்னூல் முதலாயின' (நன். சூ. 48 உரை) என்று கூறுவதனால் தெரியவரும். தன் தனித்தன்மையால் சிறந்து விளங்கும் இதனை மேன்மேலும் ஆய்ந்து பிற்பதிப்புகளை (1907, 1922) ஐயரவர்கள் செம்மைப்படுத்தி வந்தார்கள். எனவே, சிந்தாமணிக் காவியத்தில் திருத்தங்கள் முற்றுப்பெருமை விளங்கும்.

1942-ல் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களால் பரிசோதிக்கப்பட்டு சைவசித்தாந்த மகா சமாஜத்தின் வழி மேலும் திருத்தங்களுடன் மூலம்பதிப்பு வெளிவந்தது. திரு. புலவர் அரசு என்பவரும், பெருமழைப் புலவர் திரு. பொ. வே. சோமசுந்தரனார் என்பவரும் கூட்டாக எழுதிய புத்துரை 1959-ல் வெளிவந்துள்ளது. மேலும், சிந்தாமணிச் சுருக்கமும் விளக்கக் கட்டுரைகளும் சொற்பொழிவு மலர்களும் ஆக்கி இந்நூலைக் கற்கும் ஆர்வத்தைப் பலர் ஊட்டி வந்துள்ளனர். இவ்வாறாகச் சிந்தாமணிக் காவியம் சிறப்புற விளங்க உழைத்து வந்தோர் காலந்தோறும் பலராவர்.

இந்தத் தனிப்பெருங் காப்பியத்தின் அருமை பெருமைகளை அழகுற எடுத்துவிளக்கும் சொற்சித்திரமாய் அமைந்துள்ளது, **புலவர் மு வை. அரவிந்தன்** அவர்கள் எழுதிய **'இலக்கியவானில் சிந்தாமணி'** என்னும் இந்நூல்.

அளவிற் சிறியதாயினும் இந்நூல் பொருளமைப்பிலும் பொருள்களைத் தொகுத்தும் வகுத்தும் விளக்கியுரைக்கும் பான்மையிலும் சிறந்து விளங்குகிறது. சீவகசிந்தாமணிக் காவியத்தைக் கற்று மகிழவேண்டும் என்னும் அவாவினை எழுப்பவல்லதாய், இந்நூலுக்குரிய ஓர் அறிமுக நூலாய் இது காணப்படுகிறது. சிந்தாமணிக் கடலுள் ஆழ்ந்து அரும் பெரும் முத்துக்களைத் தெரிந்தெடுத்து மாலையாக்கி, 'இலக்கிய வானில் சிந்தாமணி'யை ஓர் எழில்வள ஞாயிறாய் இலங்கும் வண்ணம் தந்துள்ள ஆசிரியரின் திறம் பாராட்டிற்குரியது.

புலவர் மு. வை. அரவிந்தன் ஆக்கிய இந்நூல் இருபத்திரண்டு இயல்கள் கொண்டுள்ளது. இவற்றுள் முதல் ஐந்து இயல்களில் காப்பியத்தின் பொது இயல்புகளை விளக்கிக் கூறி, சிந்தாமணிக்குரிய இடம் இத்தகையது என்று ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். இறுதியில் உள்ள ஐந்து இயல்களில் சிந்தாமணிக் காப்பியப் பாடல்களுள் சில மறைந்தமையையும் இடைச்செருகல்கள் பல வந்தேறியமையையும் எடுத்துரைத்தும், இக்காவியம் பின் வந்த காவியங்களில் ஒளிவீசித் திகழ்தலை விளக்கியும், நச்சினார்க்கினியரின் உரைவிளக்கத்தால் இக்காவியம் புத்தொளி பெற்றுத் திகழ்தலையும் விளக்கமாய்த் தந்துள்ளார்.

இடையில் உள்ள 12 இயல்களிலும் காவியத்தின் உட்பொருள்களில் ஊடுருவிச் சென்று பல்வேறு கோணங்களிலும் இப்பெருங்காப்பியத்தின் பெருமையை ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார். 'காப்பியத் தலைவன்' என்ற பகுதியில் இக்காப்பியத் தலைவனாகிய சீவகன் தன்னேரில்லாத் தலைவனாய் விளங்குதலைக் காண்கிறோம். 'துறவி தந்த மணநூல்' என்பதில் திருத்தக்கதேவரின் உள்ளம் எத்தகையது என்பது தெற்றென விளங்குகின்றது. 'காப்பியத் திறன்' முதல் 'புனையா ஓவியம்' வரையில் இக்காவியத்தின் சொல்லழகு, பொருளழகு, கற்பனை, வருணனை முதலிய பலவற்றையும் பாங்குற விளக்கக் காணலாம்.

புலவர் அரவிந்தன் அவர்கள் குணங்களை மட்டுமே ஒருதலையாக இந்நூலுள் சொல்லிச் செல்லவில்லை. இக்காவியம் குறித்துச் சிலர் கூறும் குறைகளையும் எடுத்துக்காட்டி, அவையெல்லாம் உண்மையில் குறைகள்தாமா என்பதனையும் 'குறைகள் உண்டா?' என்ற பகுதியில் அலசி ஆராய்ந்துள்ளார்.

'குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்'

என்னும் வள்ளுவர் வழிமுறைப்படி ஆய்ந்து கூறும் ஆசிரியரின் நடுநிலை உள்ளம் இந்த இயலில் நன்கு புலனாகும்.

'இந்நூலில் இருப்பதாகக் கூறப்படும் குறைகளும் தேவர் மீது சுமத்தப்படும் குற்றங்களும் நடுநிலையான ஆராய்ச்சியால் மறைந்துவிடும். காலத்தை வென்ற கலைச் செல்வமாக இக்காப்பியம் என்றும் நின்று நிலவும்'

என ஆசிரியர் தரும் நிறைவுரை அவர் இந்நூலுள் உரைத்த உரைகளுக்கு முத்தாப்பாய் உள்ளது; ஆய்வாளரின் சிந்தனைக்கு விருந்தாகவும் அமைகிறது.

'சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல்' என்னும் முறையில் சீவகசிந்தாமணிக் காப்பிய நலங்களை யாவரும் உணர இந்நூல் ஒரு செவ்விய கண்ணாடியாய்த் திகழ்கிறது எனின் மிகையாகாது. இதனைப் போற்றி அச்சில் வெளியிட்ட தமிழ்நாடு ஜைன சங்கத்தாரும் பாராட்டுக்குரியவர்களாவர்.

சீவகசிந்தாமணிப் பெருங்காப்பியம் போல 'இலக்கிய வானில் சிந்தாமணியும்' தமிழகத்தில் உலாவந்து ஏற்றம் பெற்று விளங்குவதாக.

சென்னை - 5
27-8-75

மு. சண்முகம் பிள்ளை

# பொருளடக்கம்


பக்கம்

காப்பியப்பண்பு

1. வல்லான் வகுத்த வாய்க்கால் .... 5
2. தலைமைக் காப்பியம் .... 8
3. தமிழ்மணம் .... 12
4. காப்பிய இலக்கணமும் சிந்தாமணியும் .... 14
5. காப்பிய உலகம் .... 26
6. காப்பியத் தலைவன் .... 30
7. காப்பியத் திறன் .... 35

இலக்கியச் சுவை

8. சொல் விருந்து .... 38
9. ஓசை தரும் இன்பம் .... 39
10. உவமை நயம் .... 44
11. ஓவியக் காட்சிகள் .... 51
12. நோக்கு .... 54
13. கருத்துக் கனிகள் .... 63

## ஆராய்ச்சி


14. குறைகள் உண்டா .... 65

15. துறவி தந்த மணநூல் .... 70

16. காலத்தின் அடிச்சுவடு .... 78

17. புனையா ஓவியம் .... 82

18. மறைந்த மணிகள் .... 85

19. இடைச் செருகல் .... 87

20. சிந்தாமணி தந்த ஒளி .... 88

21. காலத்தை வென்ற கலைச் செல்வம் .... 101


## உரைத் திறன்


22. நச்சினார்க்கினியர் பார்வையில் — சிந்தாமணி .... 104

# 1. வல்லான் வகுத்த வாய்க்கால்

மனிதன் கைகளுக்கு உள்ள ஆற்றல் மிகப் பெரியது. இன்றைய உலகின் முன்னேற்றத்திற்கு மனிதனின் கைகளே பெருந்துணை புரிந்துள்ளன. உலகத்தை மாற்றி அமைத்துப் பல்வேறு பொருள்களை மனிதனின் கைவண்ணமே படைத்துள்ளது. கடல்போல விரிந்து கிடக்கும் கலைகள் எல்லாம் மனிதன் கைகளின் ஆற்றலால் பிறந்தவை. மனிதனின் கைத்திறன் மலையைப் பிளந்திருக்கின்றது; கடலைத் தூர்த்திருக்கின்றது; விண்ணை அளந்திருக்கின்றது; மண்ணைப் பண்படுத்திப் பயன் கண்டிருக்கிறது. கையில்லாத மனிதர் வாழும் உலகத்தைக் கற்பனை செய்துகூடக் காண முடியவில்லை!

இத்தகைய ஆற்றல் வாய்ந்த மனிதனின் கைகளில் சில, காலத்தின் போக்கை மாற்றி அமைத்திருக்கின்றன. அத்தகைய பெருமை வாய்ந்த கைகளை மக்கள் என்றும் மறப்பதில்லை. காலத்தின் போக்கை மாற்றிய ஆற்றல் வாய்ந்த பெருங் கைகள் எல்லாத் துறைகளிலும் உண்டு. கலைத்துறையில் அந்தக் கைகளுக்குப் பெருஞ் சிறப்பு உண்டு. இலக்கியக் கலையின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் துணைபுரிந்து, காலப்போக்கை மாற்றிய கைகளை இலக்கிய ஆராய்ச்சியாளர் என்றும் போற்றி மதிக்கின்றனர்.

தமிழ் இலக்கிய உலகில் காப்பியத்தின் போக்கை மாற்றியமைத்துப் புதுவழி கண்ட பெருமை, திருத்தக்க தேவரின் கைகளுக்கு உண்டு. தேவருக்குப் பின் தமிழ்க் காப்பியங்

களின் போக்கு மாறியது. அவர் வகுத்த புதுவழியை அவர்க்குப் பின்வந்த புலவர் பெருமக்கள் எல்லோரும் பின் பற்றினர். தமக்கு முன் இருந்த இலக்கிய மரபை மாற்றிப் புது மரபை உண்டாக்கிய பெருமை தேவருக்கு உரியது.

தேவருக்கு முன் இருந்த புலவர்கள் ஆசிரியப் பாவால காப்பியம் இயற்றினர். தேவரே முதன் முதலில் விருத்தப் பாவால் காப்பியம் இயற்றிப் புரட்சி செய்தார். ஒரே வகையான விருத்தப் பாக்களை அவர் தம் நூல் முழுவதும் அமைத்துவிடவும் இல்லை. பொருளுக்கேற்றபடி வெவ்வேறு சந்தங்களை அமைத்துக்கொண்டு பலவகையான விருத்தங்களைப் பாடிப் பிறர்க்கு வழிகாட்டியாய் விளங்கினர். அவர் அமைத்த வழியே பிற்காலப் புலவர்கள் அனைவரும் பின்பற்றிய பெரு வழியாயிற்று. அவர் மேற்கொண்ட முறையே பின்னர் மரபாயிற்று.

காப்பியத்தைத் தொடங்கும் வகையிலும் தேவர் தமக்கு முன்னிருந்த காப்பியங்களைப் பின்பற்றுமல் புதுமையை மேற் கொண்டார். தாம் வழிபடும் தெய்வத்தை வாழ்த்திப் பின் அவையடக்கம் கூறி நூலைத் தொடங்கியுள்ளார். இம்முறை சிலப்பதிகாரத்திலோ, மணிமேகலையிலோ காணப்படவில்லை. தேவர் மேற்கொண்ட இப்புது முறையைப் பிற்காலத்தில், காப்பியமும் புராணமும் இயற்றிய புலவர் அனைவரும் பின் பற்றினர்.

கதையைத் திடீரென்று தொடங்காமல் மேலும் ஒரு புதுமையை அமைத்துள்ளார். கார்முகில் மழை பொழிய, மலை களில் பொங்கும் அருவி மருத நிலத்தில் பாய்ந்து செழிப்பாக்க, நன்செய்களில் உழவுத் தொழில் சிறந்து விளங்க, நெல்லும் கரும்பும் பிறவும் பயிராகும் காட்சியைப் பாடியுள்ளார். பின்னர், நாட்டின் மற்ற வளங்களைப் பாடியுள்ளார். நகரத்தின் சிறப் பைப் பாடி, மன்னன் வாழும் கோயிலின் சிறப்பைப் பாடி யுள்ளார். அவற்றிற்குப் பின் மன்னன் வரலாறு பாடிக்

காப்பியத் தலைவன் பிறப்பைப் பாடியுள்ளார். தேவருக்குப் பின்வந்த புலவர்கள் இதே முறையைப் பின்பற்றினர். தோலா மொழித் தேவர், சேக்கிழார், கம்பர் ஆகிய புலவர்கள் ஆற்று வளம், நாட்டுவளம், நகர்ச்சிறப்பு—ஆகியவற்றைத் தம் நூலில் தனித்தனிப் பகுதியாக அமைத்துக்கொண்டு விளக்கமாகப் பாடினர்.

இவ்வாறு காப்பியத்தின் போக்கை மாற்றியமைத்து வெற்றி கண்ட பெருமை திருத்தக்க தேவருக்கு உண்டு. அவர் வகுத்த புதுவழி அவரோடு நின்றுவிடாமல் புலவர் பெருமக்கள் பின் பற்றும் பெருவழியாய் அமைந்து, தேவருக்குப் பெருமை தருகின்றது. காப்பியம் இவ்வாறு அமைய வேண்டும் என்று அமைத்துக் காட்டி, தமிழ்க் காப்பிய உலகைத் தொடங்கி வைத்த பெருமை தேவருக்கு உண்டு. காப்பியப் புலவர் பலருக்கும் தேவரே வழிகாட்டியாய் அமைகின்றார்.

இத்தகைய சிறப்பியல்புகள் பல வாய்ந்த திருத்தக்க தேவரை வீரமாமுனிவர், தமிழ்க் கவிஞர்களுள் அவர் ஒரு கோமகனாய் விளங்குவதாய்ப் போற்றியுரைக்கின்றார்.[1] கவிஞர் சுரதா,

> ‘‘முதலடியைத் தேனாக்கி அடுத்த டுத்து
> முளைக்கின்ற தொடரடியை அமுத மாக்கி
> விதவிதமாய்ச் சந்தநய நட்புண் டாக்கி
> வியப்புமிகு உவமைகளால் புதுமை தேக்கிப்
> பதமுடைய பாவினமாம் விருத்த மாக்கிப்
> பதின்மூன்றி லம்பகமாய் வகுத்துத் தூக்கி
> இதயமழை இறைவன்பால் பதிய வைத்தோன்
> இன்பச் சிந்தாமணிநூல் இயற்ற லானன்’’[2]

என்று திருத்தக்க தேவரின் பெருமைகளைப் பாடியுள்ளார்.

---

1. Thiru thakka devar is a prince among Tamil poets
—Father Beeshi

2. தேன்மழை—பக்கம் 64

நச்சினார்க் கினியரின் உரைச்சிறப்புப் பாயிரம்,

''தென் கடல் மாநிலம்
வந்து ஆதரிப்ப வண்பெரு வஞ்சிப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருத்தகு முனிவன்''

என்று போற்றி யுரைக்கின்றது.

# 2. தலைமைக் காப்பியம்

ஒரு கலைஞர் புதுவழியைக் கண்டு புதுமை ஒன்றைப் படைத்தபின் அவரைப் பின்பற்றுவோர் அவரினும் சிறந்து விளங்கித் தம் படைப்பை உலக அரங்கில் பலர் அறியக் காட்டி நிற்பதுண்டு. தொடங்கி வைத்தவர் பெயர் வரலாற்றின் ஏடு களில் மறைந்து கிடக்கும் நிலை ஏற்படுவதுண்டு. முதலில் தோன்றிய புதுப்பொருளுக்கு ஏற்படாத வரவேற்பு, அதைக் கண்டு செய்யப்பட்ட பொருளுக்கு ஏற்படுவதுண்டு. இலக்கிய உலகத்திலும் இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு இடம் உண்டு.

சீவக சிந்தாமணி மேலே சொன்னவற்றிற்கு விதி விலக் காக உள்ளது. அது முதற்காப்பியம் என்ற பெயர் தாங்கி நிற்பதோடு தலைமையும் பெற்றுத் திகழுகின்றது. தேவர் கட்டிய காப்பியப் பெருங்கோயிலைப் பிற்காலப் புலவர்கள் கட்டிய காப்பிய மாளிகைகள் மறைத்துவிடவில்லை. சிந்தாமணிக்குப் பின் பல காப்பியங்களும் புராணங்களும் தோன்றியும் சிந்தாமணி புலவர்களின் நெஞ்சத்தில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளது. காலந்தோறும் மக்கள் அக்காப்பியத்தைக் கற்று இன்புற்றே வந்திருக்கின்றனர். அக் காப்பியம் தோன்றிய நாள் முதல் இன்றுவரை பல கைகள் மாறி மாறி இன்று நம்

கைக்கு வந்திருக்கின்றது. நாமும் அக் காப்பியச் செல்வத்தை வருங்கால மக்களுக்கு வழங்கிச் செல்வோம். வருங்காலத்தில் உரைநடைக் காப்பியங்கள் (நாவல்கள்) பல தோன்றினும் சிந்தாமணியின் ஒளி குன்றாமல் இருக்கும். சிந்தாமணி முதற் காப்பியமாய்—தலைமைக் காப்பியமாய் என்றும் நின்று நிலவும்.

சீவக சிந்தாமணியைத் தமிழ் இலக்கிய உலகிற்குக் கொண்டுவந்து அறிமுகப்படுத்திய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் அக் காப்பியத்தின் பெருமையைப் பின்வருமாறு போற்றுகின்றார்கள் :

''ஜைனர்களுடனும் ஜைன நூல்களுடனும் இடைவிடாது பழகியபோது, சிந்தாமணியின் அருமை வரவர எனக்கு நன்கு புலப்படலாயிற்று. செந்தமிழ்க் காவியங்களுக்கு எல்லாம் அதுவே உரையாணி என்பதை அறிந்து கொண்டேன். அதனுடைய போக்கிலே உள்ள கம்பீரமும் சொல்லாட்சிச் சிறப்பும் என் மனத்தைக் கவர்ந்தன'' *

நச்சினார்க் கினியரின் உரைச் சிறப்புப் பாயிரம்,

''வையம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை பொதிந்த செந்தமிழ்ச் சிந்தாமணி''

என்று புகழ்கின்றது.

சிந்தாமணிக் காப்பியம், கிரேக்கப் பெரும் புலவர் ஹோமரின் அரும் பெரும் படைப்பாய் விளங்கும் ஒதிஸி (Odyssey) என்னும் காப்பியத்துடன் ஒப்பிட்டு நோக்கும் வகையில் பல ஒற்றுமைகளையுடையதாகும். இவ்விரு காப்பியங்களின் தலைவர்களும் தன்னிகர் இல்லாதவர்கள். இவர்கள் தம் வாழ்நாளில் பலவேறு நாடுகளைக் கண்டனர். பலவேறு நாகரிகமுடைய மக்களுடன் நெருங்கிப் பழகினர். பல வகையான இன்பதுன்பங்களுக்கு ஆட்பட்டனர். கடுமையான சோதனை

* (என் சரித்திரம் (1958)—பக்கம் 341, 342)

களில் வெற்றிபெற்று வாகை சூடினர். பகைவரும் போற்று மாறு வீரவாழ்க்கை நடத்தினர். தம் வாழ்க்கையைச் சாதனைக்கு உரிய களமாகக் கொண்டனர். இயற்கையே தமக்கு எதிராகப் போர்தொடுத்தபோதும் சிறிதும் அஞ்சாது நின்று, "எதுவரினும் வருக!" என்று நெஞ்சத்தை நிமிர்த்தி இன்முகத்தோடு வரவேற்ற மாவீரர்களாய் உள்ளனர். இறுதியில் எண்ணிய எண்ணியாங்கு எய்தி நிறைவு பெற்று உயர்ந்து முழு மனிதர்களாய் விளங்கினர். இத்தகைய ஒற்றுமைகள் பல கூறலாம். டாக்டர் ஜி. யு. போப் அவர்கள் சிந்தாமணியை ஹோமரின் காப்பியங்களோடு ஒப்பிட்டுப் பின் வருமாறு கூறுகின்றார்கள்:

"சீவக சிந்தாமணி தமிழில் வாழும் தலைசிறந்த இலக்கியமாகும். இது, காதலைப் பாடும் உணர்ச்சி மிகுந்த பெருங் காப்பியம். ஹோமர் படைத்துள்ள இலியத், ஒதிஸி ஆகிய பெருங்காப்பியத்திற்கு நிகரானது. உலகப் பெருங் காப்பியங் களில் இதுவும் ஒன்று" *

பிரெஞ்சு மொழியறிஞர் ஜூலியன் வின்ஸன், "தமிழ்க் காவியங்களில் மிகப் புகழ் வாய்ந்தது சீவக சிந்தாமணி. அந் நூலில், காவிய நயம் இல்லாமல் இருந்தால் என்றோ மறைந் திருக்கும். அக்காவியம் புலவர்களின் உள்ளத்தைக் கவரும் பேராற்றல் வாய்ந்தது" என்று புகழ்ந்துள்ளார்.

செக் மொழி அறிஞர் டாக்டர் கமில் சுவலபெல், "விருத்தப் பாவைக் கையாளுவதிலும் உருவகம் முதலிய நயங்களிலும்

---

* Jeevaka Chinthamani is the greatest existing Tamil literature Monument. The greatest romantic, which is at once the Iliad and Odessey of the Tamil language, is one of the great epics of the world."

—Dr. G. U. Pope.

தமிழிலக்கிய வரலாற்றில் திருத்தக்க தேவர் ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்குகின்றார்'' என்று பாராட்டியுள்ளார்.

மறைமலையடிகள் தாம் சைவ சமயத்தைச் சேர்ந்தவராய் இருந்தும், சிந்தாமணியைக் கற்றுத் திளைத்தார். சிந்தாமணி தந்த இன்பச் சுவை அவரை ஆட்கொண்டது. தம் மகளுக்குச் சிந்தாமணி என்றே பெயர் சூட்டி மகிழ்ந்தார். அடிகளாரின் மைந்தர் இச் செய்தியைப் பின் வருமாறு கூறுகின்றார்கள் :

''அடிகள் தம் பதினெட்டாம் அகவையில் 'சிந்தாமணி' என்ற மகளுக்குத் தந்தையாயினர். சீவக சிந்தாமணி என்பது செந்தமிழின் முதற்பேரிலக்கியம். சமண சமயக் காவியம். அந் நூலில் அடிகளார்க்கு இருந்த ஆழ்ந்த சுவையுணர்ச்சியின் வெளியுருவம்தான் சிந்தாமணி என்ற பெண்ணின் பெயராக அமைந்தது. இதனால் அடிகளின் இலக்கியப்பித்து நெஞ்சு நன்குவெளியாகின்றது'' *

கவிமணி அவர்கள், ''தலைசிறந்த பெருங்காப்பியம் சீவக சிந்தாமணி. தமிழிலக்கியத்தில் தேர்ச்சிபெற விரும்புவோர் எவரும் இதனைக் கற்காமல் இருக்க முடியாது'' என்று போற்றியுரைக்கின்றார்.

தமிழறிஞர் ச. த. சற்குணர் அவர்கள் சிந்தாமணியின் சிறப்பைப் பின்வருமாறு போற்றியுரைக்கின்றார் :

''கொடுங்கோல் மன்னன் ஒருவன் இந்நாட்டைக் கைப்பற்றி, இந் நாட்டிலுள்ள நூல்களை எல்லாம் எரியில் இட்டு அழிக்கக் கருதி ஒருங்கு தொகுத்து, தீ வைப்பதற்கு முன் என்னை அழைத்து, 'இந்நூல் தொகுதியிலிருந்து நீ விரும்பும்

---

* மறை திருநாவுக்கரசு.
மறைமலையடிகள் வரலாறு (1959)—பக்கம்–7.

ஒரு நூலை மட்டும் எடுத்துக் கொள்ளலாம்!' என்று கட்டளை இடுவாராயின், யான் விரைந்து ஓடிச் சீவக சிந்தாமணியினை எடுத்துக் கொள்வேன்—அதைப் போன்று என் மனத்தைக் கவர்ந்த நூல் பிறிது இன்மையின்!''

இவ்வாறு, சிந்தாமணிக் காப்பியத்தைக் கற்றவர் அனைவரும் போற்றிக் கொண்டாடி வருகின்றனர். வருங்காலத்திலும் இந்நூலைக் கற்றுப் போற்றுவோர் பலர் தோன்றுவர்.

# 3. தமிழ் மணம்

''சிந்தாமணிக் கதையைப் பிராகிருத நூல்களிலும் வடமொழி இலக்கியங்களிலும் இருந்து தேவர் எடுத்துக் காப்பியம் இயற்றினார். கதையில் வரும் மக்களின் பெயரும், பிறமொழிப் பெயர்களாகவே உள்ளன. தேவர் பாடியுள்ள விருத்தப்பாக்கள் வடமொழியிலிருந்து வந்தவை. அத்தகைய காப்பியத்திலா தமிழ் மணம் கமழும்?''—என்ற ஐயம், சிந்தாமணிக் காப்பியத்தை ஒருமுறை மேம்போக்காகக் கற்றாலும் அகன்று விடுகின்றது. அக்காப்பியத்தில் தொட்டவிடம் எல்லாம் தமிழ் மணம் கமழ்கின்றது. தமிழ் மக்களின் நெஞ்சத் துடிப்புத் தெளிவாகக் கேட்கின்றது.

**தமிழ் நெஞ்சம்:** *சீவகன் கதையை வடமொழியில் கூறும் நூல்கள் பலவற்றுள் ஒன்று, அரிச்சந்திர கவி என்பவர் இயற்றிய 'ஜீவந்தர சம்பு' என்பது. அதில் சீவகன் கவர்ந்து சென்ற ஆனிரையை, வேடரைக் கொன்று மீட்டதாகக் கூறப்பட்டுள்ளதாம்! ஆனால் தேவர் அவ்வாறு கதையை அமைக்காமல் சீவகனது 'கருணை மறம்' வெளிப்படுமாறு அக்கதையை மாற்றி அமைத்துள்ளார். கருணை மறம் தமிழரின் தனிப் பெரும் பண்பு என்பதைத் தேவர் மறந்து விடுவாரா?*

கதையில் வரும் மக்களின் பிறமொழிப் பெயர்களைத் தேவர் தமிழ் ஒலி முறைக்கேற்ப மாற்றி அமைத்துள்ளார். அவர்களின் எண்ணம், பழக்க வழக்கம் யாவும் தமிழாகவே உள்ளன! அவர்கள் உண்ணும் உணவு, உடுக்கும் உடை, ஒப்பனை, அணிகலன் யாவும் தமிழ் நாட்டிற்கு உரியவை.

**பெயர்ப்பொருத்தம்** : காப்பிய மாந்தரின் வட மொழிப் பெயர்களைத் தமிழ் ஒலி முறைக் கேற்ப மாற்றி அமைத்துக் கொண்ட தேவர், குறிப்பிடத்தக்க சில நல்ல மாறுதல்களையும் செய்துள்ளார். நந்தகோன் மகள் 'கோதாவரி'யைக் கோவிந்தையாக்கியுள்ளார். மூலக் கதையிலுள்ள குணமாலையைச் சுரமஞ்சரியாகவும், சுரமஞ்சரியைக் குணமாலையாகவும் மாற்றியிருக்கின்றார். அவ்விரு பெண்களின் பண்பையும் நோக்கிக் 'குணமாலை'—என்ற பெயரை நல்ல பண்புடைய நங்கைக்குச் சூட்டியிருக்கின்றார். பெயரின் வாயிலாகவே கதை மாந்தரின் பண்பைக் குறிப்பால் ஆசிரியர் விளக்குவதுண்டு. குணமாலை என்ற பெயரை நற்பண்புடைய நங்கைக்குச் சூட்டிய அவரே கட்டியங்காரன் மக்கள் இருவர்க்குக் காமுகன், கோமுகன்—என்ற பெயர்களைச் சூட்டியிருக்கின்றார்.

தேவர் பாடியுள்ள நாடு நகர் ஆகியவற்றைத் தமிழ் நாட்டிற்கு உரியவையாக அமைத்துள்ளார். தமிழ் மண்ணின் வளமும் ஆற்றுப் பெருக்கமும், ஐவகை நிலக் காட்சியும், தமிழ் நாட்டு உயிர்களும் பயிர்களும் சிந்தாமணியில் அமைந்து இன்பமூட்டுகின்றன. யவனர் செய்த எந்திரப் பொறிகளைக் கொண்ட மதில், முதலை வாழும் அகழி, நகரப் பெருந்தெரு வாயில் சோலை ஆகிய யாவும் தமிழகத்துப் பெரு நகரங்களுக்கு உரியவையாகும்.

விருத்தப்பா கலிப்பாவின் வளர்ச்சி என்றும், அது தமிழுக்கே உரியது என்றும் நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார்,

சிலப்பதிகாரம், கலித்தொகை ஆகியவற்றிலுள்ள இசைப் பாடல்கள் பிற்காலத்தில் விருத்தப்பாக்கள் என்ற பெயருடன் வழங்கலாயின என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும்.

திருத்தக்க தேவர் தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகியவற்றைக் கற்றுத் தேர்ந்துள்ளார். அந்நூற் கருத்துக்கள் பலவற்றைத் தம் நூலில் தந்துள்ளார். திருக்குறள், சிந்தாமணியில் தொட்ட இடமெல்லாம் மணம் வீசுகின்றது. சிலப்பதிகாரம் மணிமேகலை பெருங்கதை ஆகிய பெருங்காப்பியங்களைக் கற்றுத் திளைத்த தேவர், இக்காப்பியங்களின் கருத்து, வருணனை, உவமை ஆகியவற்றைப் பல இடங்களில் தம் காப்பியத்தில் அமைத்துள்ளார். முன்னோர் மொழியும் கருத்தும் தேவர் காப்பியமெங்கும் இடம் பெற்றுத் தமிழ் மணம் கமழ்கின்றது.

# 4. காப்பிய இலக்கணமும் சிந்தாமணியும்

'எள்ளிலிருந்து எண்ணெய் எடுப்பதுபோல இலக்கியத்திலிருந்து இலக்கணம் எடுக்கப்படுகின்றது'—என்பது நம் முன்னோர் கருத்து. ''அறிஞர்கள் வகுக்கும் ஆராய்ச்சி முடிபுகள் சிறந்த கலைஞர்களுக்குப் பயன்படுவதில்லை. சிறந்த கலைகள் எல்லாம் தமக்குரிய இலக்கணத்தைத் தாமே படைத்துக் கொள்ளுகின்றன''. — என்று வில்லியம் **ஜான் கோர்ட் ஹோப்** என்ற அறிஞர் கூறுகின்றார்.

*சீவக சிந்தாமணியும்* தான் தோன்றும் போதே தன் இலக்கணத்தையும் படைத்துக்கொண்டது என்று கூறுவது பொருந்தும்.

தொல்காப்பியருக்கு முன், தமிழ் மொழியில் காப்பியங்கள் இருந்தமைக்குத் தொல்காப்பியச் செய்யுளியலில் சான்று உண்டு. தொல்காப்பியர் கூறும் அம்மை அழகு முதலியவை காப்பியம் பற்றிய இலக்கணம் என்பது அறிஞர்களின் கருத்து. இன்று உள்ள காப்பியங்களுள் சிலப்பதிகாரமும் மணிமேகலை யும் பிற்காலக் காப்பியங்களிலிருந்து வேறுபட்ட அமைப் புடையவை. பிற்காலக் காப்பியங்கள் கடவுளை வணங்கி, அவையடக்கம் கூறி நாட்டு வளம் நகர்வளம் பாடிக் காப்பியத் தலைவன் பிறப்பைக் கூறிக் கதையைத் தொடங்குகின்றன. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் இந்த அமைப்பு இல்லை. இவ்விரு காப்பியங்களுக்கும் அவையே இலக்கணமாக அமை கின்றன.

சீவக சிந்தாமணி அவ்விரு காப்பியங்களையும் பின்பற் றுமல் புதுவழியை வகுத்துக் கொண்டது. தன் இலக்கணத் தைத் தானே தோற்றுவித்துக் கொண்டது. இக் காப்பியம் தோன்றிய பின் தோன்றிய தண்டியலங்காரம் கூறும் காப்பிய இலக்கணம், பல காப்பியங்களின் அமைப்பைக் கண்டு கூறி யதேயாகும். அவ்வாறு அந்நூல் இலக்கணம் கூறச் சிந்தா மணியும் துணைசெய்திருக்கக் கூடும். இலம்பகம் என்ற பிரிவு சிந்தாமணியில் மட்டுமே காணப்படுவது இதற்குச் சான்றாக அமையும். இருப்பினும் தண்டியலங்காரம் கூறும் காப்பியத் திற்குரிய இலக்கணங்களை அறிந்து, அவற்றைச் சிந்தாமணி யுடன் இயைத்துக் காண்பது. இலக்கியச் சுவை நுகர்ச் சிக்கு உறுதுணை செய்யும். தண்டியலங்காரம் பெருங்காப்பி யத்தின் இயல்புகளைப் பின் வருமாறு குறிப்பிடுகின்றது:

"பெருங்காப்பியம், வாழ்த்து வணக்கம், எடுத்துக்கொண்ட பொருள் என்னும் மூன்றினுள் ஒன்றை முதலில் கூறிக் கதை யைத் தொடங்கும். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களை எடுத்துரைக்கும். தனக்கு

ஒப்பாவார் எவரும் இல்லாத தனிப்பெருந் தலைவனைப் பெற்றிருக்கும். மலை கடல் நாடு நகர் பருவ காலம் ஞாயிறு திங்கள் தோற்றம் ஆகியவற்றை வருணிக்கும். திருமணம் முடித்தல் பொன்முடி சூடுதல் பூம் பொழில் நுகர்தல் நீர் விளையாடல் மதுவுண்டு களித்தல் மக்களைப் பெறுதல் ஊடியும் கூடியும் இன்புறுதல் ஆகிய நிகழ்ச்சிகளைப் புனைந்துரைக்கும். அமைச்சரோடு ஆராய்தல் தூது விடுதல் படையெடுத்தல் போரிடுதல் வெற்றிபெறுதல் ஆகியவற்றைத் தொடர்ச்சியாய் அமைத்துக் காட்டும். சருக்கம் இலம்பகம் பரிச்சேதம் என்ற பெயருடைய உட் பிரிவுகளில் ஏதேனும் ஒன்றைப் பெற்றிருக்கும். மிகுந்த சுவையும் மெய்ப்பாடும் வாய்க்கப் பெற்று யாவரும் விரும்பும் வகையில் கற்றோரால் புனையப்படும்''.

மேலே குறிப்பிட்ட இலக்கணங்கள் யாவும் சிந்தாமணிக் காப்பியத்தில் அமைந்திருப்பதைக் காணலாம். திருத் தக்க தேவர் கடவுளை வாழ்த்தி அவையடக்கம் கூறித் தம் காப்பியத்தைச் சிறப்பான முறையில் தொடங்குகின்றார். பின் பதிகம் என்ற பகுதியில் (6—29) காப்பியத்தில் இடம் பெறும் கதையின் போக்கு, நிகழ்ச்சிகள் ஆகியவற்றைச் சுருக்கமாய் எடுத்துரைக்கின்றார். தம் நூலை 'இலம்பகம்' என்ற உட் பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு, ஒவ்வோர் இலம்பகத்திற்கும் ஏற்ற பெயரை இடுகின்றார். நாமகள் இலம் பகம், கோவிந்தையார் இலம்பகம், காந்தருவதத்தையார் இலம்பகம், குணமாலையார் இலம்பகம் பதுமையார் இலம்பகம், கேமசரியார் இலம்பகம் கனகமாலையார் இலம்பகம், விமலையார் இலம்பகம், சுரமஞ்சரியார் இலம்பகம், மண்மகள் இலம்பகம், பூமகள் இலம்பகம், இலக்கணையார் இலம்பகம், முத்தி இலம்பகம்—என்று பதின்மூன்று பிரிவுகளாய் அமைத்துக் காப்பியத்தைப் படைத்துள்ளார். நாமகள் இலம்பகம், மண் மகள் இலம்பகம், பூமகள் இலம்பகம், மூன்றும் முறையே சீவகன் கல்வி கற்றல், நாட்

டைப் பெறுதல், செல்வம் அடைதல் ஆகிய நிகழ்ச்சிகளைப் பாடுகின்றன. கல்வியை நாமகளாகவும் நாட்டை மண் மகளாகவும் செல்வத்தைப் பூ மகளாகவும் தேவர் கற்பனை செய்கிறார்; சீவகன் அவர்களைப் பெற்று மகிழ்வதாய்ப் பாடுகின்றார். நாமகள் இலம்பகம் சச்சந்தன் வரலாறு சீவகனின் பிறப்பு வளர்ப்பு ஆகியவற்றைக் கூறுகின்றது. கோவிந்தையார் இலம்பகம், சீவகனின் முதல் வெற்றியைப் போற்றியுரைக்கின்றது. அடுத்து வரும் இலம்பகங்கள் எட்டும் மகளிர் எண்மரைச் சீவகன் மணந்த வரலாற்றை விளக்கியுரைக்கின்றன, இறுதியிலுள்ள முத்தி இலம்பகம் சீவகன் துறவுபூண்டு வீடு பேறு அடைந்த வரலாற்றைச் சிறப்பிக்கின்றது.

காப்பியத்தின் தலைவனாகிய சீவகன் பல வேறு கலைகளில் தேர்ந்து விளங்கி, எல்லாச் செல்வங்களும் எய்தி மணிமுடி சூடி யாவரும் போற்றும் வகையில் செங்கோல் செலுத்தி, ''தன்னிகர் இல்லாத் தலைவனாய்''ப் பொலிகின்றான்.

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகை உறுதிப் பொருள்களையும் நூல்முழுதும் வழங்கியுள்ளார் தேவர். மலை கடல் முதலியவை பற்றிய பலவேறு வருணனைகள் சிறப்பாக நூலில் அமைந்துள்ளன. திருமணம், பொழில் நுகர்ச்சி, நீராட்டு ஆகிய பலவேறு நிகழ்ச்சிகள் வண்ண ஓவியங்களாய்க் கண் முன் தோன்றுகின்றன. நகை அழுகை முதலிய எண் சுவைகள் மிகுந்திருக்கின்றன. கரையிலாக் கல்விக் கடலாய் விளங்கும் திருத்தக்க தேவர் படைத்துள்ள சீவக சிந்தாமணி ஒரு பெருங்காப்பியமாய் விளங்குகின்றது.

தமிழ்க் காப்பிய ஆராய்ச்சிக்கு ஆங்கிலத் திறனாய்வு நூல்கள் துணை செய்கிறது என்ற உண்மையைத் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள் :

''தமிழ்க் காவியப் பயிற்சியில் சில புது முறைகள் கொள்ளப் பெறுதல் நலம். கதைக்கும் பதவுரைக்கும் இலக்கணக் குறிப்புக்கும் மட்டும் காவியங்களைப் பயில்வதால் காவியங்களின் நோக்கம் நிறைவேறாது. ஆங்கிலமும் தமிழும் பயின்ற சிலர், அடிமையுணர்வு இன்றிக் காவியங்களை ஆராய்ந்து பல நுட்பங்களை இப்போது வெளியிட்டு வருவது ஆறுதல் அளிக்கிறது. இடைக் காலத்தில் வீழ்ந்துபட்ட தமிழ்க் காவிய உணர்வுக்கு இந்நாளில் புத்துயிர் அளித்தது ஆங்கில உணர்வு என்பதை மறுத்தலாகாது'' [இளமை விருந்து (1971) பக்கம் 102].

தமிழ்ப் பெரியார் கூறியுள்ள இக்கருத்து, இன்று தமிழ்க் காப்பிய ஆராய்ச்சியாளரிடையே செல்வாக்குப் பெற்றுப் பரவி வருகின்றது. மேலை நாடுகளில் அரிஸ்டாடில் காப்பிய ஆராய்ச்சியைத் தொடங்கி வைத்தார். அவர் தொடங்கி வைத்த ஆராய்ச்சி பிற்காலத்தில் விரிவடைந்தது. ஆங்கில மொழி நாடகங்களும் காப்பியங்களும் ஆராய்ச்சியாளர்களைப் புதுப் புதுவகையில் சிந்திக்க வைத்தன. ஆதலின் காலந்தோறும் ஆராய்ச்சி விரிவடைந்தது. ஆபர் குரோம்பி என்னும் ஆங்கில இலக்கிய ஆய்வாளர், காப்பியம் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார்.

காப்பியத்தை நோக்கி மகிழ்வதற்குரிய ஆராய்ச்சிக் கண் உடையவரே, காப்பியத்தின் பயனை முழுமையாய்ப் பெற முடியும். காப்பியத்தின் ஒரு பகுதியையோ சில பாடல்களையோ சில பாத்திரங்களையோ அவ்வப்போது கண்டறிந்து மகிழ்பவரைக் காப்பியத்தின் பயனைப் பெற்று விட்டவராய்க் கருத முடியாது. ஆங்கில அறிஞர் ஸி. எஸ். லியூயிஸ் என்பவர், மில்டன் இயற்றியுள்ள 'சுவர்க்க நீக்கம்' என்னும் காப்பியத்திற்கு எழுதிய முன்னுரையில், ''தனித்தனிப் பாடல்களின்

அழகைக்கண்டு களித்தல், கற்களால் அமைந்த மாளிகையில் உள்ள தனிக் கல்லின் அமைப்பைக் கண்டு மகிழ்வது போன்றது'' என்று கூறியுள்ளார்.

காப்பியத்தைக் கற்பவர்கள், காப்பியம் முழுவதையும் மனக்கண் முன் கொண்டுவந்து நிறுத்துதல் வேண்டும். அதன் அமைப்பையும் பல்வேறு பகுதிகளையும் முறையாக அறிதல் வேண்டும். பின்னர் அனைத்தையும் ஒன்று சேர்த்துக் காப்பியத்தின் கட்டுக்கோப்பை உணர்ந்து போற்றுதல் வேண்டும். பின்னர்க் காப்பியத்தில் நுழைந்து ஆழ்ந்து நோக்குதல் வேண்டும். காப்பியம் தோன்றிய சூழ்நிலை, காப்பியம் படைத்த கலைஞரின் நோக்கம், நெஞ்சப்பாங்கு ஆகியவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும். காப்பியத்தின் உள்ளும் புறமும் நோக்கி ஒப்பிட்டுக் காண வேண்டும். இலக்கியச் சுவையை நுகர்வதற்குச் சொல், ஓசை, உவமை முதலியவற்றில் ஈடுபட வேண்டும். காப்பிய மாந்தர்களிடம் பழகி இன்புற வேண்டும். இவ்வாறெல்லாம் செய்யின் காப்பியத்தின் பயனை முழுமையாய்ப் பெற முடியும்.

சிந்தாமணிக் காப்பியத்தின் கட்டுக்கோப்பு நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. அதில் உள்ள இலக்கியச் சுவை பேரின்பமூட்டுகிறது. காவிய அமைப்பும், திறனும் ஆராய்ச்சிக்குப் பெரு விருந்தாய் அமைகின்றன.

## காப்பியத்தின் பெயர்

சிந்தாமணிக் காப்பியத்தின் தலைவனாகிய சச்சந்த மன்னன் மகன், சுடுகாட்டில் பிறக்கின்றான். குழந்தையைக் கந்துக்கடன் என்னும் வணிகன் எடுத்துச் செல்கின்றான். அப்போது குழந்தை தும்முகிறது. உடனே அங்கு வாழும் பெண்தெய்வம் ஒன்று, மறைவில் இருந்து ''*சீவ!*'' என்று

குழந்தையை வாழ்த்துகின்றது. இந்த வாழ்த்தொலியே குழந்தைக்குப் பெயராகிச் "*சீவகன்*" என்று அமைகின்றது. (323).

விண்ணுலகில் தேவர்களிடம் உள்ள மணியின் பெயர் சிந்தாமணி என்பதாகும். அது கேட்டவற்றை எல்லாம் தரும் என்பர். அந்த மணிபோலச் சீவகனின் வரலாறு பாடும் காப்பியம் புலவர்கள் நினைக்கும் கருத்துக்களை எல்லாம் வழங்குவதால் இக்காப்பியம் சிந்தாமணி என்று பெயர் பெற்றது என்பர். நன்னூல் உரையாசிரியராகிய மயிலைநாதர் 'தன்மையால் பெயர் பெற்ற நூல் சிந்தாமணி' என்று விளக்கியுள்ளார்.

சீவகனின் தாய், சுடுகாட்டில் பிறந்த தன் மகனைச் "*சிந்தாமணியே!*" என்று அழைக்கின்றாள் (311). நச்சினார்க்கினியர்,

> "சிந்தாமணி ஏய்ந்த சித்திரமா
> மண்டபத்துச் செல்வன் புக்கான்—(2370)

என்ற வரிக்குப் பொருள் கூறும்போது, "மேல் நினைத்தன கொடுக்கின்றது ஆதலின், சிந்தாமணி ஏய்ந்த செல்வன் என்றார்" என்று உரைக்கின்றார்.

இக்காரணங்களால் '*சீவக சிந்தாமணி*' என்பது நூலிற்குப் பெயராய் அமைந்தது என்னலாம்.

*திருத்தக்க தேவர் தம் நூலைச் 'சிந்தாமணி' என்றே* குறிப்பிட்டுள்ளார் (3143, 3144). சிந்தாமணி என்றபெயர் பிற்காலத்தில் பல நூல்களுக்கு வழங்கத் தொடங்கியபோது, அவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்ட, காப்பியத் தலைவன் பெயராகிய '*சீவகன்*' என்பதையும் சேர்த்து, '*சீவக சிந்தாமணி*' என்று பெயராய் வழங்கினர் என்று உரைப்பர்.

கற்போர் நினைத்த கருத்துக்களை எல்லாம் காலந்தோறும் தந்து இலக்கிய வானில் ஒளிவீசித் திகழும் முழுமணியாய் இக் காப்பியம் நிலைபெற்று வருகின்றது.

## கதை நிகழ்ச்சியும் கட்டுக்கோப்பும்

கதை நிகழ்ச்சிகளும் கட்டுக் கோப்பும் ஒரு காப்பியத்திற்கு உயிர் நாடி போன்றவை. சிந்தாமணிக் காப்பியத்தில் உள்ள கதை நிகழ்ச்சிகள் ஒன்றிற்கு ஒன்று தொடர்புள்ளவையாய் அமைந்துள்ளன; ஒரு நிகழ்ச்சி மற்றொரு நிகழ்ச்சிக்கு இடம் தந்து கதையை வளர்த்துச் செல்லுகின்றது காப்பியத்தில் இடம் பெற்றுள்ள எந்தச் சிறு நிகழ்ச்சியும் கதையுடன் ஒட்டாமல் பயனற்று இருக்கவில்லை. காப்பிய மாந்தரின் இன்ப துன்பங்கள், அறிவு ஆற்றல்கள், உயர்வு தாழ்வுகள் ஆகியவற்றைப் படிப்படியாக வளர்த்துத் தெளிவாகக் காட்டுகின்றது. 'இவ்வாறு இது நிகழ்ந்தது சரியே!'—என்று கற்போர் அமைதியுறும்படி முடிவுகள் அமைந்துள்ளன. ஒரே நிகழ்ச்சியைத் திருப்பத் திருப்பக் கூறுமல், குறிப்பாக உணர்த்தும் கலைச் சிக்கனம் (Artistic economy) அமைந்திருக்கின்றது. இன்றியமையாத இடங்களில் தெய்வீக நிகழ்ச்சிகள் (Super natural elements) அளவோடு அமைந்துள்ளன. இவற்றை விரிவாகக் காண்போம்; கண்டு சிந்தாமணியின் பெருமையை உணர்வோம்.

**நிகழ்ச்சிக் கோவை:** சீவக சிந்தாமணியில் உள்ள ஒவ்வொரு இலம்பகத்திலும் ஒவ்வொரு சிறுகதை உள்ளது. கற்போர் நெஞ்சத்தைக் கவரும் சச்சந்தன் கதை (நாமகள் இலம்பகம்), சீவகன் தன் ஆண்மையைப் புலப்படுத்தி நிரை மீட்டு, கோவிந்தையைத் தன் நண்பனுக்கு மணம் முடிக்கும் கதை (கோவிந்தையார் இலம்பகம்) யாழிசைத் திறங்காட்டிக் காந்தருவதத்தையைச் சீவகன் மணக்கும் கதை (காந்தருவ

தத்தையார் இலம்பகம்) முதலிய கதைகள் இலம்பகத்திற்கு ஒன்ருக அமைந்துள்ளன. இவ்வாறு தனித்தனியாக அமைந்து கிடக்கும் கதைகளைத் தேவர் திறம்படக் கோத்துள்ளார். ஒரு கதை முடிந்து மற்ெருரு கதை இயல்பாகத் தொடங்குகின்றது; இரண்டும் பொருந்துமிடம் (மூட்டுவாய்) நன்கு அமைந்துள்ளது.

சச்சந்தன் இறந்தவுடன் சீவகன் பிறந்து வேருெரு கதையைத் தொடங்குகின்ருன். மறைவாக வளர்ந்து வரும் சீவகன் ஆனிரையை மீட்க வெளிப்படுவதால் கோவிந்தையாருக்குத் திருமணம் நிகழ்கின்றது. காந்தருவதத்தையை இசையில் வெல்பவர் ஒருவரும் இல்லையோ என்று எல்லோரும் கவலை கொள்ளும் நேரத்தில் சீவகன் தோன்றி அவளை வென்று மணந்து கொள்கிருன். வெறி கொண்ட யானை கொல்ல இருந்த குணமாலையைக் காப்பவர் ஒருவரும் இல்லாதபோது சீவகன் வந்து யானையை அடக்கி அவளை மணந்து கொள்ளுகிருன். இவ்வாறே காப்பியத்தில் உள்ள கதைகள் யாவும் சீவகனுல் தொடர்புற்று, ஒரு நூலில் கோக்கப்பட்ட பல மணிகள் போலப் பொருத்தமாய் அமைகின்றன.

**ஒரு நிகழ்ச்சி மற்றென்றிற்கு இடம் தரல்:** சிந்தாமணிக் கதைகளில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு நிகழ்ச்சியும் மற்ெருரு நிகழ்ச்சிக்கு இடம் தந்து கதையை நடத்திச் செல்லுகின்றது. அரண்மனையிலிருந்து பறந்து செல்லும் மயிற்பொறி அரசியைக் காத்து, சீவகன் பிறப்பிற்குக் காரணமாகின்றது. சீவகன் சுடுகாட்டில் பிறப்பது அவனைக் கந்துக்கடனிடம் சேர்க்கின்றது. நிரைமீட்சி சீவகனின் நண்பனுக்குத் திருமணம் முடித்து, சீவகனின் துணைவலிமையைப் பெருக்குகின்றது. யாழ்வென்றி சீவகனுக்குத் திருமணம் முடிக்கின்றது. சுண்ணத் தேர்வு குணமாலையையும் சுரமஞ்சரியையும் அறிமுகப்

படுத்திப் பின் மணம் முடிக்கின்றது. இவ்வாறே காப்பியம் முழுதும் ஒரு நிகழ்ச்சி மற்றொரு நிகழ்ச்சிக்கு இடம் தரக் கதை தொடர்ந்து செல்லுகிறது.

**அச்சாணி போன்றவை :** *காப்பியத்தில் உள்ள சிறிய நிகழ்ச்சிகளும் எளிய காட்சிகளும் அச்சாணி போன்று கதைக்கு* உதவுகின்றன. இது வேண்டாத நிகழ்ச்சி என்றோ, இது பயன்படாத காட்சி என்றோ எதையும் விலக்க முடியாதவாறு யாவும் பொருந்தியுள்ளன.

விசயை தன் குழந்தையின் கையில் இடும் மோதிரமே கந்துக்கடனுக்கு அறிமுகப்படுத்திக் காக்கின்றது. குழந்தை தும்மும்போது தெய்வம் வாழ்த்தும், ''சீவ''-என்னும் சொல்லே காப்பியத் தலைவனுக்குப் பெயராகின்றது. சீவகனால் போற்றப் படும் நாயும், வெறிகொண்டு திரியும் பட்டத்து யானையும் சோலையில் பலாப்பழம் உண்டு கூடியும் ஊடியும் மகிழும் குரங்குகளும் கதையில் சிறந்த திருப்பங்களுக்குத் துணை புரிந்து, பல நிகழ்ச்சிகளுக்குக் காரணமாகின்றன.

**படிப்படியாக வளர்த்துச் செல்லுதல் :** *சீவகனுடைய ஆற்றலைத் தேவர் படிப்படியாக வளர்த்து நிறைவுசெய்து* கட்டியங்காரனை அழிக்கின்றார். சுடுகாட்டில் துணையின்றிப் பிறந்த நிலையிலிருந்து சீவகன் தன் அறிவு, ஆற்றல், ஒழுக்கம் ஆகியவற்றில் உயர்ந்து போகின்றான். செல்லுமிடமெங்கும் சுற்றமும் நட்பும் பெறுகின்றான். ஊரும் உறவும் தேடுகின்றான். அவனது வளர்ச்சி தேவரால் திறம்படக் காட்டப்படுகின்றது. இவ்வாறே கட்டியங்காரனின் அழிவும் மெல்ல மெல்ல நிகழ்கின்றது. வேடர் கவர்ந்த ஆனிரையை மீட்க இயலாமல் உற்ற தோல்வி, காந்தருவதத்தையின் திருமண முடிவில் சீவகனோடு இட்டபோரில் உற்ற தோல்வி, பட்டத்து யானையை

அடக்கிய சீவகனைப் பிடிக்க முயன்றதில் உற்ற தோல்வி, திரிபன்றி எய்வதில் உற்ற தோல்வி என்று பல தோல்விகளை அடுக்கிக் காட்டி முடிவில் நடக்கும் போரில் அவனது அழிவைக் காட்டுகின்றார்.

**இலக்கியத் தீர்ப்பு :** நல்லவர் வாழ்ந்து மகிழ்வதையும், *தீயவர் வீழ்ந்து அழிவதையும்* இலக்கியம் திறம்படக் காட்டி அறத்தை நிலை நிறுத்தவேண்டும். மேலும் இவ்வாறு நிகழ்வது சரியே என்ற நினைப்பு உண்டாகும்படி நிகழ்ச்சிகள் அமைதல் வேண்டும்.

> 'கழிபெருஞ் செல்வக் களியாட் டயர்ந்து
> *மிக்க நல்லறம் விரும்பாது' வாழ்ந்த மன்னன்*

சச்சந்தன் முடிவும், விசயையின் துறவும் நமக்குப் பொருத்த மாகவே படுகின்றன. *சீவகன் ஓராண்டு மறைந்து வாழ்வதால்* தான் பல நன்மைகள் அவனுக்கு அடுக்கடுக்காய் வந்து சேர் கின்றன. மன்னனைக் கொன்று, அரசைக் கொண்ட அமைச்சன் கட்டியங்காரன் அரசுக்குரிய இளவரசனால் கொல் லப்பட்டு அழியும்போது 'இந்த முடிவு தகும், தகும்' என்ற *எண்ணமே மேலோங்கி நிற்கின்றது. தந்தை (சச்சந்தன்) இழந்த அரசு,* மைந்தன் (சீவகன்) கைக்கு வந்து அவன் முடிசூடும்போது நம் மனம் களிப்படைகின்றது. சுண்ணப்பொடி காரணமாய்க் குணமாலையுடன் முரண்பட்டு, 'ஆடவரைக் காணேன்' என்று கன்னி மாடத்தில் வாழும் சுரமஞ்சரி சீவகனை மணக்கத் தெய்வத்தை வேண்டி நிற்கும்போது நம் உள்ளம் 'இது இப்படித்தான் முடியவேண்டும்' என்று அமைதியடை கின்றது.

**கலைச்சிக்கனம் :** முன்பு சொல்லாத நிகழ்ச்சிகளைப் பின்னர்க் கூறுதல், ஒரு செயல் முடிந்தபின் அச்செயல் நிகழ்ச்

சிக்குரிய காரணம் கூறுதல், ஒரு நிகழ்ச்சியைக் கொண்டே மற்றொன்றை விளக்குதல் முதலிய நுட்பங்கள் தேவரிடம் அமைந்துள்ளன.

சீவகனுக்குக் கல்வி கற்பித்த அச்சணந்தி என்னும் ஆசிரியரின் யானைத்தீ என்னும் நோய், சீவகனைக் கண்டபோதே நீங்கியதாக முதலில் கூருமல், பின்னரே தேவர் கூறுகின்றார். சீதத்தன் என்னும் வணிகனின் கப்பல் மூழ்கியதுபோல் காட்டியது விஞ்சையனின் செயல் என்பதை முதலில் கூருமல் பின்னரே கூறுகின்ருர். சீவகன் அரசைக் கைப்பற்றியபின், தான் இளமையில் விளையாடிய ஆலமரத்திற்குச் சிறப்புச் செய்வதாய்க் கூறப்பட்டுள்ளது. ஆனால் சீவகனின் இளமைப் பருவத்தைப் பாடும் தேவர் அவன் எந்த ஆலமரத்தின் கீழும் விளையாடியதாய்க் குறிப்பிடவில்லை, இவ்வாறு சிக்கனம் கருதி, நிகழ்ச்சிகளை அமைக்கும் தேவரின் ஆற்றல் வியந்து போற்றற்குரியது.

**தெய்வீக நிகழ்ச்சிகள் :** எல்லா நாட்டுக் காப்பியங்களிலும் தெய்வீக நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. அவை அளவோடு இடம்பெறுவது சிறப்பு. கவிஞர்கள் தாம் நடத்திச் செல்லும் கதைகளில் அவிழ்க்க முடியாத சிக்கல் தடை எதிர்பாராத திருப்பம் ஆகியவை ஏற்படும்போது அவற்றை நிறைவு செய்யத் தெய்வீக நிகழ்ச்சிகளைச் சேர்க்கின்றனர். இன்றியமையாதபோது அத்தகைய நிகழ்ச்சிகள் இடம் பெறுவது குறையாகாது.

சிந்தாமணியில் தெய்வீக நிகழ்ச்சிகள் அளவாக இடம் பெற்றுள்ளன. அவை கதையில் ஏற்படும் தடைகளை நீக்குகின்றன; சிக்கலை அவிழ்க்கின்றன. சுடுகாட்டில் மகவைப் பெற்றுத் தனியே புலம்பும் விசயை முன் தெய்வம் ஒன்று தோழி வடிவில் வந்து உதவுகின்றது. அத் தெய்வம் செய்யும்

உதவிகள் பல. இதனால் காப்பியத்திற்கு அது தேவையாகின்றது. சீதத்தன் என்னும் வாணிகனைத் தன் நகர்க்கு அழைக்க, கலுழவேகன் என்னும் விஞ்சையன், தரன் என்பவனை ஏவிச் செய்யும் மாயச் செயல்கள் காந்தருவதத்தையை மண்ணுலகிற்கு அனுப்பத் துணைபுரிகின்றன. (முற்பிறப்பில் நாயாக இருந்த) சுதஞ்சணன் என்னும் தேவன் சீவகனைக் காக்கக் காற்று மழையை ஏவுகின்றான். அதனால் சீவகன் தப்பிச் செல்கின்றான். தன் மந்திர வலிமையால் தேவரை அழைப்பது காந்தருவதத்தையின் ஆற்றலைப் புலப்படுத்துகின்றது. சீவகனுக்கும் கட்டியங்காரனுக்கும் போர் தொடங்குமுன் வானில் ஓர் இயக்கன் தோன்றிச் 'சீவகன் வெல்வான்' என்று கூறி மறைகின்றான். இதனால் சீவகனின் ஆற்றல்மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கை மிகுகின்றது.

இத்தகைய பல சிறப்பியல்புகளைக் கொண்ட பெருங் காப்பியமாய்ச் சிந்தாமணி திகழ்கின்றது. காப்பியக் கலைத் திறன் முழுமையும் அமைந்த உயர்ந்த காப்பியமாய் அது விளங்குகின்றது.

## 5. காப்பிய உலகம்

கலைஞர்கள் படைக்கும் கற்பனை உலகம், நாம் வாழும் மண்ணுலகைவிடச் சிறப்பு வாய்ந்தது. கற்பனை உலகத்தில் பூத்து மணக்கும் மலர்கள் எப்போதும் வாடுவதில்லை. அருவிகள் வற்றிப் போவதில்லை. செடி கொடிகள் வளர்ந்து மடிவதில்லை. அந்த உலகத்தில் வாழும் உயிர் வகைகளுக்கு என்றும் அழிவில்லை. கலை உள்ள அளவும் அங்குள்ள மக்கள் வாழ்ந்து கொண்டே இருப்பர்.

தமிழ்க் காவிய உலகின் மாண்பைத் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. பின்வருமாறு புகழ்கின்றார் : "தமிழ்க் காவிய உலகில் எத்துணை மேக மண்டலங்கள்! எத்துணை ஏரிகள்! எத்துணை வயல்கள்! ஊர்கள் எத்தனை! நகரங்கள் எத்தனை! நாடுகள் எத்தனை! உழவு ஒருபால் —வாணிபம் மற்றொரு பால்— அரசு இன்னொரு பால் – அறம் வேறொரு பால்! யாண்டும் விருந்தோம்பல் — யாண்டும் கொடை— எங்கணும் விழா! நம் பெருங் காவியங்களில் உலகைக் காணலாம்; உயிரைக் காணலாம்; கடவுளைக் காணலாம். காவிய இன்பம் பேரின்பம்! பேரின்பம்!" [இளமை விருந்து (1971) பக்கம்—65] தமிழறிஞர்கள் வியந்து போற்றும் காப்பிய உலகம் சிந்தாமணியில் சிறப்பாய் அமைந்துள்ளது.

திருத்தக்க தேவர் படைத்துள்ள காப்பிய உலகம் விந்தைகள் நிறைந்தது. அவருடைய திருவுள்ளம் சோலையாய்ப் பூத்து, கார்முகிலாய்ப் பொழிந்து, அருவியாய்ப் பெருக்கெடுத்துப் பல்வேறு வடிவம் கொண்டுள்ளது. நீலவானமும், சுடர் ஒளிக் கதிர்களும் விண்மீன்களும், வானவில்லும் முகிலும் மின்னலும் அவர் உள்ளத்தில் இடம் பெற்றுள்ளன. பல்வேறு இயற்கை வளமும், ஐவகை நிலங்களும் நீலத்திரைக் கடலும் வானளாவிய குன்றமும் அவர் உள்ளத்தின் படைப்புகளாய்ப் பொலிகின்றன, அவருடைய உள்ளத்தில் பெரிய உலகம் ஒன்று கருக்கொண்டு வளர்ந்து காப்பியமாய் உருவெடுத்துப் பிறந்திருக்கின்றது.

சீவக சிந்தாமணியில் பல்வேறு பண்புள்ள மக்களைக் காண்கின்றோம். ஒருவர் வாழ்விலேயே பலவேறு நிலைகளைக் காண்கின்றோம். சிற்றின்பத்தில் மூழ்கி அரசியலைப் புறக்கணித்து அரசும் உயிரும் இழக்கின்ற மன்னன்; மன்னனைக் கொன்றுவிட்டு நாட்டைக் கைப்பற்றும் வஞ்சக அமைச்சன்; சுடுகாட்டில் ஆண்மகவைப் பெற்றுத் தனியே புலம்பும் அரசி;

இறந்த மகனைப் புதைக்கச் சுடுகாட்டிற்கு வரும் தந்தை; வேறு ஒருவர் நிழலில் ஒதுங்கி மறைவாக வளரும் இளவரசன்; நண்பனுக்காக உயிரையும் கொடுக்க முன்வரும் நண்பன்; மாணவனைப் பெரிதும் மதித்து நல்வழி காட்டும் ஆசிரியர்; ஆனிரை கவரும் வேடர்; தம் ஆக்களை இழந்து புலம்பும் இடையர்; கலங்கவிழ்ந்து துன்புறும் வணிகன்; இசைக்கலையில் தேர்ந்து விளங்கும் கலையரசி; சுண்ணப்பொடியால் மனம் வேறு பட்டுப் பிரியும் பெண்கள்; ஒழுக்கமற்ற மனைவியிடம் தீராக் காதல் கொண்டுள்ள பேதைக் கணவன்; கட்குடத்தை ஏந்திக் கொண்டு மனைவியரோடு திரியும் களிமகன்; கிளியைத் தூது விடும் இளங் காதலர்; காமுகன் காமத்திற்கு இரையாகிப் புலம்பும் ஆடல் மகள்; மனைவியரோடு நோற்கும் துறவிகள்; விலங்குகளைக் கொன்று தின்னும் வேடன்; மகனைக் கண்டதும் துள்ளி எழும் தாய்; காதலனைப் பிரிந்து புலம்பும் மகளிர்; கன்னியாகவே வாழ உறுதி கொண்ட ஒருத்தியைப் பற்றிப் பேசித் தம் நண்பனைத் தூண்டிவிடும் காளையர்; பந்தாடும் இளநங்கை— இன்னும் இன்னும் எத்தனையோ வகையான மாந்தரைக் காண் கின்றோம்.

மாமனும் மருகனும் போல் அன்பு பூண்டு நடக்கும் பெரு மிதப் பகடும், செந்தாமரையில் உறங்கும் வெள்ளன்னமும், அந்தணர் சமைத்து வைத்த சோற்றுத் திறளில் வாய்வைத்து அடிபட்டு நீரில் விழுந்து கிடக்கும் நாயும், வெறிகொண்டு திரியும் யானையும், தினைக் கதிரில் காதல் கடிதத்தை மறைத் துக்கொண்டு தூது செல்லும் கிளியும், தோகையர் கூந்தலைக் கண்டு நாணும் மயிலும், சுண்ணப்பொடி நுகரும் வண்டுகளும், பலாப்பழத்தை மகிழ்ந்து உண்ணும் குரங்குகளும், காதலர் ஊடல் தீர்ந்து கூடிமகிழத் துணைசெய்யும் பூவைகளும் தேவர் காப்பியத்தில் வாழ்கின்றன.

இன்பத்திற்கு இருப்பிடமான அரண்மனை, எந்திரம் அமைந்த ஓங்கி உயர்ந்த மதில், முதலைவாழும் அகழி, அறிஞர்

கூடி ஆராயும் பேரவை, வெற்றி முரசு முழங்கும் போர்க்களம், மகளிர் பந்தாடும் இடம், கொடிய விலங்குகள் வாழும் காடு, இசைப்போட்டி நிகழும் மண்டபம், திரிபன்றி எய்வோர் அமர்ந்திருக்கும்கூடம், மணமக்கள் கூடிமகிழும் மணவறை, பேய் நுடங்கி ஆடும் சுடுகாடு, துறவிகள் வாழும் அறப்பள்ளி-முதலிய இடங்களைத் தேவர் நூலில் காணலாம்.

பருவங்களும் சிறு பொழுதுகளும் அப்போது ஏற்படும் மாறுதல்களும் சிறப்பாகத் தேவரால் பாடப்பட்டுள்ளன. கார் காலத்தில் மழைத்துளி விழுந்ததும் பூத்துக் குலுங்கும் முல்லை மலரும், பனிக் காற்றுப் பட்டுக் கருகும் தாமரைமலரும், சாய்ந்து கிடக்கும் செந்நெல்லும் நம் கண்முன் தோன்றும் வகையில் தேவர் பாடியுள்ளார்.

சிந்தாமணியைப்படித்து முடித்து மூடும்போது, தனி உலகில் பல ஆண்டுகள் தங்கிவாழ்ந்த அனுபவத்தைப் பெறுகின்றோம். ஒரு பெரியநாட்டிற்குச்சென்று, அங்குள்ள பல வகை இடங்களைக்கண்டு களித்து, பலபொருள்களை நுகர்ந்து பலவேறு மக்களைக்கண்டு அவர்களோடு அளவளாவிமகிழ்ந்தது போன்ற உணர்ச்சியைப் பெறுகின்றோம். திருத்தக்க தேவர் படைத்துள்ள சிந்தாமணி உலகத்தில் நீண்டகாலம் பயணம் செய்தவர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள். அந்த உலகில் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார்கள். தனியாக இருந்துகொண்டு இரவு முழுவதும் தாம் அந்தக்காப்பியத்தைக்கற்று ஆராய்ந்தபோது உண்டான இன்பஉணர்வுகளைப் பின்வருமாறு தம்வாழ்க்கை வரலாற்றில் வெளிப்படுத்தியுள்ளார்கள் :

''தனிமையிலே திருத்தக்கதேவர் என்னை எங்கெல்லாமோ அழைத்துச்செல்வார். இராசமாபுரத்துக் காட்சிகளைக்காட்டு வார். சச்சந்தனின் அந்தப்புரத்துக்கு அழைத்துப்போவார். கட்டியங்காரனுடைய செயல்களை எடுத்துச்சொல்வார்.

“சீவகன் பேசுவான்; விளையாடுவான்; வீரச்செயல் புரிவான்; இன்ப விளையாட்டிலே ஈடுபட்டிருப்பான்; காந்தருவ தத்தை காட்சியளிப்பாள்; குணமாலை தோன்றுவாள்.

“இவ்வளவு காட்சிகளின் இடையே என் உடம்புதான் இரவில் தனியாக இருக்குமேயன்றி என்மனம் சிந்தாமணிப் பிரபஞ்சத்திலே விரிந்த இடங்களையும் நீண்டகால நிகழ்ச்சிகளையும் அளவிட்டு இன்புறும்” (என் சரிதம்-பக்கம் 782)

இத்தகைய இன்ப உணர்வுகளைச் சிந்தாமணிக்காப்பியம் கற்கும் ஒவ்வொரு தமிழன்பனும் பெற இயலும்.

# 6. காப்பியத்தலைவன்

சிந்தாமணிக் காப்பியத்தின் தன்னேரில்லாத்தலைவனாய் விளங்குகின்றான் சீவகன். திருத்தக்க தேவர் அவனை ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஆண்மகனாய்ப் படைத்துக்காட்டுகின்றார்.

“பயங்கெழு பனுவல் நுண்ணூல்
நடையுளார் சொல்லிற் றெல்லாம்
நம்பி சீவகன் கண் கண்டாம்” – 464.

என்று சீவகனின் கல்வி நலம் போற்றப்படுகின்றது. கட்டியங்காரன்,

“திருமலி ஈகை போகம்
திண்புகழ் நண்பு சுற்றம்
ஒருவர்இவ் வுலகில் யாரே
சீவகன் ஒக்கும் நீரார்” – 1165.

என்று புகழ்கின்றான். சீவகன்மேல் தீராதபகைமை கொண்ட கட்டியங்காரன் பாராட்டிக்கூறும் மொழிகள் இவை! சீவகனை,

எல்லாப்பண்புகளும் நிரம்பிய பண்பாளனுய்—அறமும் அன்பும் வாய்ந்த நல்லவனுய்—ஆண்மையும் மறமும் உள்ள பெருவீரனுய்—அறிவும் ஒழுக்கமும் உடைய சான்ருேனுய்—கொடியவரை எதிர்த்து அழித்து நல்லாரைக்காக்கும் காவலனுய்—தோற்றப் பொலிவுமிக்க காளையாய்த் திருத்தக்க தேவர் காட்டுகின்ருர்.

## போர்க்கலைஞன்

சீவகன் வீரம் மிக்கவன். தன்னை எதிர்த்து வந்தோரைப் புறங்கண்டு வாகைசூடும் ஆண்மகன். மூன்றுமுறை நடந்த போர்களில் சீவகன் வெற்றி பெறுகின்ருன். முதல்வெற்றி, ஆனிரையைக் காக்கத்தொடங்கிய போரில் பெற்றதாகும். ஆயர்களின் ஆனிரையைக் கவர்ந்த வேட்டுவர்களை, கட்டியங்காரன் ஏவிய படைவீரர்வெல்ல இயலாமல் புண்பட்டுத் திரும்பி விடுகின்றனர். பின்னர்ச் சீவகன் சென்று வேடர்களை வென்று ஆனிரையை மீட்டுத்தருகின்ருன். இது சீவகன் பெற்ற முதல்வெற்றியாகும்

காந்தருவதத்தை இசைப்போட்டியில் சீவகனுக்குத் தோற்று இருந்தபோது, அப்போட்டியில் தோற்றமன்னர்களும் கட்டியங்காரனும் சீவகனேடு போரிடுகின்றனர். சீவகன் சிறிதும் அஞ்சாமல் அவர்களை எதிர் நின்று தாக்கி வெற்றிபெறுகின்ருன். இது சீவகன்பெற்ற இரண்டாவது வெற்றியாகும்.

எந்திரப்பன்றியைவீழ்த்தி, தன் மாமன் மகளை மணக்கச் சீவகன் வெளிப்பட்டபோது, கட்டியங்காரன் பெரியபடையுடன் சீவகனேடு போர் புரிகின்ருன். மூன்ரும் முறையாகவும் சீவகன் வெற்றி பெற்றுத் தன் பகைவரை வீழ்த்துகின்ருன்,

## இனிய பண்புகள்

சீவகன் தாழ்ந்த நிலையில் பிறந்து, படிப்படியாய் அறிவு ஆற்றல்களால் உயர்ந்து விளங்குகின்றான். மக்களின் வாழ்க்கை முடிகின்ற இடமாகிய சுடுகாட்டில் யாருமற்ற நிலையில் பிறந்து, எளிய வணிகன் ஒருவன் வீட்டில் வளர்ந்து, பின்னர் எல்லா நலங்களும் பெற்றுச் சிறப்படைகின்றான். இனியபண்பு களாலும் விடாமுயற்சியாலும் கடும் உழைப்பாலும் முன்னேறு கின்றான். அவன் எல்லோருக்கும் நன்மை செய்கின்றான். மக்களுக்கேயன்றி விலங்குகளுக்கும் நன்மை புரிகின்றான். அவனிடம் எல்லோரும் விரும்பத்தக்க பல இனிய பண்புகள் உள்ளன.

சிறு வயதில் சீவகனைக் கண்டபோது, அவனுடைய ஆசிரியர் அச்சணந்தியின் 'யானைத் தீ' என்னும் தீராப்பசி நீங்குகிறது. காளையாய் அவன் வளர்ந்தபின், வேடர் கவர்ந்து சென்ற ஆனிரையை மீட்டு வந்து இடையர்களுக்கு நன்மை செய்கின்றான். வேடர்களைக் கொல்லாமல் அச்சுறுத்தியே நிரையை மீட்கின்றான். மதங்கொண்ட யானையிடம் சிக்கிக் கொண்ட குணமாலையைக் காக்கின்றான். அடிபட்டுக் கிடந்த நாயின் காதில் மறை மொழிகளை ஓதி உய்விக்கின்றான். காட்டுத்தீயில் அகப்பட்ட யானைகளைக் காக்கின்றான். பாம்பு கடித்ததால் உயிர் துறக்கும் நிலையில் மயங்கிக் கிடந்த பதுமை யைக் காக்கின்றான். சித்திர கூடத்து முனிவருச்கு அறிவுரை கூறி நன்னெறி காட்டுகின்றான். வழிப்போக்கன் ஒருவனுக்கு அணிகலன்கள் தந்து அறநெறி உணர்த்துகின்றான்.

## பல்கலைப் புலமை

சீவகன் பல்வேறு கலைத்திறன்கள் உடையவன். யாழிசை யில் வல்லவன். சுண்ணப்பொடி ஆயும் திறன் பெற்றவன். அஃறிணை உயிர்களின் மொழியறிந்தவன். யானையை அடக்

கும் கலை தெரிந்தவன். மாறுவேடம் புனையும் கலையில் தேர்ந் தவன். நஞ்சு தீர்க்கும் மருத்துவக்கலை கற்றவன். திரியும் எந்திரப் பன்றியைக் கூர்ந்து நோக்கி எய்யும் வில்லாற்றல் படைத்தவன். காண்போர் மயங்கும் கட்டழகு வாய்ந்தவன். சீவகன் பல பெண்களை மணப்பதற்கு அவன் கற்ற கலைகளே துணை செய்கின்றன. மேலும் துணை வலிமையைப் பெருக்கிக் கொள்ளவும் நாட்டிற்குத் தலைவனாக முடிசூடவும் அவனது இனிய பண்புகளே காரணமாக உள்ளன.

## ஒழுக்கமும் நல்வழி காட்டலும்

எண்மரை மணந்த சீவகன் காமுகன் அல்லன். அவன் சிறந்த ஒழுக்கக் கட்டுப்பாடு உடையவன் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இடையர் தலைவன் நந்தகோன் மகள் கோவிந்தை எழில்மிக உடையவளாய் இருந்தும் சீவகன் அவளை மணக்கவில்லை. மணந்துகொள்ளுமாறு நந்தகோன் வேண்டியும் மறுத்துவிட்டான். மேலும் அனங்கமாவீணை என்ற ஆடல்மகள், சீவகனைப் பெரிதும் விரும்பித் தன் விருப் பத்தை வெளிப்படுத்துகின்றாள். சீவகன் அவள் இச்சைக்கு உடன்பட மறுத்து அறிவுரை கூறுகின்றான். காட்டு வழியில் அனங்கமாலை என்னும் பெண் (வழிப்போக்கன் ஒருவனின் மனைவி) சீவகனை விரும்பியபோதும் அவன் அவளுக்குச் சிறந்த மொழிகளைக் கூறிச் செல்கின்றான். அவளுடைய கணவனை வழியில் சந்தித்த போதும், அவள் தீய ஒழுக்கத்தை கூறாமல் பொதுவாகப் பெண்மனத்தின் தாழ்வைக் கூறிச் செல் கின்றான். இவையாவும் அவன் காமுகன் அல்லன் என்பதை உறுதிப்படுத்தும்.

## செங்கோல் மன்னன்

சீவகன் நாட்டின் பெரு வேந்தனாய் முடி சூடியபின், நாட்டுமக்களுக்குப் பல நன்மைகளைப் புரிகின்றான். பதினைந்து

ஆண்டுகளுக்கு வரிகளையெல்லாம் நீக்கிவிடுகின்றான். மக்கள் அனைவரும் அன்பு பூண்டு ஒற்றுமையாய் இருந்து பசியும் பகையும் நோயும் இன்றி வாழ வழி வகுக்கின்றான். மேலும் கண் பார்வை இழந்து ஒடுங்கிக் கிடந்தோர், நோயுற்று நலிந்தோர், கணவனால் புறக்கணிக்கப்பட்ட மகளிர் ஆகியோர்க்குப் புகலிடங்கள் அமைத்து, அவை முட்டுப்பாடு இன்றித் தொண்டாற்றி வருவதற்குப் பெரும் பொருளும் நல்குகின்றான்.

## நன்றியறிதல்

சீவகன் மன்னனாகி அரியணை ஏறியபின்னர், இளமைக் காலத்தில் உதவி செய்த அனைவர்க்கும் நன்றி செலுத்துகின்றான். சிறந்த பரிசும் பொருளும் வழங்குகின்றான். தான் பிறந்த சுடுகாட்டைத் திருத்தி அறக் கோட்டமாக்குகின்றான். தன் தாயைக் காத்த மயிற் பொறியின் ஓவியம் தீட்டி மகிழ்கின்றான். தன் பெற்றோர் வாழ்க்கை வரலாற்றை நாடகமாக நடிக்க ஏற்பாடு செய்கின்றான். தான் சிறுவனாய் இருந்த போது விளையாடி மகிழ நிழல் தந்த ஆலமரத்திற்குச் சிறப்புச் செய்கின்றான். தன் நண்பர்க்கும் தனக்கு உதவி செய்தவர்க்கும் பொருள் தந்து உதவுகின்றான். இவ்வாறு சீவகன் பிறர்செய்த நன்றியை மறவாமல் போற்றுகின்றான்.

## முழு மனிதன்

சீவகன் பழகுதற்கு இனியவன். காண்போர் விரும்பும் கட்டழகன். ஆசிரியர் உள்ளங் கவர்ந்த மாணவன். கடமை தவறாத மனிதன். பகைவர்க்கும் அருள் செய்யும் கருணை மறவன். தந்தையின் கனவை நனவாக்கும் மைந்தன். காதல் மிகுந்த கணவன். செய்நன்றி மறவாத பண்பாளன். அறநெஞ்சம் கொண்ட நல்லவன். குடிமக்களுக்கு நன்மை புரியும் செங்கோல் மன்னன். பெற்றதாய்மீது எல்லையற்ற பாசமுடைய மகன். இடுக்கண் களையும் தோழன். கலைகள் வல்ல கலைஞன். யாவரும் போற்றும் முழு மனிதன்.

# 7. காப்பியத் திறன்

பெருங்காப்பியம் ஒன்றை எழுதும் புலவருக்கு நினைவாற்றல் மிகுதியாக வேண்டும். இன்றேல் சில நிகழ்ச்சிகள் மாறுபடும். தொடர்ச்சி விட்டுப்போகும். முன்னுக்குப் பின் முரணாகச் செய்திகள் அமைந்துவிடும். திருத்தக்கதேவர் நினைவாற்றல் மிக்கவர். ஓரிடத்தில் ஒரு செய்தியைக் கூறி, பல நிகழ்ச்சிகளுக்குப் பின்னால் முன்னர்க் கூறிய செய்தியைத் தொடர்பு படுத்துகின்றார். ஓரிடத்தில் கூறிய நிகழ்ச்சியை வாய்ப்பு நேரும் போதெல்லாம் நினைவூட்டித் தம் கருத்தை நிலைநாட்டுகின்றார்.

தன்னேரில்லாத் தலைவனாய் விளங்கும் சீவகன், காந்தருவதத்தையை இசைப்போட்டியில் வென்றதைக் குறிப்பிடும்போது,

> ''விஞ்சைக்கு இறைவன் மகள் வீணையில்
> தோற்றவாறும்'' –11

என்று கூறுகின்றார். சீவகன் வென்றான் என்று கூறாமல் காந்தருவதத்தை தோற்றாள் என்று இங்கே கூறியிருப்பது கருதத் தக்கதாகும். நச்சினார்க்கினியர், ஒரு மகளை வென்றான் என்றல் இவன் தலைமைக்கு இழிவு என்று அவள் செய்தியாகக் கூறினார்'' என்று விளக்கியுள்ளார்.

சீவகனின் இசை வெற்றியை மற்ற இடங்களில் குறிப்பிடும்போதும் தேவர் இம்முறையை மாற்றிக் கொள்ளவில்லை. இசைப் போட்டியில் கலந்து கொள்ளச் செல்லும் சீவகனின் தோற்றப் பொலிவைக் கண்ட பெண்கள், காந்தருவதத்தை

சீவகனுக்குத் தோற்பது உறுதி என்று பேசிக்கொண்டு நின்றதை,

''தோற்றனள் மடந்தை நல்யாழ்
தோன்றலுக்கு என்று நிற்பார்'' -702

என்று குறிப்பிடுகின்றார்.

மேலும் போட்டியின் முடிவை,

''மாதர் இசை தோற்று இருந்தனளே'' -735

என்று குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு மூன்று இடங்களிலும் சீவகன் இசைப் போட்டியில் வென்றான் என்று கூறாமல், காந்தருவதத்தை தோற்றாள் என்றே மறவாமல் குறிப்பிட்டுள்ளார்.

மற்றொரு நிகழ்ச்சியைப் பாடும்போதும் தேவர் தம் நினைவாற்றலை வெளிப்படுத்துகின்றார். அமைச்சன் கட்டியங்காரன், சச்சந்த மன்னனைப் போரில் கொன்றுவிட்ட நிகழ்ச்சியைப் பாடும்போது,

தோய்ந்த விசும்பென்னும் தொன்னுட்டகந்
தொழுது புலம்பெய்தி மைந்தர் மாழ்க
ஏந்து முலையார் இனைந்திரங்கக் கொடுங்கோல்
இருள்பரப்ப ஏஎபாவம்
ஆய்ந்த குருகுலமாம் ஆழ்கடலினுள
முளைத்த அறச்செங்கோலாய் கதிரினை
வேந்தர் பெருமானைச் சச்சந்தனை
மந்திரிமாநாகம் உடன் விழுங்கிற்றன்றே' -290

என்று சிறந்த உவமைகளுடன் பாடியுள்ளார். செங்கோல் செலுத்தி நாடாண்டு வந்த சச்சந்தன் என்னும் கதிரவனை, கொடுங்கோல் இருள் எங்கும் பரவுமாறு அமைச்சன் கட்டியங்காரன் என்னும் கருநாகம் விழுங்கியது என்று கூறுகின்றார்.

சச்சந்தன் இறந்தபின் சீவகன் பிறந்து வளர்ந்து ஆண்மைமிக்க பெருவீரனாய் விளங்கிக் கட்டியங்காரனைப் போரில் கொன்று வாகை சூடுகின்றான். சீவகன் பெற்ற வெற்றியை,

> ''ஒல்லைநீர் உலகம் அஞ்ச
> ஒளியுமிழ் பருதி தன்னை,
> கல்லெனக் கடலின் எற்றி
> கவுட்படுத்திட்ட நாகம்
> பல்பகல் கழிந்த பின்றைப்
> பன்பணி நாகம் தன்னை
> வில்லை வாய் போழ்ந்து போந்தவர்
> மழகதிர் நின்றது ஒத்தான்''—2324

என்று பாடுகின்றார்.

ஒளிவீசும் கதிரவனை நாகம் கவர்ந்து உண்டு பல நாட்கள் கழிந்த பின்னர், இளங்கதிரவன் நாகத்தின் வாயைப் பிளந்து கொண்டு வெளியே வந்து நிற்பதைப்போல் சீவகன் விளங்கினான் என்று குறிப்பிடுகின்றார்.

இவ்விடத்திலேயும் தேவரின் நினைவாற்றல் நன்கு வெளிப்படுகின்றது. இரண்டாயிரம் பாடல்களுக்குப் பின் கூறும் உவமையை, சிறந்த நினைவாற்றலுடன் சிறப்பாகவும் பொருத்தமாகவும் புனைந்திருக்கின்றார். இரண்டு பாடல்களுக்கும் இடையில் எத்தனையோ நிகழ்ச்சியும் வருணனையும் உவமையும் வருகின்றன. அவற்றையெல்லாம் பாடி முடித்த பின்னர் முன் நிகழ்ச்சியைத் தொடர்புபடுத்தி, முன்னர்க் கூறிய உவமையை நினைவுப்படுத்திப் பாடியுள்ள தேவரின் நினைவாற்றல் நமக்கு வியப்பைத் தருகின்றது.



3

# 8. சொல் விருந்து

கவிஞர்கள், சொற்களின் துணையால் இலக்கியம் படைக்கின்றனர். அவர்களின் நெஞ்சத்தில் தேங்கியிருக்கும் உணர்ச்சி, கற்பனை, கருத்து ஆகியவற்றைச் சொற்கள் சுமந்து கொண்டு வெளியே வருகின்றன. வழக்கில் உள்ள எளிய சொற்களும் எல்லோரும் அறிந்த சொற்றொடர்களும் அவர்கள் வாக்கிலிருந்து வெளிப்படும்போது புதிய ஆற்றலோடு மின்னிப் பொலிகின்றன. ("Poets will always get as much beauty out of words as they can" The Epic. Abercrombie. Page 37). இரும்பைப் பொன்னாக்கும் இரசவாதக் கலைஞரின் ஆற்றலை விடச் சிறந்த ஆற்றல் கவிஞர்களிடம் உண்டு என்பதை உணர்ந்தே கவிஞர்களை 'அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர்', 'கூரிய தீஞ்சொல் வவ்விய கவிஞர்', 'சொல்லேருழவர்' என்றெல்லாம் புகழ்ந்துள்ளனர்.

திருத்தக்க தேவர், தம் நூலைக் கற்போர் புலமைக்குச் சொல்விருந்து அளிப்பதில் வல்லவராய் விளங்குகின்றார். நாம் அறிந்த எளிய சொற்கள் அவருடைய வாக்கிலிருந்து, புதிய ஆற்றலோடு வெளிப்பட்டுப் புதுப்பொருளைத் தந்து இன்பமூட்டுகின்றன; முன் தோன்றாத பொருளை எல்லாம் தோற்றுவித்து மகிழ்விக்கின்றன. உப்பைக் 'கடல்விளை அமுதம் (805) என்றும், காக்கையைக் 'கரும்பிள்ளை' (1252) என்றும், நெருஞ்சி முள்ளை 'நெருஞ்சி ஈன்ற பழம்' (341) என்றும், சுவைபடக் கூறுகின்றார். பருப்புச் சோற்றை வண்ணச் சுவை அமுதம் (2604) என்கின்றார். மேலும் அதன் நிறத்தைக் குறிக்கப் 'பொன் வண்ணப் புழுக்கல்' (1712) என்றும், செம்பொன் வண்ணப் புழுக்கல் (928) என்றும் கூறி இன்பமூட்டுகின்றார். ஒலிக்கும் கிண்கிணியும் சிலம்பும் தேவரால் தவளைக் கிண்கிணி (243) என்றும், மழலைப் பொற்சிலம்பு (688) என்றும் புதுப்பெயர் பெறுகின்றன. முழு நிலவுக்குப் பசுங் கதிர்க் கடவுள் (621) என்றும்,

மூன்றாம் பிறைக்குப் பிள்ளை வெண்பிறை (2890) என்றும் தேவர் பெயரிடுகின்றார். கல்வி கற்ற அமைச்சரைக் கலைக் க(ண்)ணாளர் (1924) என்றும். அறவோர் சொல் கேட்டுத் திருந்தாதவரை ஓட்டை மரச் செவியர் (1552) என்றும் தேவர் கூறும்போது நாம் அளவில்லா இன்பம் அடைகின்றோம்.

மக்கள் உடம்பை ஆரமிர்து (377) என்றும் ஊன் செய், கோட்டம் (1552) என்றும் பெருமையோடு குறிப்பிடுகின்றார். போர்வீரர் உடம்பை மூடும் கவசத்தை உடம்புக்கீடு (3074) என்கின்றார். காலத்தை 'ஆருயிர் மேயும் நேமி' (796) என்று அழகாகக் கூறுகின்றார். மகளிர் பேசும் இன்ப மொழியை இன் பழக் கிளவி (324) என்றும், கலைவளர் கிளவி (1432) என்றும், கனிவளர் கிளவி (486) என்றும் தேவர் கூறும்போது உள்ளம் மகிழ்கின்றது.

''தனிமைச் சுவையுள்ள சொல்லை — எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாம் கண்ட தில்லை;''

# 9. ஓசை தரும் இன்பம்

கவிஞனுடைய உள்ளத்திலிருந்து வெளிப்படும் சொற்கள் இசையருவியாய்ப் பாடிக்கொண்டே வருகின்றன. கவிஞனின் உள்ளத் துடிப்பிற்கும் உடல் அசைவிற்கும் உணர்ச்சிக்கும் ஏற்ப ஓசைகள் வேறுபடுகின்றன. கவிஞன் படைப்பில் ஓசையும் சிறந்த இடத்தைப் பெற்று விடுகின்றது. பாட்டைக் கற்போர் அதில் மறைந்து கிடக்கும் ஓசையைத் தேடிக் கண்டு பிடித்துப் பாடும்போதுதான் பாட்டுச் சுவைக்கின்றது. பாட்டு, செவியால் நுகர வேண்டிய கலை, கம்பர் 'செவி நுகர் கனிகள்'

என்று கவிதைகளைக் குறிப்பிடுகின்றார். செவி நுகர் கனிகள் பலவற்றை நுகர்ந்து மகிழ்ந்த பாரதியார்,

ஆசைதரும் கோடி அதிசயங்கள் கண்டதிலே
ஓசைதரும் இன்பம் உவமையிலா இன்பமன்றே!
(—குயில்பாட்டு)

என்று வியந்து பாடுகின்றார்.

தேவர் காப்பியத்தில், பலவகையான ஓசைகள் அமைந்துள்ள பாடல்களைக் காணலாம். இடத்திற்கு இடம் காலத்திற்கு காலம் ஓசை வேறுபடுகின்றது. பேசும் மாந்தரின் பண்பு, உணர்ச்சிநிலை, உள்ளப்போக்கு ஆகியவற்றிற்கு ஏற்பத் தேவர் ஓசைகளைத் திறம்பட மாற்றியமைத்துள்ளார்.

சுடுகாட்டில் மகனை ஈன்ற விசயை எழுப்பும் துன்பக் குரல், காப்பியங் கற்போர் அனைவர் உள்ளத்திலும் சென்று எதிரொலிக்கின்றது. அழுகையொலியை-அவள் உள்ளத்தில் தேங்கிக் கிடக்கும் துன்ப உணர்ச்சியைப் பாட்டில் ஓசை மிக நன்றாக வெளிப்படுத்துகின்றது:

"வெவ்வாய் ஓரி முழுவாக,
விளிந்தார் ஈமம் விளக்காக,
ஒவ்வாச் சுடுகாட் டுயர் அரங்கில் —
நிழல்போல் நுடங்கிப் பேயாட,
எவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக்
கூகை குழறிப் பாராட்ட
இவ்வா றாகிப் பிறப்பதோ?
இதுவோ மன்னர்க் கியல்வேந்தே!"

இந்தப் பாட்டில் பெண்ணின் துன்பக் குரல் (ஒப்பாரி) மிகத் தெளிவாக ஒலிக்கின்றது இத்தகைய புலம்பல் ஓசை வேறுபாடல்களிலும் (1800 – 1808) அமைந்துள்ளது.

வணிகன் சீவகனைத் தன் விஞ்ஞையால் தன்னிடம் வர வைத்த விஞ்சையன் தான் கருதியதை இனிது முடித்ததை எண்ணி எக்களிப்போடு பேசும் பேச்சைத் தேவர் பாடுகின்றார்.

ஈரலங்கல் ஏந்துவேல்
ஆரலங்கல் மார்பினன்
கார்கலந்த கைக்கணி
சீர்கலந்து செப்பினன். –(576)
துன்பமுற் றவர்க்கலால்
இன்பமில்லை ஆதலின்
அன்ப! மற்று யான் நினைத்
துன்பத்தால் தொடங்கினேன்–(579)

பாட்டின் ஓசையே விஞ்சையனின் நெஞ்சக் களிப்பை நன்கு உணர்த்திவிடுகின்றது!

சீவகன் பாடிய இசையின் மேன்மையைத் தேவர் மெல் லோசையில் பாடுகின்றார்:

ஊரரோடு மக்கள் வீழ்ந்தார்
சோர்ந்தன புள்ளும் மாவும்
உருகின மரமும் கல்லும்
ஓர்த்தெழீஇப் பாடு கின்றான்! -(723)

அமைதியும் நெகிழ்ச்சியும் பாட்டின் ஓசையில் வெளிப்படு கின்றன.

திரைகள் அலைப்ப, கமலப் பள்ளியில் வெள்ளை அன்னம் உறங்கும் இன்பக் காட்சியை,

தோயும் திரைகள் அலைம்பத்
தோடார் கமலப் பள்ளி
மேய வகையில் துஞ்சும்
செள்ளை அன்னம் காண்மின்!-(930)

என்று பாடுகின்றார். இங்கே ஓசையும் அன்றோ உறங்கு கின்றது!

சோற்றுத் திரளில் வாய் வைத்த நாயை அந்தணர் வெகுண்டு புடைக்கின்றனர். அந்தணர் சீறி முழங்கும் முழக்கம், நாயை மொத்தும் ஆரவாரம் ஆகியவற்றை,

கல்லொடு வன்தடி கையினர்! காற்றினும்
வல்விரைந் தோடி, வளைந்தன ராகிக்
கொல்வது மேயினர், கொன்றிடு கூற்றினும்!
வல்வினை யார்வலைப் பட்டதை யன்றே-(935)

என்று தேவர் பாடி, ஓசையாலே விளக்கி விடுகின்றார்.

தன் நாயைக் கொன்றுவிட்ட அந்தணரைக் கண்டு களிமகன் 'மழலைச் சொற்களின் வைது' பேசும் பேச்சு இது:

புடைத்தென் நாயினைப் பொன்றுவித் தீர், உயிர்
கடுக்கப் போர்த்தனிர் தம்மின்! கலாய்க்குறின்
தடக்கை மீளிமை தாங்குமின்! அன்றெனின்
உடைப்பென் கட்குடம்! என்றுரை யாடினான்.

களிமகன் பேச்சில் இருக்கும் தடுமாற்றத்தைப் பாட்டின் ஓசை வெளிப்படுத்துகின்றது!

பந்தாடும் பெண் ஒருத்தியின் ஆட்டத்தை,

குழல்ம லிந்த கோதை மாலை
பொங்க வெங்க திர்ம் முலை
நிழல் மலிந்த நேர் வடந்தி
முற்படப்பு டைத்தர,
எழில்ம ணிக்கு ழைவில் வீச
இன்பொ ளோலை மின்செய
அழல்ம ணிக்க லாப மஞ்சி
லம்பொ டார்ப்ப ஆடுமே!–(1952)

என்ற பாட்டில் இனிது விளக்குகின்றார். இளம் பெண் குறித்து எழுந்து ஆடிப்பாடி அணிகலனும் குழலும் அசைய அசைய ஆடும் ஆட்டத்தை ஒலியே நன்கு காட்டுகின்றது.

சுரமஞ்சரியை மணக்கக் கிழவனாய் உருக்கொண்ட சீவகன் தோற்றத்தை,

வெண்ணரை உடம்பினன்; விதிர்த்த புள்ளியன்,
நுண்ணவிர் அறுவையன்; ஒசிந்த நோக்கினன்,
கண்ணவிர் குடையினன்; கைத்தன் றின்றினன்,
பெண்ணலங் காதலிற் பேயும் ஆயினான்(2010)

என்று குறிப்பிடுகின்றார். கிழப் பருவத்தின் தளர்ச்சியும் நடுக்கமும் தடுமாற்றமும் ஓசையில் வெளிப்படுகின்றன.

இரு பெரும் படைகளும் போரிட எழுந்தபோது உண்டான ஒலியை,

குணில்பொரக் குளிறின முரசம்! வெள்வளை
பணைபரந் தார்த்தன! பம்பை வெல்மின!
இணையில எழுந்தநாழ் பீலி எங்கணும்!
முனையினால் கடலக முழக்கம் ஒத்தவே! -(2222)

என்ற பாட்டில் முழக்குகின்றார் தேவர்.

போர் முடிந்தபின், போர்க் களத்தில் குவிந்து கிடக்கும் பிணத்தைக் கண்டு இரங்கிப் பாடுகின்றார்.

குடர்வாங்கு குறுநரிகள் கொழுநிணப் புலாற் சேற்றுள்
தொடர்விங்கு கதநாய்போல் தோன்றின.—(2442)

இப்பாடலில் நெகிழ்ந்த ஓசை உள்ளது.

*சீவகன் ஆருகக் கடவுளைத் தொழுது ஏத்தும் பாடல் இது!*

''திருமறு மார்பனே! திலகமுக் குடையினை!
*அருமறை தாங்கிய அந்தணர் தாதையை!''-(2561)*

இதில் உள்ள ஓசை அமைதியாக உள்ளது. ஆண்டவன் திருவடியை நினைக்கும்போது எதிலும் அமைதி ஏற்பட்டுவிடுகின்றது!

'பாட்டைத் திறப்பது பண்ணாலே!'—பாரதியார்

# 10. உவமை நயம்

புலவர் தம் புலமைத் திறனை வெளிப்படுத்தும் பலவகை வாயில்களுள், உவமையும் ஒன்று. புலவர் ஒருவர் எடுத்தாளும் உவமை, அவர் புலமையை அளந்து அறிவதற்குச் சிறந்த அளவுகோலாய் உள்ளது. உவமையே பல்வேறு அணிகளுக்கும் தாயாய் உள்ளது.

சிந்தாமணியில் கற்போர் நினைவை விட்டு அகலாத உவமைகள் பல உண்டு. தேவரின் புலமைத் திறனை வெளிப்படுத்தும் அரிய உவமைகள் உண்டு. பேசும் மாந்தரின்

உள்ளப் பாங்கினை அறிந்து தேவர் அமைத்த உவமைகள் உண்டு. உவமை தேடிப் புகுவார்க்குச் சிந்தாமணி சுடர் மணிக் களஞ்சியமாகக் காட்சிதரும்.

**எளிய உவமைகள்:** பெருங் குகைகளில் உறங்கும் மலைப் பாம்புகளுக்குப் பனை மரத்தை உவமை கூறுகின்றார். 'பனை மடிந்தனையன பாந்தள் கண்படுப்பன' (1900) என்று தேவர் கூறி, அவற்றின் வடிவத்தையும் நிறத்தையும் நன்கு விளக்குகின்றார் மையுண்ட கண்ணிலிருந்து விழும் கண்ணீர்த் துளிகளுக்குத் தாமரை மலரிலிருந்து விழும் கருமுத்துக்களை உவமையாகக் கூறுகின்றார் (2508). கருமுகின் மேல் விரிந்த பாளை, நிரை கதிர் நித்திலங்கோத்து வைத்தபோல் உள்ளன என்கின்றார் (99). 'புலிக் கண் போலச் சிவந்து உருண்டு கொழுஞ்சுவைக் கருணைக் கிழங்கு உள்ளது என்றும், முனை முறியா நல்லரிசிச் சோறு முல்லை முகை போலவும், கொக்கின் உகிர்போலவும் உள்ளன என்று உரைக்கின்றார் (2972). எண் வகையான மலர்களைக்கூறி (1650, 51) அவற்றின் வடிவத்திற்கு ஏற்ற பொருள்களை உவமைகளாகக் கூறும் தேவரின் உற்றுநோக்கும் திறன் வியப்பளிக்கின்றது.

**குயவன் செயல்:** போர்க்களத்தில் திரியும் தேவதத்தனின் குதிரை, முறுக்கிவிட்ட குயமகன் திகிரிபோலத் திரிந்ததாய்க் கூறுகின்றார். (786) வேறு ஓர் இடத்தில் குயவனின் செயல் உவமையாக வந்துள்ளது. தக்க காலம் வந்ததும் சச்சந்தனைக் கொன்று அரசைக் கைப்பற்றிய கட்டியங்காரன் 'வனைகலக் குயவன் நாண்போலச் செயல்பட்டதாகக் கூறுகின்றார் (2614). இக் கருத்தையே 'மட்பகை மாணத் தெறும்'—என்ற குறளுக்கு விளக்கமாக எழுதுகின்றார் பரிமேலழகர்.

இல்பொருள் உவமைகளும் சிந்தாமணியில் உண்டு. வெண்ணெய்க் குன்றம் எரியுண்பதையும் (1297), உப்புக்

குன்றம் புனற்கு உடைதலையும் (818) தேவர் உவமைகளாகக் கூறுகின்றார்.

**விழுப்புண்:** போரில் புண்பட்ட வீரர்களின் தோற்றத்தைப் பாடுவதில் தேவர் வல்லவராய் விளங்குகின்றார். 'முதுமரப்பொந்து போல முழு மெ(ய்)யும் புண்கள்' (819) என்றும், 'இறைச்சி கொத்தும் பட்டடை மரம்போல' (ஊன் அமர் குறடு போல)ப் போர்க்கருவிகள் பட்டு வடு உண்டாகிய மார்பு (2281) என்றும் அவர் பாடுகின்றார்.

வீரன், தன்மேல் வந்த வேலாகிய விருந்தை மகிழ்ந்து எதிர்கொண்டு தன் மார்பை அதற்கு உணவாகத் தந்தான் என்றும் (2289), அவன் மார்பு (விருந்தினர்) உண்டு மிகுந்த மிச்சில் (2281, 1790) என்றும் பாடுகின்றார்.

'வில் பழுத்து உமிழ்ந்த வெய்ய வெந்நுனைப் பகழி' (435) என்று சுவைபடக் கூறுகின்றார். இங்கே, உவமை உருவகமாகி, அதுவும் குறுகிக் குறுகி, குறிப்பு உருவகமாகி இரண்டொரு சொல்லில் மறைந்து கிடக்கிறது.

**உவமைப்பொருத்தம்:** திருத்தக்க தேவர் தாம் படைக்கும் காப்பிய மாந்தர் பண்பு, பழக்க வழக்கம், அறிவு ஆகியவற்றிற்கேற்ற உவமைகளையே அவர்தம் பேச்சில் அமைக்கின்றார். இம் மரபு தமிழுக்குப் புதிதன்று. தொல்காப்பியர் உவமை இயலில்

> கிழவி சொல்லின் அவள்அறி கிளவி—(26)
>
> தோழிக்கு ஆயின் நிலம் பெயர்ந்து உரையாது—(27)
>
> கிழவோற்கு ஆயின் உரனொடு கிளக்கும்—(28)

என்று குறிப்பிட்டுள்ளார். தேவர் தொல்காப்பிய நெறியிலிருந்து மேலும் உயர்ந்து சென்று சிறந்த நெறி ஒன்றைச்

கண்டு போற்றி உவமை அமைத்துள்ளார். பேசுகின்ற மக்கள் யாராய் இருப்பினும் அவர்களுக்கு ஏற்ற உவமைகளைக் கூறுகின்றார்.

சீவக சிந்தாமணி ஆயர் பேசும் பேச்சில் அமைந்துள்ள உவமைகள் யாவும் அவர்கள் அறிந்த-கண்டு பழகிய பொருள்களாகவே உள்ளன. அவர்களுடைய தொழிலும், பண்பும், அறிவுநிலையும் அவர்கள் கூறும் உவமைகளின் வாயிலாக வெளிப்படுகின்றன. அவர்கள் வாயிலாக அன்றித் தாமே உவமை கூறும் போதும் தேவர் இந்நெறிக் கைவிடவில்லை. அம் மக்களை நினைந்து நினைந்து தாமும் அவர்களாகவே மாறுகின்றார்.

புள் நிமித்தங்களை ஆராய்ந்து ஆயர்களுக்குக் கூறும் வள்ளுவனை ஆதீண்டு குற்றி (பசு தன் தினவைப் போக்க உராய்வதற்காக நட்ட தூண்) போன்றவன் என்கின்றார். (ஆய்த்தியர் நலக்கு ஆசெல் தூண் அ(ன்)னான் (4, 9).

ஆயருடன் போராடி வேடர்கள் ஆனிரை கவர்ந்த செய்தியை.

> ''மத்தம் புல்லிய கயிற்றின் மற்றவர்
> அத்தலை விடின் இத்தலை விடார்
> உய்த்தனர்''—(423)

என்று இடையர்க்கேற்ற உவமையுடன் கூறுகின்றார்.

பசுக்களைக் கவர்ந்த வேடர்களுக்கு முன் நில்லாது ஓடிய ஆயர், 'மத்து எறி தயிரின் ஆயினார்' (421) என்று குறிப்பிடுகின்றார். ஆயர்களுக்கு ஏற்ற உவமை கூறிய தேவர் ஆயர் பேச்சில் அவர்களுக்கு ஏற்ற உவமைகளை அமைக்கின்றார்.

நந்தகோன் தன்மகள் கோவிந்தையின் சிறப்பைச் சீவகனுக்குக் கூறும் போது,

வெண்ணெய் போன்று ஊறு இனியன்
மேம் பால் போல் தீஞ்சொல்லன்
உண்ண உருக்கிய ஆன் நெய் போல் மேனியன்—(480)

என்று தான் அறிந்த பொருள்களையே உவமையாகக் கூறுகின்றான்.

கோவிந்தைக்குத் திருமணம் நிகழ்கையில் ஆய்ச்சியர் "பசுவும் தொழுவும் போன்று ஊழிதோறும் நீயும் நின் கணவனும் சேர மூப்பிராக", என்று மணமக்களை வாழ்த்துகின்றனர். (ஊழி தோறு ஆவும் தொழுவும் போன்று உடன் மூக்க!'') (46). இடையா மகளுக்கு, இடைச்சியர் கூறும் பொருத்தமான வாழ்த்து இது!

வேறோர் இடத்திலும் இத்தகைய பொருத்தமான உவமைகள் சிந்தாமணியில் இடம் பெற்றுள்ளன. காட்டில் சீவகன் சந்திக்கும் வேடனை 'வாழ்மயிர்க் கரடி ஒப்பான்' என்றும் 'மேழகக் குரலினான்' என்றும் கூறுகின்றார் தேவர். விலங்குகளோடு பழகிப் பழகி, விலங்குகளை எண்ணி எண்ணி, விலங்குகளைக் கொன்று தின்று தின்று வாழும் வேடன் விலங்காகவே ஆகிவிட்டான். வேடனை நினைக்கும் தேவர், விலங்குகளையே உவமை கூறுகின்றார்.

சிறந்த உவமைகள் : தமிழிலக்கியத்தில் உயர்ந்து விளங்கும் சிறந்த உவமைகள் பல, சிந்தாமணியுள் இடம் பெற்றுள்ளன. பல நூல்களைக் கற்ற பின்னரும் அந்த உவமைகள் நம் நினைவை விட்டு அகலாமல் நிற்கின்றன. அவை யாவும் தேவரின் அரிய படைப்புகள். அவை பிறரிடமிருந்து கடன் வாங்கியவையோ, வேறொருவர் கருத்தை வாங்கி மாற்றி அமைத்தவையோ அல்ல.

ஏரில் பூட்டப் பெற்று, உழுதொழிலில் ஈடுபட்டுள்ள எருமைகள் இரண்டும் 'மாமனும் மருமகனும் போலும் அன்பின' (43) என்று தேவர் கூறுகின்றார். கணவன் மனைவி போலவும், அண்ணன் தம்பி போலவும் அன்பின என்றும் உவமை கூறியிருக்கலாம். ஆனால் தேவர் கூறினாரா? ஆண் எருமைகள் (கடா) இரண்டிற்குக் கணவனையும் மனைவியையும் — அதாவது ஆணையும் பெண்ணையும் உவமை கூறுவது பொருந்துமா? மேலும் மனக் கசப்பு இல்லாமல் வாழும் அண்ணன் தம்பிகள் மிகச் சிலர். எனவே 'மாமனும் மருமகனும்போல்' (43) என்று தேவர் உவமை கூறினார்.

சொல்லரும் சூழ்பசும் பாம்பின் தோற்றம்போல்— என்று தொடங்கும் பாடலில் (53) இடம் பெற்றுள்ள மூன்று உவமைகளும் எண்ணி எண்ணி மகிழத்தக்கவை.

முனிவருடைய தவப்பயன் போலே செல்வம் ஓங்கிய நகரம் என்று இராசமாபுரத்தைக் குறிக்கின்றார்.

> "பெண்வலைப் படாதவர் பீடின் ஓங்கிய
> அண்ணலங் கடிநகர்" -(78)

இவ்வுவமை தேவரின் திருவுள்ளத்தை இனிது விளக்குகின்றது.

சீவகனைப் பிரிந்த தோழர்களின் வருத்தத்திற்கு உவமையாக, வாட்போரில் தகைமை சான்ற தன் மருப்பை இழந்த செருக்குடை யானையின் துன்பத்தைக் கூறுகின்றார்.

> "தருக்குடை வேழம் வாளார்
> ஞாட்பினுள், தகைமை சான்ற
> மருப்புடன் இழந்தது ஒத்தார்"-(1133)

முத்தொள்ளாயிர ஆசிரியர் போர்க்களத்தில் கொம்பும் நகமும் இழந்த களிறு பிடி முன்பு செல்ல நாணுவதாய்ப் பாடுகின்றார் இதிலிருந்து களிறு தன் கொம்பின் மீது கொண்டுள்ள பற்றும், அதை இழந்தால் படும் துன்பமும் வெளிப்படுகின்றன.

தவக்கோலத்தில் இருக்கும் தாய் கூறிய துன்பமான வரலாற்றைக் கேட்ட சீவகன் தன் நிலையை 'இடை மகன் கொன்ற இன்னா மரத்தினேன்'! என்று குறிப்பிடுகின்றான். இந்த உவமை ஆழ்ந்த பொருள் உடையது. இடையன், மரக் கிளையை அறவே வெட்டி மரத்தினின்றும் பிரித்து விடாமல், பாதியாக வெட்டிக் கிளையைச் சாய்த்து விடுவான். ஒட்டியும் ஒட்டாமலும் கிடக்கும் கிளையை ஆடுகள் எட்டி மேயும். பின் அக்கிளை காய்ந்தும் காயாதும் கிடக்கும். மரக் கிளையைப் பாதி வெட்டி விட்ட இடையன், சச்சந்தனைக் கொன்ற கட்டியங்காரனுக்கும்; பாதி வெட்டுண்டு மரத்தில் ஒட்டியும் ஒட்டாமலும் கிடந்து, காய்ந்தும் காயாதும் இருக்கும் கிளை, தந்தையை இழந்து தாயைக் கண்டு துன்பமும் இன்பமும் அடையும் சீவகனுக்கும் உவமையாகின்றன. ''தமிழிலக்கியத்தில் காணப்பெறும் மிகச் சிறந்த உள்ளத்தைக் கவரும் உவமைகளுள் இஃதும் ஒன்று''.

முற்காலத்தில் உயர்ந்த அணிகலன்களைக் குடத்தில் இட்டு வைப்பது வழக்கம் 'அருங்கலச் செப்பு என்ற நூலின் பெயரே இதை நமக்கு அறிவிக்கின்றது. தேவர், 'பொற்குடத்தில் திருமணிகளைப் பெய்து வைப்பதுபோல' (2639) என்ற உவமை கூறி உடம்பை எண்ணிலாக் குணங்களால் நிறைக்க வேண்டும் என்கிறார். பொற்குடமும் திருமணிகளும்! உடம்பும் உயர்ந்த பண்புகளும்! — உவமையை எண்ண எண்ண உள்ளத்தில் தேனூறு பாய்கிறது! வெறுங் குடம்போல வெற்றுடம்புகள் சில இருப்பது நினைவுக்கு வருகின்றது!

கேட்பதற்கே அருவருப்பாக இருக்கும் உவமை ஒன்றைக் கூறித் தேவர் தம் துறவுள்ளத்தைப் புலப்படுத்துகின்றார்; சீவகன் தன் மனைவியரை, புண்மேல் துணிபோல் துறந்ததாகக் கூறுகின்றார் (2960). புண்ணை ஆற்றுதற்கு அதன் மேலிட்ட

துணியை எண்ணினால் அருவருப்புத் தோன்றுகிறது! துறவி யின் உள்ளம் அத்தகையது!

தேவர் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்த சில பொருள்களும் நிகழ்ச்சிகளும் திரும்பத் திரும்பப் பல பாடல்களில் உவமை களாக வெளிப்படுகின்றன. வானவில் திங்களைப் பாம்பு விழுங்குதல் தாமரை மலர் பனியால் கருகுதல் பாரதக் கதைகள் ஆகியவைபற்றிய உவமைகளை; அடிக்கடி பல இடங்களில் கூறியுள்ளார்.

# 11. ஓவியக் காட்சிகள்

பலவகை வண்ணக் குழம்புகளைக் கொண்டு கண்ணைக் கவரும் எழிலோவியம் தீட்டும் ஓவியர்களைப்போலக் கவிஞர் கள் சில சொற்களைக் கொண்டே பலவகை வண்ண ஓவியங் களைத் தீட்டுகின்றனர் ஓவியத்தால் விளக்க முடியாத பல நுட்பங்களைச் சொல்லோவியம் காட்டுகின்றது.

திருத்தக்க தேவர் எழுதியிருக்கும் வண்ண ஓவியங்கள் கற்போர் நெஞ்சத்தில் என்றும் நிலைத்து நிற்கத்தக்கவை. தூவியஞ்சிறை அன்னம் (346) கபாறிக்கலாப மஞ்ஞை (1095) ஆகிய தொடர்கள் அப் பறவைகளை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றன. பொறியறை ஞாழல் (5:5) அட்டுநீர் அருவிக்குன்றம் (2925) வரையுமிழ் அருவி (2111) ஆகிய தொடர்கள் சிறந்த சொல்லோவியங்கள். மோதிரம் அணிந்த விரலை ஆழிமணி விரல் (2507) என்றும் வீரனின் தோளை எறும்வலி முழவுத்தோள் (785) என்றும் கூறி நம் நெஞ்சத்தில் ஓவியம் தீட்டி விடுகின்றார் தேவர்.

இலக்கணயின் தோழி, உரையிலிருந்து வெளியே எடுக்கும் சிப்பை,

"யானையுள் அரசன்த ன்அணிகிளர் வலமருப்பு ஈர்ந்து
வான்மிசை ஒளிர்செம்பொன் பதித்தொளி மணி அழுத்தி
வான்மனம் உறச்செய்த மங்கல மணிச்சீப்பு"-(2436)

என்று சொல்லோவியம் தீட்டியுள்ளார்.

பலவேறு உயிர்களின் இயக்கத்தையும், அதனால் நிகழும் சுவையான நிகழ்ச்சிகளையும் எழுதிக் காட்டும் ஓவியங்கள் பல, தேவர் நூலில் உண்டு

"தோயும் திரைகள் அலைப்பத் தோடார் கமலப் பள்ளி
மேய வகையில் துஞ்சும் வெள்ளை அன்னம்"-(930)

என்ற அடிகளில் ஓர் இனிய ஓவியம் காட்சி தருகின்றது. மணிநீர்த் தடாகம், அதன் நடுவே பூத்த செந்தாமரை மலர், அம் மலரை அசைக்கின்ற திரைகள், அசையும் மலர்மீது இனிது உறங்கும் வெள்ளை அன்னம் - ஆகியவற்றை மிக அழகாக நம நெஞ்சத்தில் வண்ண ஓவியம் தீட்டி விடுகின்றார்.

அன்னம் வாழும் தாமரைத் தடாகத்தை வேறு ஓர் இடத்தில் இதனினும் சிறப்பாகப் புனைந்துள்ளார் தேவர் :

"குடம்புரை செருத்தல், குவளைமேய் கயவாய்
குவிமுலைப் படர்மருப்பு எருமை
நடந்தவாய் எல்லாம் நறுமலர் மரையின்
நாகிலைச் சோர்ந்த அம் தீம்பால்
தடஞ்சிறை அன்னம் குருகொடு நாரைப்
பார்ப்பினம் ஓம்புதண் மருதம்". (2102)

கரிய எருமை, எருமை சொரிந்த தீம்பால் தங்கிய பசிய தாமரை இலை, பாலைத் தம் குஞ்சுகளோடு பருகும் அன்னம் நாரை முதலிய பறவைகள் ஆகியவற்றைக் கண் கவர் ஓவியம் தீட்டியுள்ளார்.

தீம்பாலை ஒற்றுமையோடு பருகும் பறவைகளை ஓவியம் தீட்டிய தேவர், மேலிருந்து சிந்தும் தேனை நக்கி முரண்படும் மீன் இனங்களைக் கீழே உள்ள பாட்டில் காட்டுகின்றார் :

''பாளைவாய்க் கமுகின் நெற்றிப்
படுபழம் முதிர விண்டு
நீள்கழைக் கரும்பின் நெற்றி
நெய்ம் முதிர் தொடையல் கீறி
வாளைவாய் உறைப்ப நக்கி
வராலொடு மறலும்''-(1198)

எவ்வளவு அழகிய இயற்கை ஓவியம் இது !

உயிர்களின் தோற்றத்தையும் செயல்களையும் வெளிப்படுத்துவதோடு அவற்றின் இன்ப துன்பங்களையும் உணர்ச்சிகளையும் எழுதிக் காட்டுவதில் தேவர் வல்லவராய் விளங்குகின்றார். உலகில் பல்வேறு இடங்களில், வெவ்வேறு காலங்களில் நிகழும் நிகழ்ச்சிகளை ஓரிடத்தில் ஒரே நேரத்தில் நிகழ்வதாய்க் காட்டுவது கலை மரபு. தேவர் அத்தகைய மரபை ஓட்டி வண்ண ஓவியம் ஒன்றைத் தீட்டியுள்ளார்.

ஒரு பெருங்காடு, அக் காட்டில் யானைகள் கூட்டமாக உறங்கிக் கொண்டிருக்கின்றன. சிறிதும் அசைவின்றிக் கற்பாறைகள் போலக் கிடக்கின்றன. குரங்குக் குட்டிகள் அவற்றைக் கற்பாறைகள் என்றே கருதி விடுகின்றன; அவற்றின் மீது ஏறுகின்றன; துள்ளி ஆடுகின்றன; பின் சிறிது தொலைவில் வெந்து கொண்டிருக்கும் சந்தனக் கட்டைகளை எடுக்கின்றன; ஒன்றின் மீது ஒன்று அக் கட்டைகளை வீசி எறிகின்றன. அதைக் கண்டு அஞ்சிய கவரிமான்கள் விரைந்து ஓடுகின்றன ! 'சிறுகண் யானையின் இனம்' என்று தொடங்கும்



4

பாட்டில் (1897) தேவர் இத்தகைய கண்கவர் ஓவியத்தைத் தீட்டியுள்ளார். கள்ளுண்டு மயங்கியவன் தோற்றத்தை,

''சுழலும் கண்ணினன்; சோர்தரு மாலையன்
கழலன்; காழகம் வீக்கிய கச்சையன் '-(939)

என்று பாடியுள்ளார்.

யானைகள் குடத்தில் நீர் சொரிய இலக்கணை நீராடும் காட்சி 'கள்ளவிழ் கமழ் கோதை'—என்று தொடங்கும் பாடலில் (2431) சிறப்பாக அமைந்துள்ளது.

திருத்தக்க தேவர் காலத்தில் பல ஓவியர்கள் வாழ்ந்திருக்கலாம். அவர்கள் வண்ண ஓவியம் பல தீட்டியிருக்கலாம். அவை இன்று இல்லை! ஆனால் தேவரின் சொல்லோவியங்கள் காலத்தையும் இடத்தையும் கடந்து வந்து வாழும் ஆற்றல் பெற்றுள்ளன. அவை கற்போர் நெஞ்சத்தில் என்றும் மின்னிப் பொலிய வல்லவை.

## 12. நோக்கு

தொல்காப்பியர் செய்யுளியலில்,

மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப்படுமே.

என்று, 'நோக்கு' என்ற செய்யுள் உறுப்புக்கு இலக்கணம் கூறுகின்றார். இதனை விளக்கும் பேராசிரியர் அகநானூற்றுப் பாடல் ஒன்றை (அகம் 4) எடுத்துக்கொண்டு நோக்கிச் சிறந்த

பொருளை வெளிப்படுத்துகின்றார். சீவக சிந்தாமணியில் மாத்திரை முதலா அடிநிலை காறும் நோக்கி நுண்பொருள் காண இடம் தரும் பாடல்கள் பல உண்டு. மூன்று பாடல்களுக்கு மட்டும் இங்கே விளக்கம் கண்டு, தேவரின் புலமை மாண்பை வியந்து போற்றுவோம்.

வீரச் சுவையை எத்தனையோ புலவர்கள் பாடிச் சிறப்பித்துள்ளனர். ஆனால் தேவர் பாடியுள்ள

> வீறின்மையின் விலங்காமென மதவேழமும் எறியான்
> ஏறுண்டவர் நிகராயினும் பீறர்மிச்சில்என் றெறியான்
> மாறன்மையின் மறம்வாடும் என்றிளையாரையும் எறியான்
> ஆறன்மையின் முதியாரையும் எறியான் அயில் உழவன்-(2261)

என்ற பாடல் தனிச் சிறப்பு வாய்ந்தது. போரில் பலரைக் கொன்று குவித்த வீரரைப் புகழும் பாடல்கள் பல உண்டு. ஆனால், இப் பாடலோ போரிடாமல் களத்தில் நிற்கும் வீரனைச் சிறப்பிக்கின்றது ''போரிடாமல் நிற்கின்ற அவன் போர்க்கலை நன்கு பயிலாதவனோ? அல்லது அவன் கையில் போர்க் கருவி எதுவும் இல்லையோ?'' என்ற வினாக்கள் எழும் அல்லவா! அதற்கு விடையாக 'அயில் உழவன்' அவன் என்று குறிப்பிடுகின்றார் தேவர். போர் முடிந்துவிட்ட நிலையில் வேலைச் சுமந்து நிற்கின்றானோ என்ற ஐயம் எழுகின்றது! அப்படியும் இல்லை! போர் மிகக் கடுமையாக நடந்து கொண்டிருக்கின்றது. ஒரு பக்கம் குன்றுபோல் களிறு வெகுண்டு வருகின்றது! இன்னொரு பக்கம் புண்பட்டவீரர் சினத்தோடு பழி வாங்க வருகின்றனர். மற்றொரு பக்கம் போரில் வல்ல இளைஞர் ஊக்கத்தோடு துள்ளி வருகின்றனர். களம்பல கண்டு, விழுப்புண் பல பட்ட முதியோர் வேறொரு பக்கம் எதிர்க்க வருகின்றனர். ஆனாலும் 'அயில் உழவன்' செயலற்று நிற்கின்றான்! இவ்வாறு நிற்பதேன்?

சீறி வரும் மத வேழம் விலங்காம்! அதற்கு வீறு இல்லையாம்! (வீறு–வேறொன்றற்கில்லா அழகு என்பர் நச்சினார்க்கினியர் 489) ஒரு கையுடைய வேழத்தை இரு கை சுமந்து வாழும் வீரன் எறிவது குறைவாம்! இவ்வாறு எண்ணி அந்த அயில உழவன் வேழத்தை எறியவில்லையாம்! மக்களிலும் புண்பட்டோர், இளையோர், முதியோர் ஆகியவரையும் எறியாமல் அவன் இருப்பதற்குத் தேவர் காரணம் கூறுகிலர். இதுவன்றோ வீரப் பண்பு! கண்ட கண்ட உயிர்களை எல்லாம் கொன்று குவிப்பவன் வீரன் ஆகான். பகைவனை எப்படியாவது கொல்பவன் மறவன் ஆகான. பகைவனுக்கும் அருளும் பண்பே வீரத்தை அணி செய்கிறது. வீரத்தை நன்கு அணி செய்யும் சிந்தாமணிப் பாடல், தமிழ் இலக்கிய வானில் பேரொளி வீசி மின்னிப் பொலியும் சுடர்மீனாக ஒளிர்கின்றது.

வீரச்சுவையைச் சிறப்பித்துப் பாடிய தேவர் நகைச்சுவையைப் பாடுவதிலும் வல்லவராக விளங்குகின்றார். மிக உயர்ந்த நகைச் சுவைப்பாடல் ஒன்று சிந்தாமணியில் இடம் பெற்றுள்ளது.

நகைச்சுவை மிகவும் நுண்ணிய சுவை. காதலுக்கு அடுத்தபடியாக நகைச் சுவையே இலக்கியத்தில் பெரிதும் இடம் பெற்றுள்ளது. நகைச்சுவை சிறிது வேறுபட்டாலும் அருவருப்பைத் தந்துவிடும்; சினத்தை மூட்டிவிடும்; பகையை வளர்த்துவிடும்; இழிந்த சுவையாய்விடும். சிறந்த நகைச் சுவை குற்றமுடையவரைப் புண்படுத்தாமல் குணமாக்கும் நன் மருந்து; சிந்தனையைத் தூண்டும் தூண்டுகோல்; சோர்வு போக்கி ஊக்கமூட்டும் நண்பன். சிந்தாமணியில் உள்ள நகைச்சுவைப் பாட்டு முதலில் வயிறு குலுங்க நகைக்க வைத்து, பின் சிந்தனையைத் தூண்டி வாழ்க்கையின் உண்மை நிலையை விளக்கி முடிவில் கண்களில் நீர் அரும்பச் செய்து விடுகின்றது! அப்பாடலின் மூலமாக யாக்கை நிலையாமையை

உணர்த்தி, போலியாக அன்பு காட்டும் மனைவி மக்களின் வஞ்சக நினைப்பை எடுத்துக்காட்டி, இவ்வுலகை விட்டு நீங்கும் உயிரின் தணியாத — நிறைவேறாத வேட்கையைத் தெளிவு படுத்திப் 'பார்மின் இதுவே உம்நிலை!' என்று கூறித் தேவர் சிரிக்கின்றார்! நாம் அழுகின்றோம்! உலக மக்களின் அறியாமை யைக் கண்டு அறவோர் சிரிக்கும் பெருஞ் சிரிப்பு, தேவர் பாடலில் இடம் பெற்றுள்ளது!

உலக அரங்கில் நடக்கும் எளிய நாடகம் ஒன்றையே தேவர் தம் பாடலில் நடத்திக் காட்டுகின்றார்.

கையால் பொதித் துணையே காட்டக்
கயற்கண்ணாள் அதனைக் காட்டாள்;
''ஐயா! விளம்பழமே என்கிறீர்!
ஆங்கதற்குப் பருவம் அன்று என்
செய்கோ!''—எனச் சிறந்தாள் போல், சிறவாக்
கட்டுரையால் குறித்த எல்லாம்
பொய்யே பொருள் உரையா முன்னே
கொடுத்துண்டல் புரிமின் கண்டீர்! (1553)

என்ற பாடலில் உள்ள கருத்தும் சுவையும் மிகவும் உயர்ந்தவை.

வயது முதிர்ந்த கணவர் படுக்கையில் கிடக்கின்றார். அவரைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டு உறவினரும் நண்பரும் இருக்கின்றனர். அக் கிழவரின் மனைவி இளம் வயதினள்; இரண்டாம் தாரமாக வந்தவள். அவளைக் 'கயற்கண்ணாள்' என்று தேவர் குறிப்பிடுகின்றார். தன் கணவரை அவள் 'ஐயா' என்று விளிப்பதாலும் அவள் இளையவள் என்பது விளங்கும். அவள் ஒத்த வயதும் ஒத்த அன்பும் உடையவள் அல்லள்

என்பதைத் தேவர், 'கயற் கண்ணாள்' என்ற சொல்லாலும் 'ஐயா' என்ற விளிச் சொல்லாலும் குறிப்பிடுகின்றார். கயற் கண்ணாளுக்கு இவ்வுலக வாழ்வில் பற்று; பொருள்மீது வேட்கை உலக இன்பத்தில் நாட்டம்! 'ஐயாவுக்கோ அடுத்த உலகைப் பற்றி ஆராய்ச்சி; அறத்தின்மீது வேட்கை; செல்லும் நெறிக்குத் துணை தேடுவதில் நாட்டம்! இவ்வாறு முரண்பட்ட இருவரைக் கொண்டு நாடகத்தைத் தொடங்குகின்றார்.

கிழவர் வாயடைத்துக் கிடக்கின்றார். எல்லோரையும் மருண்டு மருண்டு நோக்கி விழிக்கின்றார். என்னவோ சொல்ல நினைக்கிறார்; பேச முயல்கின்றார்! சொற்களோ வெளியே வர வில்லை! கையசைத்துத் தம் மனைவியை அருகில் அழைக் கின்றார். 'பண முடிப்பு' வைத்த இடத்தைக் கையால் காட்டி, அதை எடுத்துப் பிறருக்கு வழங்குமாறு சைகை செய்கின்றார்! தாம் தேடிய பொருளைத் தம் விருப்பப்படி, தம் மனைவி தரப் பிறர் வாங்கிக் கொண்டு மனம் மகிழ்ந்து செல்வதைக் கண்ணால் காண அவருக்கு அளவற்ற வேட்கை! கயற்கண் ணாளுக்கு இது புரிகின்றது; நன்றாகப் புரிகிறது! ஆனால் அவள் செய்தது என்ன? ''ஐயா விளம்பழம் வேண்டும் என்று கையால் காட்டுகின்றீரே! அதனை உண்ண இதுவா பருவம்? விக்குள் வருகின்றதே! உங்கள் உடம்புக்கு ஆகுமா? என்ன செய்வேன்!'' என்று ஒப்பாரி வைக்கின்றாள்! கணவருக்குச் 'சிறந்தவள் போல' நடிக்கின்றாள். கட்டுரை பேசி அக் கிழவர் குறித்துக் காட்டிய எல்லாவற்றிற்கும் பொய்யான பொருள் உரைத்துக் கிழவரைக் கொல்லாமல் கொல்லுகின்றாள். சாகும் கிழவர் சொன்னவற்றை எல்லாம் செய்து பொருளை இழந்து வாடி நிற்க அந்தக் 'கயற்கண்ணாள்' விரும்பவில்லை! 'ஐயா' என்ன செய்வார் பாவம்!

இந்த நாடகம் உலக அரங்கில் முடிவின்றி நடந்து கொண்டே இருக்கின்றது! இதைத் தேவர் எடுத்துக் காட்டும்

போது தனியழகு உண்டாகிறது. இந்த நாடகத்தைக் கண்டு முதலில் நாம் சிரித்தாலும் பின் சிந்திக்கின்றோம்; வாழ்க்கையின் உண்மை நிலைமையினை உணர்கின்றோம். ''இதுவோ, மக்களின் வாழ்க்கை நிலை!'' என்று விம்முகின்றோம். நம் கண்களைக் கண்ணீர்த் துளிகள் மறைக்கின்றன. இத்தகைய உயர்ந்த நகைச் சுவைப் பாடல், கற்பவர் உள்ளங்களை எல்லாம் கொள்ளை கொண்டு சிறந்து விளங்குகின்றது.

திருத்தக்க தேவர் அவலச் சுவை ததும்பப் பாடியுள்ள பாடல்கள் பல உள்ளன. அவற்றுள்,

நீணில மன்ன போற்றி
நெடுமுடிக் குருசில் போற்றி
பூணணி மார்ப போற்றி
புண்ணிய வேந்தே போற்றி
கோணினைக் குறித்து வந்தான்
கட்டியங் காரன் என்று
சேணிலத் திறைஞ்சிச் சொன்னான்
செய்யகோல் வெய்ய சொல்லான்—264

என்ற பாடலில் அவலச் சுவை நிரம்பி வழிகின்றது. பாடலை மேம்போக்காகக் காணும்போது பாடலின் ஆழம் புலப்படவில்லை. உற்று நோக்கும்போதுதான் பாடலின் அருமை பெருமைகள் எல்லாம் வெளிப்படுகின்றன. கட்டியங்காரன் தன் மன்னன் சச்சந்தனுக்கு எதிராகப் படைதிரட்டி, அந்தப் புரத்தை வளைத்துக் கொண்டு வாயிலை நெருங்கி வருகின்றான். அவன் வந்து கொண்டிருக்கும் செய்தியை வாயிற்காப்போன் கூறுவதாய் இந்தப் பாடல் அமைந்துள்ளது. காவலன் சொல்ல வேண்டிய செய்தி,

''கோள்நின்னைக் குறித்து வந்தான்

கட்டியங் காரன்''

என்பதேயாகும். இத்தனை உரைநடையாக்கி எழுவாய் பயனிலை களை முறையாக அமைத்தால் 'கட்டியங்காரன் நி(ன்)னைக் கோள் குறித்து வந்தான்' என்று அமையும். ஆனால் செய்யுளில் சொற்கள் வேறு முறையில் அமைந்துள்ளன. 'கோள் என்ற சொல் முதலில் இடம் பெற்றுள்ளது. அச் சொல்லிற்குக் கொள்ள என்றும், கொல்ல என்றும் பொருள் உரைப்பர். கட்டியங்காரன் படையெடுப்பின் நோக்கத்தையும் அதனால் தனக்கு ஏற்பட்ட அச்சத்தையும், மன்னனுக்கு ஏற்பட இருக்கும் பெருந்தீங்கையும் வெளிப்படுத்தும் வகையில் வாயிற் காப்போன் முதலில் 'கோள்' என்ற சொல்லையே வெளிப்படுத்து கின்றான். அடுத்து 'நின்னை' என்று குறிப்பிடுகின்றான். யாரை என்ற வினா மன்னன் உள்ளத்தில் எழுவது இயல்பு ஆதலின், அதற்கு விடையாக 'நின்னை' என்று கூறுகின்றான். வந்தான் என்று கூறுவதற்கு முன் 'குறித்து' என்று அழுத்தமாகக் கூறு கின்றான். ''குறிப்பாக இப்போது உன்னையே கருத்திற் கொண்டுள்ளான். உன்னைச் சார்ந்தவரை அவன் கருதினான் இல்லை!'' என்பதை உணர்த்தவே 'குறித்து' என்றான். வருகின்றான் என்று நிகழ் காலத்தில் கூறாமல் வந்தான் என்று இறந்த காலத்தில் கூறி அவன் வருகையை உறுதிப்படுத்து கின்றான். வந்தது யார் என்பதை இறுதியில்தான் கூறுகின்றான், 'கட்டியங்காரன்' என்று! ஐந்து சொற்களில் எவ்வளவு ஆழ மான கருத்துக்கள் பொதிந்துள்ளன!

பாடலில் உள்ள முதல் நான்கு அடிகளில் அவலச் சுவை பொங்கி வழிகின்றது. ஒவ்வோர் அடியின் ஈற்றிலும் 'போற்றி' என்ற சொல் அமைந்துள்ளது. நான்கு அடிகளிலும் அச் சொல் நான்கு முறை வந்துள்ளது. 'காக்க' அல்லது 'காப்பா

யாக' என்பது அதன் பொருள்.* நாட்டின் காவலனாய்—நாட்டு மக்களின் உடல் பொருள் ஆவி அனைத்தையும் காக்கும் கடமை வீரனாய் விளங்கும் மன்னனை நோக்கி, 'காக்க' என்று நான்கு முறை கூறுகின்றான். ஆனால் மன்னன் தன் சுற்றத்தாரையும், தன் மனைவியையும் காக்க வேண்டிய நிலையில் உள்ளான் தன்னையே காத்துக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளான். இறுதியில் நிகழ்வது என்ன? மன்னன் தன் மனைவியை—இனிப் பிறக்க இருக்கும் செல்வ மைந்தனைக் காத்துக் கொள்ள முடியாமல் தானே அவர்களை அரண்மனையிலிருந்து வெளியேற்றுகின்றான். தானும் மாண்டு போகின்றான். இவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்கும்போது 'போற்றி' என்று காவல்காரன் நான்கு முறை கூறுவதில் தேங்கி நிற்கும் அவலச் சுவை வெளிப்படுகிறது.

சச்சந்தனை மன்ன, குருசில், மார்ப, வேந்தே என்று பலவாறு விளித்து, 'போற்றி' என்ற சொல்லை அமைக்கின்றான் வாயிற் காப்போன். இன்னும் சில நாழிகைக்குப்பின் அவன் மன்னனாய்—குருசிலாய்—வேந்தனாய் இருக்கப் போவதில்லை! கட்டியங்காரன் அரசனாகி விடப் போகின்றான்! இவ்வாறு எண்ணிப் பார்க்கும் போது இச்சொற்கள் பொருளாழம் மிகுந்தவையாய் இருப்பதை உணரலாம்.

இச் சொற்களுக்கு முன், அடைமொழிகளும் சிறப்புச் சொற்களும் உள்ளன. நீணில மன்ன, நெடு முடிக் குருசில் பூணணி மார்ப, புண்ணிய வேந்தே—என்று அவை அமைந்துள்ளன. நீள் நிலம், நெடுமுடி, பூண்—ஆகிய யாவும் கைமாறி விடப் போகின்றன. நிலையில்லாத பொருள்களாய் அவை உள்ளன. மன்னன் அவற்றை இழந்து விடப் போகின்றான்! 'புண்ணிய வேந்தே' என்பதில், மன்னன்

---

* புலிபோற்றிவா—என்று இலக்கண நூல்கள் காட்டும் மேற்கோளில் உள்ள போற்றி என்பதற்குக் 'காத்து' என்பதே பொருள்.

செய்த நல்வினை (அறச்செயல், புண்ணியம்) கூட அவனைக் காக்கவில்லையே என்ற குறிப்புப் பொருள் அடங்கி நிற்கிறது.

இச் செய்திகளை எல்லாம் உரைத்த வாயிற்காப் போனை,

*''சேணிலத் திறைஞ்சிச் சொன்னான்*
*செய்யகோல் வெய்ய சொல்லான்''*

என்று குறிப்பிடுகின்றார். வாயிற் காப்போன், சச்சந்தன் முன் பெருமதிப்புடன் நிற்கிறான். விரைவாகச் சொல்ல வேண்டிய செய்தியாயினும் அரச மரியாதைக்கு ஊறு நேராவண்ணம் முறைப்படி உரைக்கின்றான். தன் மன்னன் பகைவனைப் போரில் புறங்கண்டு வாகை சூடுவது உறுதி என்பது அவனது நம்பிக்கையாகும். நெருக்கடியான நிலையிலும் மன்னனை மன்னனாகவே காண்கிறான். அதனால்தான் முறைப்படி, சேண் நிலத்து இறைஞ்சிச் சொன்னான்.

வாயிற்காப்பேன் கடமை தவறாதவன். செய்ய கோலை- செங்கோலை—காக்கும் கோலை ஏந்தி நிற்பவன். ஆனால் மன்னனுக்கு அவன் இப்போது உரைக்கும் சொற்களோ வெய்யவாய் கொடுமையாய் உள்ளன! இதற்கு முன் இத்தகைய துன்பச் செய்தியைச் சொன்னதில்லை. அவனிடம் செய்ய கோல் இருப்பது போலவே செய்ய சொல்லும் இருந்தது. ஆனால் இன்று மட்டும் அவனுடமிருந்து வெய்ய சொல் பிறந்து விட்டது! அச் சொல்லும் மன்னனின் நன்மையையே கருத்திற் கொண்டதாகும்.

இத்தகைய பொருள்களை எல்லாம் நமக்கு நுண்ணிதின் உணர்த்தும் இந்தப் பாடல் தமிழ்க் காப்பிய உலகில் தலை சிறந்து விளங்குகின்றது!

# 13. கருத்துக் கனிகள்

கலை, வாழ்வில் மலர வேண்டும்; வாழ்வை விளக்க வேண்டும்; வாழ வழி காட்ட வேண்டும் என்ற கருத்துப் பழந் தமிழ்ப் புலவர்களிடம் உண்டு. வாழ்க்கைக்குப் பயன்படாத எந்தக் கலையையும் அவர்கள் போற்றவில்லை. கலைகளைக் கற்பது இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்வதற்கே என்ற கொள்கையில் உறுதியுடையவர்கள் அவர்கள். அதனால் கதை, காப்பியம் ஆகியவற்றில் பல வகையான கருத்துக்களை இடையிடையே கூறினர்.

திருத்தக்க தேவர் இத்தகைய புலவர் மரபில் தோன்றியவர். ஆதலில் தம் காப்பியத்தில் அறநெறிகளை விளக்குகின்றார். அறிவுரை கூறுகின்றார். உலக நீதிகளை வற்புறுத்துகின்றார். அவற்றை எல்லாம் திரட்டித் தொகுத்தால் நல்ல நீதி நூல் ஒன்று உருவாகும். தேவர், நாடாளும் மன்னன் சிறப்பை,

> 'உறங்கு மாயினும் மன்னவன் தன் ஒளி
> கறங்கு தெண்டிரை வையகம் காக்குமால்'—248.

என்று கூறுகின்றார்.

'துன்பம் உற்றவர்க்கு அல்லால் இன்பமில்லை (579) என்றும்,

> வாரம் பட்டுழித் தீயவும் நல்லவாம்
> தீரக் காய்ந்துழி நல்லவும் தீயவாம் !–(888)

என்றும் அவர் கூறியுள்ள கருத்துக்கள் கற்போர் சிந்தனைக்குப் பெருவிருந்தாய் அமைகின்றன.

காதல் மிக்குழிக் கற்றவும் கைகொடா
ஆதல், கண்ணகத்து அஞ்சனம் போலுமால் (1632)

என்ற கருத்தின் சிறப்பை எண்ணி எண்ணி மகிழலாம்.

நட்பிடைக் குய்யம் வைத்தான்
பிறர்மனை நலத்தைச் சேர்ந்தான்
கட்டழற் காமத் தீயிற்
கன்னியைக் கலக்கினானும்
அட்டுயிர் உடலம் தின்றான்
அமைச்சனாய் அரசு கொன்றான்
குட்ட நோய் நரகம் தன்னுள்
குளிப்பவர் இவர்கள் கண்டாய் (253)

என்ற பாடலும்,

ஒன்றாய ஞானஏர் பூட்டி, யாக்கைச் செறுவுழுது,
நன்றாய நல்விரதச் செந்நெல் வித்தி, ஒழுக்கநீர்
குன்றாமல் தாய்கொடுத்து ஐம்பொறியின் வேலி காத்தோம்பின்
வென்றார்தம் வீட்டின்பம் விளைக்கும் விண்ணோர் உலகின்றே (962)

என்ற பாடலும் கற்போர் நெஞ்சில் ஆழப் பதிகின்றன.

கல்வி அறிவு ஒழுக்கங்களில் சிறந்து விளங்கும் சீவகன் பல சிறந்த கருத்துக்களைக் கூறியுள்ளான். புலால் உண்ணுதலைக் கை விடுமாறு வேடனுக்குக் கூறும் கருத்தும் (1235), போலித் துறவைக் கை விடுமாறு போலித் துறவிகளுக்குக்

கூறும் கருத்தும் (1429 1486) காட்டில் சந்தித்த வழிப்போக்க னுக்குக் கூறும் அறிவுரைகளும் (1545-1553) சீவகன் வாயி லாகத் தேவர் உலகமக்களுக்கு எழுப்பும் ஞானக் குரல் ஆகும்.

சீவகனைப் பிரிந்து வாடும் கேமசரிக்கு நிப்புதி என்னும் முதியவள் உலக இயல்பையும், இன்ப துன்பங்களின் தன்மை யையும் விளக்குகின்றாள் (1534-1537). பதுமைக்குத் தோழி கூறும் அறிவுரைகள் வாழ்க்கையின் உண்மையான இயல்பை விளக்குவனவாய் உள்ளன (1887-1397). விசயை, தன் மகன் சீவகனுக்குக் கூறும் அரசியல் கருத்துக்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை; இன்றும் என்றும் போற்றிப் பின்பற்றத் தக்கவை (1919-1928).

# 14. குறைகள் உண்டா?

சீவக சிந்தாமணியைப் போற்றுவோர் ஒரு புறம் இருக்க, அந் நூலில் குறைகள் சில இருப்பதாகச் சிலர் கூறி வருகின்றனர். அதில் உள்ள சில விருத்தப் பாக் களின் ஓசை தடைப்படுகின்றது என்றும், சில பாடல்களில் உயிரோட்டமும் உணர்ச்சியும் குறைவாய் உள்ளன என்றும் கூறுகின்றனர். பெருமைக்குரிய பெண்ணினத்தைப் பழித்துப் பேசுகிறது என்றும், சீவகன் பல மகளிரை மணந்தது குறை பாடு என்றும் சிலர் உரைக்கின்றனர். தேவர் தம் சமயத்தையே உயர்வாகப் போற்றிப் பிற சமயங்களைப் புறக்கணிக்கின்றார்; குறைகூறுகின்றார் என்று கூறுவோர் உள்ளனர். இவர்கள் கூறும் குறைகளை நடுநிலை தவறாமல் ஆராய்வது நம் கடமையாகும்.

‘ ஆராய்ச்சித் துறை ஒரு தனிக்கலை. அது சிந்தனையைக் கிளறுவது. ஆழ்ந்து சிந்திக்கச் செய்வது. ஆராய்ச்சியாளர்க்கு

உரிய தனிப் பண்பு காய்தல் உவத்தல் அகற்றி உண்மை காண்பதாகும். சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல் ஆராயும் இயல்பு அவர்களுக்கு அமைந்திருக்க வேண்டும். இல்லையேல் கலையுலகமும் வரலாற்று உலகமும் அதிர்ச்சியுறும் அறிவுலகில் மயக்கமும் ஐயமும் புகுந்து குழப்பத்தை உண்டாக்கும். நேர்மையும் நீதியும் மாயும். பொய்ம்மை வளரும். எனவே, ஆராய்ச்சித் துறையில் பணியாற்ற விழைபவர்கள் தங்கள் பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும்''[1]

நடு நிலைமை பிறழாத ஆராய்ச்சி நோக்குடன் சீவக சிந்தாமணியுள் நுழைந்து உண்மை காண வேண்டும். காய்தல் உவத்தல் அகற்றி ஆராய்ந்து முடிவு காண வேண்டும்.

**ஓசை:** சங்க காலத்திற்குப்பின் தமிழ் யாப்பிலக்கணத்தில் பெரிய மாறுதல் ஏற்பட்டது இசையோடு பாடப்படும் பலவகைப் பாடல்கள் தோன்றின சிலப்பதிகாரத்தில் இக் காலத்தில் தோன்றிய இசைப் பாடல்களைக் காணலாம். இவற்றோடு வடமொழி விருத்தப் பாவகையும் தமிழில் மொழி யாப்பும் கலந்து புதுவகையாகப் பாக்கள் அமைந்தன. இக் காலத்தில்தான் திருத்தக்கதேவர் காப்பியம் இயற்றினார். முதன் முறையாக விருத்தப் பாக்களால் பெருங்காப்பியம் ஒன்றைச் செய்தார். புதிதாகத் தோன்றிய யாப்பிலக்கணம் பண்பட்டு முழு வடிவம் பெறுமையால் சிந்தாமணிப் பாடல்கள் சிலவற்றில் ஓசை தடைப்படுகின்றது. எனவே தேவரின் ஆற்றலில் குறை சொல்வது தவறு.

**உணர்ச்சியும் உயிரோட்டமும்:** சில பாடல்கள் உணர்ச்சி குறைந்தும், உயிரோட்டம் இன்றியும் இருப்பதற்குக்

---

1. ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால்-நாலடியார் கடவுள் வாழ்த்து ஆராய்ச்சி முன்னுரை.

காரணம் பல கூறலாம். தேவர் காலத்தில் தமிழ்மொழி இலக்கண வரம்பிலிருந்து மாறி வளரத் தொடங்கியது; சில புதுவகைச் சொல்லமைப்புகள் வடிவம் பெற்றன; புதிய சொற்களும் தோன்றின. பிற்காலத்தில் அவை வழக்கிழந்தன. எனவே அவை இடம் பெற்றுள்ள பாடல்கள் பொருள் தெளிவற்றிருப்பதோடு, விரைந்து கற்கப் புகுவோரைத் தடை செய்து விடுகின்றன. தேவரின் பரந்த நூற் புலமையும், தருக்கம், இலக்கணம், சமயம் ஆகிய துறைகளில் பெற்ற அறிவும் காப்பியத்தில் இடம் பெறுவதால் சில பாடல்களில் உணர்ச்சி குறைகின்றது. அறிவுச் சுவையை ஏற்று வெளிவரும் எந்தக் கலையும் உணர்ச்சியோடு பிறப்பதில்லை. கடுந்துறவுள்ளமும், பல்வேறு துறைக் கல்வியால் பெற்ற கருத்துக்கள் பதிந்து திண்மை பெற்று முதிர்ந்த அறிவும் உணர்ச்சியை மெலியச் செய்வது இயல்பே. எனவே சீவக சிந்தாமணியில் உள்ள சில பாடல்களில் உணர்ச்சி குறைவாக உள்ளது.

**பெண்ணின் பெருமை கூறுமை :** திருத்தக்க தேவர் பெண்ணினத்தைத் தாழ்வு படுத்திப் பாடியுள்ளார் என்று குறை கூறுவோர்,

> ''பெண்ணெனப் படுவகேண்மோ
> பீடில பிறப்பு நோக்கா
> உண்ணிறை உடைய அல்ல
> ஓராயிர மனத்த வாகும்
> எண்ணிப்பத்(து) அங்கை இட்டால்
> இந்திரன் மகளும் ஆங்கே
> வெண்ணெய்க் குன்றெரியுற் றுற்போல்
> மெலிந்துபின் நிற்கு மன்றே''-1596

என்ற பாடலைச் சான்றாகக் காட்டுவர். இதற்கு முன்னும் பின்னும் உள்ள பாடல்களை நோக்காமல், இப்பாடல் எந்தச்

சூழ்நிலையில் யார் வாயிலாக எந்தக் கருத்தை உணர்த்தத் தோன்றியுள்ளது என்பதை ஆராயாமலும் குறை கூறுவது வருத்தம் தருகின்றது. எனவே இப்பாடலின் தகுதியை உள்ளவாறு காண வேண்டும்.

சீவகன் ஒரு காட்டின் வழியாகச் சென்று கொண்டிருக்கும் போது, பவதத்தன் என்னும் வழிப்போக்கனின் மனைவி தனியளாய் இருந்து சீவகனைக் கண்டு காமுறுகின்றாள். அவனோடு கூடி மகிழ விரும்புகின்றாள். சீவகன் அவள் தீய விருப்பத்திற்கு உடன்படாமல் அறவுரை பகர்ந்து அனுப்பி விடுகின்றான். அவள் கணவன் பவதத்தன் அவளைத் தேடிக் கொண்டு சீவகனிடம் வந்த போது சீவகன் அவனைச் சந்தித்து உரையாடுகின்றான். அப்போது சீவகன் பவதத்தனிடம் மூன்று வகையான பெண்டிரின் இயல்புகளைப் பொதுவாகக் குறிப்பிடுகின்றான். அன்பை நூலாகவும் இன்சொல்லை மலராகவும் கொண்டு இன்ப மாலை புனைந்து சூட்டி எப்போதும் உடன் இருந்தாலும் சில பெண்டிரது கண்ணும் மனமும் பிறரையே பின் தொடர்ந்து செல்லும் (1596). வேறு சில பெண்டிர், பெருமையற்றவராய்—ஆடவர் பிறப்பு முதலிய தகுதிகளை நோக்காதவராய்—நிறைவற்றவராய்-ஓராயிரம் உள்ளத்தவராய் இருப்பர். இத்தகையவர் செல்வத்தில் மேம்பட்டு விளங்கும் இந்திரனுக்கே மகளாய்ப் பிறந்திருந்தாலும் சிறிதளவு பொருள் தரினும் மனம் நெகிழ்ந்து வேறுபடுவர் (1597). இவர்களேயன்றி உயர்ந்த கற்புடைய மகளிரும் உள்ளனர். இவர்கள் தம் கணவர் கருத்திற்குச் சிறிதும் மாறுபாடின்றி நடந்து கொள்வர் கணவரைப் பிரிந்திருக்கும் காலத்து ஒப்பனையின்றி இருப்பர். கணவரையே தொழுது கொண்டு வருந்தி இருப்பர். துணைவர்க்குற்ற துன்பங்களைப் போக்கித் திருமகளைப் போன்று மகிழ்ந்து வாழ்வர் (1598). இவ்வாறு இன்பம் பொருள் அறம் என்ற மூன்றின் மீதும் பற்றுடைய மூன்று வகையான பெண்டிரின் இயல்புகளைச் சீவகன் குறிப்பிட்டு வழிப்போக்கனை நோக்கி, ''இத்தகைய பெண்டிரில் உம் மனைவி எத்தகையவள்?'' என்று வினவு

கின்றான். இந்த இடத்தையும் சூழ்நிலையையும் சீவகனின் உள்ளக் கருத்தினையும் ஆராயாமலும், மூன்று பாடல்களின் கருத்தை இணைத்து நோக்காமலும் சிலர், பெண்ணினத்தைச் தேவர் பழிப்பதாய்ப் பழி சுமத்துகின்றனர். மேலும் சீவகனின் அன்னையார் விசயமாதேவியை,

''தொழுதகு தெய்வம் அன்னாள்'' (1912)

என்று தேவர் போற்றிப் புகழ்ந்திருப்பதையும் நினைத்துப் பார்ப்பதில்லை!

**தம் சமயத்தையே போற்றுதல்:** திருத்தக்க தேவர் தம் சமயத்தைப் போற்றி, பிற சமயங்களைப் புறக் கணிக் கின்றார் என்ற குற்றச் சாட்டை ஆராய்தல் வேண்டும். சிறந்த காப்பியக் கலைஞராய் விளங்கும் தேவர் சமண சமயத்தைச் சேர்ந்தவர் ஆதலின் தம் சமயத்தின் அருமை பெருமைகளைப் போற்றி யுரைக்கின்றார்; தம் சமயக் கொள்கைகளை நன்கு விளக்குகின்றார். இருப்பினும் வைதிக சமயத்திற்குரிய கதை தெய்வம் வரலாறு கொள்கை பழக்க வழக்கம் ஆகியவற்றைத் தேவர் தம் காப்பியத்தில் பலப் பல இடங்களில் அமைத்துச் சிறப்பித்துப் பாடியுள்ளார். உவமைகளிலும் மேற்கோள் களிலும் வைத்து விளக்கிக் கூறியுள்ளார். இப்பண்பு, தேவரின் பொது நோக்கையும் பரந்த உள்ளப் பாங்கையும் காட்டு கின்றது.

**மகளிர் பலரை மணத்தல்:** காப்பியத் தலைவனாகிய சீவகன் மகளிர் எண்மரைத் திருமணம் செய்து கொள்ளு கின்றான். இதனை எடுத்துக் காட்டி 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற உயர் நெறியைத் தேவர் புறக் கணித்திருப்பதாகச் சிலர் குறை கூறுவதுண்டு. இதனை ஆராய்வோம். நம் நாட்டு மன்னர்கள் பல மனைவியரை மணந்து கொள்வது வழக்கம். பாரதக் கதையில் அருச்சுனன் பல மகளிரை மணந்து கொள்ளு கின்றான். விக்கிரமாதித்தன் கதையில் வரும மாமன்னன்

பெண்டிர் பலரை மணக்கின்றான். விஜய நகரப் பேரரசின் தனிச் சிறப்புடைய பெருமன்னராய்த் திகழ்ந்த கிருஷ்ண தேவ ராயர் பன்னிரு மகளிரை மணந்து வாழ்ந்ததாக வரலாறு கூறுகின்றது. இத்தகைய வரலாறுகளிலும் கதைகளிலும் குற்றம் காணாதவர்கள் சிந்தாமணிக் காப்பியத்தின் தலைவனிடம் குறை காணுகின்றனர்.

தேவர், மன்னர்களின் பழக்க வழக்கங்களையும் வாழ்க்கை முறையையும் பல பெண்டிரை மணப்பதையும் உள்ளவற்றை உள்ளவாறே தம் காப்பியத்தில் அமைத்துக் காட்டியுள்ளார். ஆனால் தேவரின் தூய உள்ளம் - ஒருவனுக்கு ஒருத்தி என்ற கொள்கையில் உறுதியுடைய உயர்ந்த நோக்கம் ஓரிடத்தில் நன்கு வெளிப் படுகின்றது சீவகனின் நீதி நெறி பிறழாத ஆட்சியில் மக்கள் 'ஒருவனுக்கு ஒருத்தி போல' இன்புற்று வாழ்ந்தனர் என்று மிகச் சிறந்த உவமையால் விளக்குகின்றார் (2377). இவ்வுவமையின் வாயிலாகத் தேவரின் உள்ளக் கருத்தும், உயர்ந்த கொள்கையும் தெளிவாகத் தெரிகின்றன.

# 15. துறவி தந்த மண நூல்

திருத்தக்க தேவர் சமண சமயத்தவர்; கடுந்துறவு பூண்டு வாழ்ந்த சான்றோர். அவர் இயற்றிய பெருங் காவியமாகிய சீவகசிந்தாமணி 'மண நூல்' — என்று போற்றப்படுகிறது. துறவி தந்த மண நூலைப் பற்றிக் காலந்தோறும் பல வினாக்கள் எழுந்துள்ளன. நடுநிலைமையில் இருந்து, அவ்வினாக்களை ஆராய்வது ஆராய்ச்சியாளரின் கடனாகும்.

குற்றமா? சீவகசிந்தாமணியில் காமச் சுவையைத் திருத்தக்க தேவர் மிக விரிவாகப் பாடியுள்ளதைக் கண்டு, அவர் காலத்தில் வாழ்ந்த புலவர் இளமை முதல் துறவு பூண்டு வாழ்ந்த தேவரின் ஒழுக்கத்தை, ஐயுற்றனர் என்று ஒரு கதை வழங்குகின்றது குமரகுருபரர் மீதும் இத்தகைய குற்றச்சாட்டு, பிறரால் ஏற்படுத்தப் பட்டதாகக் கூறுவர். இன்றும் இத்தகைய குற்றத்தை அவர்கள் மீது சுமத்துவோர் உள்ளனர். துறவி களுக்கு இவ்வுலக வாழ்வைப் பற்றி ஒன்றும் தெரியாது; தெரிந்திருக்கக் கூடாது — என்ற எண்ணமே இவ்வாறு குற்றங் கூறுவதற்குக் காரணமாகும்.

சீவக சிந்தாமணியைக் கற்கும் போது தேவர், வாழ்க் கையின் பல்வேறு நிலைகளை அறிந்தவர் என்பது விளங்கும். அவர் கண்கள் உலகத்தை நன்கு உற்று நோக்கியுள்ளன. அவர் உள்ளம் நன்மை தீமைகளைத் தெளிவாக உணர்ந்திருக் கின்றது. அவர் அறிவு பல்வேறு மக்களின் மனநிலை, வாழ்க்கை முறை, செயல் ஆகியவற்றை அறிந்திருக்கின்றது. கலைஞர்கள் தம் கற்பனைத் திறத்தாலும் அறிவின் ஆற்றலாலும் பிறருடைய வாழ்க்கை அனுபவங்களைப் பெற வல்லவர்கள். மேலும் இவ்வுலகில் வாழ்ந்து வாழ்ந்து பழகி, அனுபவங்களைப் பெற்ற அறிஞர்கள் இயற்றிய நூல்களின் வாயிலாக உலக அறிவைப் பெற்றுக் கொள்கின்றனர். வாழாமலே வாழ்ந்த அனுபவ அறிவைப் பெறுகின்றனர். காணாமலே காட்சியின் பயனைப் பெறுகின்றனர். இத்தகைய ஆற்றல் பெறுவது குற்றமா?

தேவர் பல நூல்களைக் கற்றவர்; பல கலைகளைப் பற்றி அறிந்தவர்; பல மக்களின் வாழ்க்கையை ஆராய்ந்தவர். அவர் கற்ற கல்வி அவரது நூலின் வாயிலாக வெளிபபடுகின்றது. அதற்காக அவரைக் குற்றம் கூறுவதா?

தமிழ் அகப்பொருள் நூற் கருத்தும், வடமொழியில் உள்ள காமநூலின் பொருளும் அவர் நூலில் இடம் பெறுகின்றன.

திருக்குறளின் கருத்தும் வடமொழி நூல்களின் உட்பொருளும் இடம் பெறுகின்றன. அரசியல் நூல்களின் நுட்பமும், புறத் திணைக் காட்சிகளும் பொலிகின்றன; பாரதக் கதைகளும், பஞ்ச தந்திரக் கதைகளும் (1927, 1928) சைன சமயக் கருத்தும், சோதிடம், மருத்துவம், தருக்கம் முதலிய கலைகளும் அங்கங்கே தோன்றுகின்றன. இவற்றிற்கெல்லாம் மேலாகத் தேவரின் தூய துறவுள்ளம் நூல் முழுதும் வெளிப் படுகின்றது.

''காமத்தின் சுவைகண்டார் காமநூல்
என்கின்றார்; தருமநீதித்
தாமத்தின் நிலைகண்டார் தருமநூல்
என்கின்றார்; தவங்கள் சார்ந்த
நாமத்தின் நலங்கண்டார் ஞானநூல்
என்கின்றார்; நயந்தோர்க்கெல்லாம்
சேமத்தை அருளுகின்ற சீவகசிந்
தாமணியைச் செய்து தந்தாய்!

[செகவீர பாண்டியனர்]

என்று தேவர் திருவுள்ளத்தைப் போற்றி, அவரை வாழ்த்துதல் நம் கடனாகும்.

**சிந்தாமணி சிற்றின்ப நூலா?** சிந்தாமணி சிற்றின்பம் பாடும் நூல் என்று கூறிப் புறக்கணித்துச் சேக்கிழார் பெரிய புராணம் இயற்றி, அனபாய சோழனுக்குத் தந்தார் என்று ஒரு கதையுண்டு. இக்கதைக்கு அகச்சான்றில்லை என்று ஆராய்ச்சி யாளர் கூறுவர். இன்றும் அக்காவியத்தைச் சிற்றின்பம் பாடும் நூலென்று புறக்கணிப்பவர் உள்ளனர். அவர்கள் கருத்திற் கேற்பச் சிந்தாமணி 'மண நூல்' என்று புகழப்படுகிறது காவியத் தலைவனாகிய சீவகன் மகளிர் எண்மரை மணக்

கின்றான். ஒவ்வொரு மணத்தின் இறுதியிலும் இன்பச் சுவை மிகுதியாகப் பாடப் பட்டுள்ளது. இவற்றிற்கும் மேலாகச் சச்சந்தனும் விசயையும் வாழ்ந்த காதல் வாழ்க்கையில் இன்பச் சுவை விளக்கமாகப் பாடப் பட்டுள்ளது. இவற்றை எல்லாம் எடுத்துக் காட்டிச் சிந்தாமணி சிற்றின்பத்தைப் பாடும் நூல் என்று கூறி விடுகின்றனர்.

கடுந்துறவு பூண்ட சமணத் துறவி திருத்தக்க தேவர். அவர் காவியம் பாடுகின்றார். உலக மக்களுக்கு நன்னெறி காட்ட நூல் செய்கின்றார். அவர் சிற்றின்பத்தை மிகுதியாகப் பாடுவதேன்? மன மொழி மெய்களால் அறம் வளர்க்கும் சமணத் துறவியாகிய தேவர் சிற்றின்பம் பாடுவதையா தம் நூலின் நோக்கமாகக் கொள்வார்? இத்தகைய வினாக்கள் நம் உள்ளத்தில் எழுகின்றன.

**பாடுவது ஏன்?** பட்டினத்தார், அருணகிரி நாதர், தாயுமானவர் போன்ற துறவிகள் பெண்ணின்பத்தை விரிவாகப் பாடி, முடிவில் அதன் இழிவையும் அது தரும் துன்பத்தையும் சுட்டி, அறநெறியைக் காட்டுகின்றனர். அவர்கள் இவ்வாறு பாடுவது ஏன்? சீறி வரும் சினப்புலியை ஆடவிட்டு, அலைக் கழித்துக் களைத்து விழும் நிலையில் கொல்வது போல கட்டுக் கடங்காமல் ஓடும் குதிரையை அதன் போக்கிலே விட்டுக் களைத்த நிலையில் தடை ஏற்படுத்தி நிறுத்துவது போலச் சிற்றின்பத்தை எடுத்துக் கூறி, அதன் முடிவைக் காட்டி நம் மன நிலையை மாற்றுகின்றனர். இவ்வாறே தேவர் தம் நூலில் செய்துள்ளார்.

### இன்பத்தின் எல்லை :

இன்பம் இன்பம் இன்பம்
இன்பத்திற்கோர் எல்லை காணில்
துன்பம் துன்பம் துன்பம்

[குயில்பாட்டு]

என்று பாரதியார் பாடுகின்றார். இந்தக் கூற்று, சச்சந்தன் வாழ்க்கையில் உண்மையாகின்றது விசயையின் அழகில் ஈடுபட்டு, அரசியலை அமைச்சனிடம் ஒப்படைத்து, சிற்றின்பத்தில் மூழ்கிக்கிடந்த சச்சந்தன் வாழ்க்கை, துன்பத்தில் முடிகின்றது.

சச்சந்தன் சிற்றின்ப நுகர்ச்சி மிகுதியால் அழியப் போகின்றான் என்பதைத் தேவர் பல இடங்களில் குறிப்பாகச் சுட்டுகின்றார். விசயையை மணக்கு முன், சச்சந்தனுக்கு அவள் மீது எழுந்த காதலை,

தையலாள் நெடுந்தடங் கண்
வலைப்பட்டுச் சச்சந்தன்
ஐயுறன் அணங்கு எனவே
அகத்தடக்கிச் செல்கின்றான். [181]

என்று குறிப்பிடுகின்றார். அவள் கண் வலைப்பட்டு அணங்கு என்று கருதிச் செல்லும் மன்னன் நலம் பெறப் போவதில்லை! கண் வலைப்படுத்தும் அணங்கு நன்மை செய்யுமா? இவ்வாறு தேவர் சொல்லாமல் சொல்கின்றார்.

சச்சந்தன் அரசைத் துறந்து விசயையுடன் இன்பத்தில் மூழ்கிய நிலை,

'விளக்கம் இருள்கொள விளங்கு வெண்மதி
ஒண்ணிற உரோகணியோடு ஒத்தது ஒத்ததே' [198]

என்று தேவர் கூறுகின்றார். இவ்வுவமை தேவரின் உள்ளக் கருத்தைத் தெளிவு படுத்துகின்றது.

சச்சந்தன் தன் தேவியை 'அமிர்தமாக' எண்ணிப் பருகி விட்டான் (190) ஆனால் அவளோ கொல்லும் நஞ்சாகின்றாள்.

இவ்வாறு பல இடங்களில் குறிப்பாகத் தம் கருத்தை வெளியிடும் தேவர், சச்சந்தனின் அமைச்சர் வாயிலாகவும் அரிய செய்திகளைக் கூறிச் சச்சந்தன் வாழ்க்கையைச் சிறந்த பாடமாக உலகிற்கு அமைத்துக் காட்டுகின்றார்.

*சீவகன் சிற்றின்பத்திற்கு எளியவனா?* மகளிர் எண்மரை மணந்த சீவகன் சிற்றின்பத்திற்கு எளியன் அல்லன் அக்கால மன்னர் வாழ்க்கை மகளிர் பலரை மணந்து வாழ்வதாய் அமைந்து கிடந்தது. பெண் கருதிப் போரிட்டுச் சிறைப் பிடித்த மகளிரை வற்புறுத்திச் சீவகன் மணந்து கொள்ளவில்லை ஆவலால் தகுதியிழந்து தாழ்ந்து நின்று எந்தப் பெண்ணையும் மணக்கவில்லை; மகளிர் அவனைக் கண்டு தாமே விரும்பி மணக்க உறுதி பூண்டு நிற்பதாலும், பெண்களின் பெற்றோர் வேண்டுவதாலும் சிலரை மணக்கிறான். தான் கற்ற பலவேறு கலைகளில் தனக்கிருக்கும் திறன் காட்டிச் சிலரை மணக்கிறான்; தன் ஆண்மைத் தோற்றத்தைக் காட்டி ஒருத்தியை மணக்கிறான்; ஊழ் ஒருத்தியை மணம் முடிக்கின்றது.

*சீவகன் சிற்றின்பத்திற்கு எளியனாய் இருந்திருப்பின்* முதலில் கோவிந்தையை மணந்திருப்பான். அநங்கமாலை என்னும் ஆடல் மகள் தன்னை விரும்பிய போது மறுத்துச் செல்கிறான் சீவகன். காட்டில் பவதத்தன் மனைவியாகிய அநங்கமாலை தன் தீய விருப்பத்தைச் சீவகனிடம் கூறி இரந்து நின்ற போது, 'பிறன்மனை நோக்காத பேராண்மை'யுடன் அவ்விடம் விட்டு அகல்கின்றான். அவள் கணவனைச் சந்தித்த போது அவளுடைய தீய நினைப்பைக் கூறி அவர்கள் உறவைக் கலைக்காமல் பொதுவான அறவுரை கூறிச் செல்கின்றான். இப் பண்புகள் சீவகனை உயர்த்திக் காட்டுகின்றன; அவன் சிற்றின்பத்திற்கு எளியன் அல்லன் என்பதை உணர்த்துகின்றன.

**மண நூலா? துறவு நூலா?** ஒருவர் வாழ்க்கையின் வெற்றி தோல்விகளை முடிவில்தான் காண வேண்டும். ஒரு

நாடகத்தின் முடிவைக் கொண்டே அது துன்பியலா, இன்பியலா என்று கூற வேண்டும். ஓட்டப் பந்தயத்தின் தொடக்கத்தில் ஏற்படும் உயர்வு தாழ்வுகளைக் கண்டே முடிவு கூற முடியாது. இறுதியைக் கொண்டே வென்றவர் யார், தோற்றவர் யார் என்று முடிவு செய்ய வேண்டும்.

சீவக சிந்தாமணிக் காப்பியத்தின் முடிவைக் காணும் போது அதை மணநூல் என்று கூறுவதைவிடத் துறவு நூல் என்று கூறுவது சரியெனத் தோன்றுகிறது. கதையின் இறுதியில் அரசி விசயை துறவு பூணுகின்றாள்; காப்பியத் தலைவன் துறவு மேற்கொள்ளுகின்றான்; அவன் மனைவியரும் துறக்கின்றனர். இவர்களின் துறவு திருத்தக்க தேவரால் சிறப்பிக்கப் படுகின்றது.

**விசயையின் துறவு:** அரசர் குடியில் பிறந்து, அரசனுக்கு வாழ்க்கைப்பட்டு அரச இன்பத்தை நுகர்ந்து வாழ்ந்தவள் விசயை. பின் அத்தகைய வாழ்வை இழந்து வருந்துகின்றாள். மீண்டும் அத்தகைய பெருவாழ்வு அவள் மகனால் அவளுக்கு வாய்க்கின்றது. அரச வாழ்வும் செல்வச் செழிப்பும் அவளைத் தேடி வருகின்றன. ஆனால் அவற்றில் அவள் பற்றுக் கொள்ளாமல் துறவு பூணுகின்றாள். ஓவியம் எழுதிய எழில் வண்ணப் பட்டாடை உடுத்திச் செருக்கித் திரியும் கன்னியர் நடுவில், காவி உடை பூண்ட நரை மூதாட்டி தோன்றுவதுபோல, மணநூலின் நடுவே விசயையின் துறவு விளங்குகின்றது. இன்பச் சுவைக்குச் சரியான மாற்றாக விசையையின் அறிவுரை அமைகின்றது.

**சீவகன் துறவு:** பல பெண்டிரை மணந்து அரச வாழ்வு எய்திய சீவகன் துறவு நம் உள்ளத்தில் நீங்காத இடத்தைப் பெறுகின்றது. துறவு கொள்ளும் மனநிலை அவனுக்கு எங்ஙனம் வாய்த்தது என்று நாம் மருளுகின்றோம். சீவகன் அரசைத் துறக்கின்றான்; தன்னிடமிருந்த அத்தனைச் செல்வங்களையும்

துறக்கின்றான், பலநாள் முயன்று கற்ற கல்வி, கலைகளைத் துறக்கின்றான்; அவனையன்றிப் பிறரை மணவோம் என்று வாழ்ந்த காதல் மனைவியரைத் துறக்கின்றான். இத்தகைய துறவு அவனது உள்ளத் திண்மையைக் காட்டுகின்றது.

அரசு அவனுக்கு எளிதில் கிடைத்துவிடவில்லை. அது பரம்பரைச் சொத்தாக அவன் கைக்கு வரவில்லை, பிறர் அவனிடம் ஒப்படைக்கவில்லை. இரக்கம் சிறிதுமற்ற வலிய பகைவன் ஆளும் நாட்டிலே மறைவாய் வளர்ந்து, மெல்ல மெல்ல வலிமை பெற்று ஓராண்டுவரை அப்பகைவன் கண்ணில் படாமல் வேறிடங்களுக்குச் சென்று மறைந்து வாழ்ந்து, அந்த ஓராண்டில் தன் வலிமையைப் பெருக்கிக் கொண்டு, இடமும் காலமும் துணையும் நன்கு வாய்த்த போது வெளிப்பட்டுப் பகைவனோடு களத்தில் போராடி அவனைக் கொன்று வீழ்த்தி அரசைப் பெறுகிறான் சீவகன். இவ்வாறு முயன்று அரிதில் பெற்ற அரசைத் துறக்கின்றான்.

சீவகன் மணந்த மகளிர் அவனுக்கு எளிதில் வந்து வாய்த்துவிடவில்லை. பல கலைத்திறன்களை எல்லாம் காட்டிப் பிறரால் மணத்தற்கரிய பெண்டிரையே மணக்கின்றான். மேலும் அப்பெண்டிரும் அவனிடம் தீராக் காதல் கொண்டு அவனை மணந்து இன்பமாக வாழ்கின்றனர். இத்தகையவரைப் 'புண்மேற் சீலை' என நீக்கி அகல்கின்றான்.

சீவகனின் இருவேறு நிலைகளையும் சிங்க நோக்காகக் காணும் போது, நமக்கு வியப்புண்டாகின்றது காவியம் இயற்றிய தேவரின் நோக்கம் புலனாகின்றது

உலகத்தை நன்னெறியில் செலுத்தவே சான்றோர்கள் காவியம் படைக்கின்றனர். இன்பமும் துன்பமும் கலந்து இருக்கும் உலகில் வாழும் மக்களுக்கு அழியா இன்பம் எது

என்று உணர்த்தவே நூல் இயற்றுகின்றனர். அவர்களுடைய நோக்கத்தை உணர்ந்து போற்றுவது ஆராய்ச்சியாளரின் கடனுகும். சமயக் காழ்ப்பு இல்லாமல் சீவக சிந்தாமணியை உற்று நோக்குவோர்க்குத் திருத்தக்க தேவரின் உள்ளம் புலனுகும். துறவி தந்த மணநூல் பல உண்மைகளை உணர்த்தும்.

சிந்தாமணிக் காப்பியத்தைச் சிற்றின்பம் பாடும் நூல் என்று குறை கூறுவோரைக் காணும் போது அவர்களையே,

''அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும்
ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார்''

என்று பாரதியார் கூறினுரோ என்று நினைக்கத் தோன்று கின்றது.

# 16. காலத்தின் அடிச்சுவடு

ஓவியன் தன் காலத்தில் கிடைக்கும் வண்ணங்களையும் எழுதுகோலையும் கொண்டு ஓவியந் தீட்டித் தன் கலைத்திறனை வெளிப்படுத்துகின்முன். சிற்பி தான் வாழும் நாட்டில் கிடைக்கும் கற்களின் உளியைப் பாய்ச்சிக் கலையை மலர வைக்கின்முன். இசைப் புலவன் தன் காலத்து இசைக் கருவிகளைக் கொண்டு தன் ஆற்றலை வெளியிடுகின்முன். இவ்வாறே காப்பியப் புலவனும் தன் காலத்தில் வழங்கும் கதையை எடுத்துக் கொண்டு, தன் காலத்தில் வாழும் மக்கள் வாழ்க்கையை அதில் அமைத்துக் கொண்டு, இலக்கியப் புலமையை உலகிற்கு வழங்குகின்முன். இதனால்தான் புலவன் வாழ்ந்த

காலத்தின் நன்மை தீமைகளும் மக்கள் வாழ்வில் உள்ள மேடு பள்ளங்களும் சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வும் அவன் இயற்றும் காப்பியத்தில் அப்படியே இடம் பெற்றுவிடுகின்றன. அவை நம் காலத்திற்கு மாறாக இருக்கின்றன என்பதற்காகப் புலவனைக் குறை சொல்வதால் பயனில்லை. அவன் வாழ்ந்த காலத்தின் இயல்பு அது என்று தெளிந்து அமையடைய வேண்டும்.*

நீதி நூல் இயற்றும் புலவனுக்கு அறம் உரைக்கும் வாய்ப்பு மிகுதியாக உண்டு. தீமைகளை எடுத்துக்காட்டி, வெறுத்து நன்மைகளைப் போற்றிப் பாராட்டும் உரிமை மிகுதியாக உண்டு. காப்பியப் புலவனுக்கு அத்தகைய வாய்ப்பும் உரிமையும் குறைவாகவே அமைகின்றன. எங்கோ சில இடங்களில், ஏதோ ஒரு பாத்திரத்தின் வாயிலாகத் தன் குரலை உரக்க எழுப்பித் தன் ஆவலை அவன் தீர்த்துக் கொள்கிறான். ஆனால் சமுதாயத்தின் குறைகளையும் சீர்கேடுகளையும் நின்று நிலைத்து விட்ட பழக்க வழக்கங்களையும் அவன் உள்ளவாறே காட்டாமல் மறைத்துவிட முடியுமா?

சீவக சிந்தாமணியில் திருத்தக்க தேவர் காலத்து மக்கள் வாழ்க்கை இடம் பெறுகின்றது : அந்த வாழ்க்கையில் உள்ள குறைகளும் இடம் பெறுகின்றன. டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் தேவர் காலத்து மக்களிடம், சங்க காலத்தில் இல்லாத சாதி சமய வேறுபாடுகள் இருந்ததை எடுத்துக்காட்டுகின்றார் (தமிழ் காதல்-பக்:171) :

''கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பின் தமிழில் தோன்றிய சிறிய பெரிய இலக்கியத்திற்கெல்லாம் சமயச் சார்பும் சாதிச் சார்பும் உண்டு. இலக்கியம் பெற்ற இப் புதிய உறவுகளை

* "All the great epics of the world have, however, perfectly clearly a significance in close relation with the spirit of the time' (L) Abercrombie. The epic P. 88.

இலக்கிய வரலாறு கற்குநர் அறிகுவர். திணை மக்கள் என்ற இயற்கைப் பாகுபாடு உடையவராகச் சங்கத் தமிழ் மக்கள் விளங்கினர். சங்கப் பின் மக்களோ சமய மக்களாகவும் சாதி மக்களாகவும் சில அயற் சூழ் நிலைகளால் பிரிவுண்டனர்; தமக்குள்ளே ஏற்றத் தாழ்வு செய்து கொண்டனர். இலக்கியப் பிறவிக்குச் சமுதாயமே தாயாதலின், சாதி சமயக் கோட்பட்ட இடைக்காலத் தமிழ்ச் சமுதாயம், அன்ன இலக்கியங்களையே தோற்றிற்று. சங்க இலக்கியம் போல்பவற்றைப் பிறப்பிக்கும் ஆற்றலை இழந்துவிட்டது. இடைக்காலத்தோர் காதல் முதலாம் வாழ்க்கைக் கூறனைத்தையும் சாதி சமயக் கண் கொண்டே மதித்தனர்; அன்னவர் உள்ளம் சாதி நெஞ்சமாகவும் சமய நெஞ்சமாகவும் புதிய வடிவு பெற்றது. அன்னோர் தம் இல்லற துறவறமெல்லாம் சாதி சமய வரம்புக்கு உட்பட்டே வளர்ந்து வந்தன.

''இக் காலப் பெருங்காப்பியங்களுள் ஒன்று சீவக சிந்தாமணி. நந்தகோன் என்னும் இடையர்கோன் தன் பகைவரை வெல்லுபவனுக்குத்தன் மகள் கோவிந்தையை மணஞ் செய்து அளிப்பதாகப் பறையறைந்தான்; சத்திரியப் பிரிவு (அல்லது வணிக வளர்ப்பு) உடைய சீவகன் நந்த கோனது எதிரிகளை வென்றான் எனினும் இடை மகளாகிய கோவிந்தையை மணங் கொண்டானா?

> ''குலம் நினையல் நம்பி! கொழுங் கயற்கண் வள்ளி
> நலன் நுகர்ந்தான் அன்றே நறுந்தார் முருகன்!
> நிலமகட்குக் கேள்வனும் நீணிரை நப்பின்னை
> இலவலர்வாய் இன்னமிர்தம் எய்தினன் அன்றே''

இது இடையர்கோன் நந்தகோன் சீவகனுக்குச் செய்யும் வேண்டுகோள்; குலவேற்றுமையை நினையாதே; தெய்வ

முருகன் குறவள்ளியை மணக்கவில்லையா? திருமால் இடையர் குலத்து நப்பின்னையைத் திருமணம் கொள்ளவில்லையா? என்று ஏதுக்காட்டுகிருன் நந்தகோன்; பயனில்லை. சீவகன் சமணனாயினும் சாதிமை கொண்டவன்; முருகன் திருமால் போன்ற தெய்வங்கள் சாதி மாறி வரையலாம்; ''பொன்னிழை மகளிர் ஒவ்வாத வரை முன் புணர்தல் செய்வார். இன்னதான் முறைமை மாந்தர்க்கு என மனத்து எண்ணினனே'' என்று சீவகன் சாதிப்பற்றைத் திருத்தக்க தேவர் வலியுறுத்துகின்ருர். முடிவில் நடந்தது என்ன? சீவகன் தான் மணவாது தன் தோழனை ''பதுமுகனுக்கு என்று கோவிந்தையை ஏற்றுக் கொண்டான்.

**மணத்தில் புதுமை :-** சீவகன் கோவிந்தையை ஏற்றுக் கொண்ட முறையில் புதுமை இருக்கின்றது.

> ''ஏறங்கோள் முழங்க ஆயர்...
> பதுமுக குமரற்கு என்றே (489)

என்ற பாடலில் திருமணச் சடங்குகள் யாவும் கூறப்படுகின்றன. இசைக் கருவிகள் முழங்க, மணப்பந்தலில் அமர்ந்து, நந்தகோன் நன்னீர் சொரிய, சீவகன் கோவிந்தையை ஏற்றுக் கொள்கின்ருன். தன்னுடைய மனைவியாக அவளை ஏற்காமல் பதுமுக குமரற்கு என்று ஏற்ருனும்! பிறனுக்கு என்று ஒருத்தியை ஏற்கும் மணமுறை புதுமையாய் உள்ளது! சீவக சிந்தாமணிக்கு முன் உள்ள இலக்கியங்களில் காணுத ஒன்ருக உள்ளது! அகநானூற்றில் நிகழும் திருமணச் சடங்கிற்கும் சிந்தாமணியில் நிகழும் திருமணச் சடங்கிற்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. இதுவும் காலம் செய்த மாறுதல்!

**மகட்கொடை :** பெண்ணைப் பெற்றவர் தாமே ஓர் ஆடவனிடம் சென்று, தம் மகளை மணந்து கொள்ளுமாறு

வேண்டுதல், சங்க நூல்களில் காணுத ஒரு வழக்கமாகும். பெண்வீட்டை ஆடவரே தேடிவந்து, பெண் தருமாறு வேண்டிப் பொன்னும் பொருளும் தந்து மணப்பதே சங்க இலக்கியத்தில் காணும் முறைமை. இதைத் தேவரும் உணர் கின்ருர்; மரபு மாறுவதை நினைக்கின்ருர். பின்வரும் பாட்டில் அவர் உள்ளம் வெளிப்படுகின்றது :

''யாம்மகள் ஈதும்; நீர்மகள்
கொள்மின் !'' — என யாரும்
தாம்மகள் நேரார் ஆயினும்
தண்ணென் வரைமார்பிற்
பூமகள் வைகும் புண்ணியப்
பொற்குன்று அனையானுக்கு
யாம்மகள் நேர்ந்தேம் இன்று !''—என
நாயகற்கு அவர் சொன்னர் (1056)

குணமாலையின் தந்தை, சீவகனை வேண்டியதாக அமைந் துள்ள பாடலில், தமிழ் நாட்டின் பழைய மரபு தேவர் உள்ளத் தில் நீங்காமல் இருப்பது வெளிப்படுகின்றது.

# 17. புனையா ஓவியம்

பலவகை வண்ணங்களைக் கொண்டு புனையாது (கோலம் செய்யாது) கோடுகள் மட்டும் வரைந்து காட்டிய ஓவியம் புனையா ஓவியம் எனப்படும். எழில் மிகுந்த வண்ண ஓவி யங்கள் பலவற்றைச் சொற்களால் தீட்டிக் காட்டும் திறன்

வாய்க்கப்பெற்ற திருத்தக்க தேவர் இயற்றிய சிந்தாமணியில் புனையா ஓவியங்களும் சில உள்ளன. சில நிகழ்ச்சிகளும் கதைகளும் போதிய அளவு விளக்கமின்றி மிகச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

சீவகனது அருட்செயல்களைக் குறிக்கும் பல நிகழ்ச்சிகளுள், காட்டுத்தீயில் சிக்குண்ட யானைக் கூட்டத்தைக் காத்ததும் ஒன்றாகும். பதுமையார் இலம்பகத்தில் இந்நிகழ்ச்சி இடம் பெற்றுள்ளது. காட்டில் சந்தித்த வேடனுக்கு அறவுரை பலகூறி, கொல்லா விரதத்தின் மேன்மையையும் புலால் உண்ணாமையின் சிறப்பையும் எடுத்துக்கூறிய பின் சீவகன், காட்டுத்தீயில் அகப்பட்ட யானைகளைக் காத்து நன்மை செய்கின்றான். இந்நிகழ்ச்சியை,

குன்றுறை குறவன் போகக்
　　கூர்எரி வளைக்கப் பட்ட
பஞ்சவர் போல நின்ற
　　பகட்டினப் பரிவு தீர்த்தான்　　(1237)

என்று மிகச் சுருக்கமாகக் கூறிமுடித்து விடுகின்றார் தேவர். இயற்கை வருணனைகளை மிக விரிவாகப் பல பாடல்களில் பாடி வண்ண ஓவியம் தீட்டி மகிழும் தேவர் இங்கே இந்நிகழ்ச்சியை விரிவாகப் பாடியிருக்கலாம். இந்நிகழ்ச்சி கதைத் தலைவனோடு தொடர்புடையது; அவனது அருள் நெஞ்சத்தை—அஃறிணை உயிர்க்கும் இரங்கும் நற்பண்பை வெளிப்படுத்துவது; காட்டுத் தீயால் தனக்கு வரும் பெரிய ஆபத்தையும் பொருட்படுத்தாமல், காட்டில் கட்டின்றித் திரியும் வலிமைமிக்க யானைகள் பலவற்றை மீட்கும் கருணை மறத்தை விளக்குவது. ஆதலின் இந்நிகழ்ச்சியைத் தேவர் மிக விரிவாகப் பாடியிருக்கலாம். காட்டு யானைகள் தீயைக் கண்டால் அஞ்சி ஓடும் இயல்

புடையவை. காட்டுத்தீ கனன்று எரிந்து மரங்களைத் தீய்த்துச் சுட்டு விரைந்து பரவித் துன்புறுத்தும் தன்மையுடையது. காட்டுத் தீயின் கொடுமை, யானைக் கூட்டத்தின் அச்சம், களிறும் பிடியும் கன்றும் படும்பாடு, அவை இங்குமங்கும் ஓடி அலையும் நிலை, அச்சத்தால் பிளிறும் ஓசை ஆகியவற்றை விரிவாகப் பாட வாய்ப்பு மிகுதியாக உண்டு. சீவகன் காட்டுத் தீயைக் காணுதல், அதன் நடுவே வலிமை மிக்க யானைக் கூட்டம் சிக்கி இருப்பதைக் கண்டு இரங்குதல், யானைகளிட மிருந்தும் காட்டுத்தீயிடமிருந்தும் தன்னைக் காத்துக்கொண்டு யானைகளைக் காப்பாற்றுதல் ஆகியவற்றைச் சுவையோடு பாடி இருக்கலாம். திருத்தக்க தேவர் ஏனோ இந்நிகழ்ச்சியை ஒன்பது சொற்களில் கூறி நிறுத்திவிடுகின்றார். ஒன்பது சொற்களிலும் ஓர் உவமை இடம்பெற்று வருகின்றது!!

விமலையார் இலம்பகத்திலும் புனையா ஓவியம் ஒன்று இடம் பெற்றுள்ளது. விமலை ஒரு வாணிகன் மகள். அவள் தந்தை வாணிகம் செய்யப் பலநூறுயிரம் பொன்னுக்குப் பொருளை வாங்கிக் குவித்துள்ளான். ஆனால் அப்பொருள்கள் விலை யாகாமல் தேங்கிக் கிடக்கின்றன. சோதிடர்கள், ''விமலைக் குரிய கணவன் உன் கடைக்கு வந்தவுடன், உனது கடையில் விற்கப்படாமல் முடங்கிக் கிடக்கும் சரக்குகள் யாவும் விற்று விடும்'' என்று விமலையின் தந்தையிடம் கூறியிருந்தனர்.

பந்தாடும் விமலையைக் கண்டு காதல் கொண்ட சீவகன், அவள் தந்தையின் கடையருகே சென்று நிற்கின்றான். முடங்கிக் கிடந்த பொருள்கள் யாவும் உடனே விற்று விடு கின்றன. இந்நிகழ்ச்சியைத் தேவர்,

'என்றுங் கோல் மாதர் நலம் எய்துவது—என்று சிந்தித்து
ஒன்றூர்க் கடந்தான் புலம்புள் கொண்டு இருத்தலோடும்
அன்றே அமைந்த பசும் பொன்னடர் ஆறு கோடி
குன்றுமல் விற்றான் குளிர் சாகர தத்தன் என்பான் (1973)

என்று கூறுகின்றார். இந்நிகழ்ச்சியைத் தேவர் விரிவாகப் பாடி இருக்கலாம். வாணிகன் கடையில் இருந்த பொருள்கள் ஆறுகோடி என்றும் (1973) வங்கநிதியம் (1977) என்றும் கூறப்படுகின்றன. ஆறுகோடி பெறுமான விலையுயர்ந்த பொன்னும் மணியும் பிற பண்டங்களும் எவை என்பதையும், கப்பல் கொள்ளத் தக்க பெரும் பொருள்கள் எவை என்பதையும் தேவர் விளக்கி இருக்கலாம். வாணிகம் நடக்கும் அங்காடித் தெரு, விற்போர் வாங்குவோர் செய்யும் ஆரவாரம், மக்கள் நடமாட்டம், சாகர தத்தன் கடையில் பொருள்கள் விற்காமல் கிடந்தவகை, சீவகன் வந்து நின்றதும் உடனே பொருள்கள் யாவும் விற்றமுறை, அவற்றை வாங்கியவர் பெருமை ஆகியவற்றை விரிவாகப் பாடி இருக்கலாம்.

வண்ண ஓவியங்கள் பல கொண்ட தேவர் காவியத்தில் இத்தகைய புனையா ஓவியங்களும் உள்ளன.

# 18. மறைந்த மணிகள்

சீவக சிந்தாமணியில் குணமாலையார் இலம்பகத்தின் இறுதியில் உள்ள பாடல்களைப் படிக்கும்போது கதை நிகழ்ச்சி தொடர்பின்றி உள்ளது. சில பாடல்கள் மறைந்து விட்டனவோ என்ற ஐயம் எழுகின்றது.

குணமாலையார் இலம்பகத்தில், கட்டியங்காரன் ஏவிய ஆட்கள் சீவகனைக் கட்டி அரண்மனைக்கு இழுத்துக் செல்லு கையில், சுதஞ்சணன் என்னும் தேவமைந்தன் பெரிய காற்று மழையை இடிமின்னலோடு ஏவி, மன்னனது ஆட்களைத் திணற வைத்துச் சீவகனை மீட்டுக் கொண்டு வானில் சென்று விடுகிறான். சீவகனை இழந்த பின், கட்டியங்காரனின் ஆட்கள்

வேறு ஒருவனைப்பிடித்து வாளால் பிளந்து சிதைத்து அவனே சீவகன் என்று நம்புமாறு நகர மக்களுக்குக் காட்ட, நகர மக்கள் பெரிதும் துன்புறுகின்றனர் (1168).

இதுவரை கதை நிகழ்ச்சி இடையூறு இன்றித் தெளிவாக அமைந்துள்ளது. இதற்குப் பின் ஏவலாட்கள் கட்டியங் காரனிடம்,

''காய்சின வெகுளி வேந்தே !
  களிற்றொடும் பொருத காளை
மாசனம் பெரிதும் மொய்த்து
  மழையினோடு இருளும் காற்றும்
பேசில்தான் பெரிதும் தோன்ற,
  பிழைத்துய்யப் போதல் அஞ்சி
வாசங்கொள் தாரி னானை
  மார்பு போழ்ந்து உருட்டி யிட்டோம்'' (1164)

என்று கூறுகின்றனர். இப்பாடலுக்கு முன் சில பாடல்கள் இருந்திருக்க வேண்டும். ஏவலாட்கள் அரண்மனைக்கு வருதல், கட்டியங்காரனைக் காணுதல்—போன்ற நிகழ்ச்சி களைக் கூறும் பாடல்கள் சில இருத்தல் வேண்டும்.

''காய்சின வெகுளி வேந்தே''—என்ற பாடலுக்குப் பின்,

''அருள்வலி ஆண்மை கல்வி
  அழகு அறிவு இளமை ஊக்கம்
திருமலி ஈகை போகம்
  திண்புகழ் நண்பு சுற்றம்
ஒருவர் இவ் வுலகில் யாரே
  சீவகன் ஒக்கும் நீரார்
பெரிது அரிது இவனைக் கொன்றாய்
  பெறுகெனச் சிறப்புச் செய்தான்'' (1165)

என்ற பாடல் உள்ளது. இப்பாடலுக்கு முன் சில பாடல்கள் இருந்தால்தான் கதைநிகழ்ச்சி தொடர்புடன் அமையும். ''பெரிது அரிது இவனைக் கொன்றாய்''—என்று ஏவலாளரில் யாரைக் கட்டியங்காரன் குறிப்பிடுகிறான் என்பது தெளிவாகத் தெளியவில்லை. ஆதலின் இதற்குமுன் சில பாடல்கள் இருந்திருக்க வேண்டும்.

இவ்விடங்களை உற்று நோக்கும்போது, சீவக சிந்தாமணி என்னும் மணிமாலையில் இருந்த சில மணிகள் மறைந்தனவோ, என்ற ஐயம் எழுவது இயல்பே.

## 19. இடைச் செருகல்

பழந்தமிழ் நூல்களைப் பயின்ற சிலர், இடைக் காலத்தில் தாமே சில பாடல்களை இயற்றி மூல நூல்களில் சேர்த்து விட்டனர். பிற்காலத்தவர் எழுதிச் சேர்த்தவற்றை 'இடைச் செருகல்' என்பர். சீவக சிந்தாமணியில் இடைச் செருகல் பாடல்கள் சில உள்ளன என்பர். டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் பதிப்பில் 3145 பாடல்கள் உள்ளன. தனிப்பாடல் ஒன்று இந்நூலில் 3315 பாடல்கள் இருப்பதாய்க் கூறுகின்றது. சைவ சித்தாந்த சமாஜப் பதிப்பில் 3154 பாடல்கள் உள்ளன.

''முந்நீர் வலம் புரி'' (3143)

என்று தொடங்கும் சிந்தாமணிப் பாடலின் உரை விளக்கத்தில் நச்சினார்க்கினியர், ''தேவர் அருளிச் செய்த செய்யுள் 2700 என்றே கொள்க'' என்று குறிப்பிடுகின்றார். இப்பாடலின் அடிக்குறிப்பில் டாக்டர் உ.வே.சா. அவர்கள், ''மற்றை 445 செய்யுட்களும் கந்தியார் என்னும் பெண் புலவரால் இடை

யிடையே பாடிச் சேர்க்கப்பட்டன என்று சிலர் கூறுகின்றனர். அச் செய்யுட்கள் இன்னவை என்று புலப்படவில்லை'' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இவற்றை நோக்கும்போது இன்று அச்சில் வெளி வந்துள்ள சிந்தாமணி நூலில் பல இடைச் செருகுகள் உள்ளன என்பது புலனாகும். காலந்தோறும் பல பாடல்கள் நுழைந்திருக்கின்றன. பாடல்கள் சேர்ந்ததோடு நச்சினார்க்கினியர் உரை போலவே அந்தப் பாடல்களுக்கும் உரை எழுதிச் சேர்த்திருக்கின்றனர்.

## 20. சிந்தாமணி தந்த ஒளி

திருத்தக்க தேவர் இயற்றிய சீவக சிந்தாமணியைக் காலந்தோறும் தமிழ்ப்புலவர்கள் கற்றுப் புலமையிற் சிறந்து விளங்கினர். சிந்தாமணிக் காப்பியத்தைச் சேக்கிழாரும் கம்பரும் கற்றுத் தாம் இயற்றிய பெருநூல்களில், தேவரின் கவிதைச் சுவையை ஆங்காங்கே கலந்தனர். நச்சினார்க்கினியர், பரிமேலழகர் போன்ற சிறந்த உரையாசிரியர்கள் இக் காப்பியத்தைப் போற்றிக் கற்று மகிழ்ந்தனர். இவர்களுக்குப் பின்னும் சீவகசிந்தாமணியைக் கவிஞர்கள் கற்றுத் திளைத்துத் தாம் இயற்றிய நூல்களில் தேவரின் கருத்துக்களை மேற்கொண்டனர். இலக்கிய உலகில் சிந்தாமணி நல்கும் பேரொளியால் பொலிவு பெற்று விளங்கும் நூல்கள் பல உள்ளன.

சிந்தாமணி ஏட்டுப் பிரதிகளை முயன்று தேடிக் கற்று மகிழ்ந்து பதிப்பிக்கும் பணியில் தாம் ஈடுபட்டிருந்தபோது

தமக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் எண்ணங்களையும் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்கள் :

''சிந்தாமணியிலும் அதன் உரையிலும் மூழ்கியிருந்த எனக்கு மற்ற வேலைகளில் கவனம் செல்லவே இல்லை. அந்த நூலின் புதுமைச் சுவையை நுகர்ந்து நுகர்ந்து இன்புற்றேன். அதனைப் படிக்கப் படிக்கப் பிற்காலத்து நூல்களெல்லாம் எவ்வளவு தூரம் அந்தக் காவியத்திலிருந்து காவிய மரபுகளை அறிந்து அமைத்துக் கொண்டுள்ளனவென்பது நன்கு விளங்கியது''.

—என் சரித்திரம் (1950) பக்கம், 753.

தமிழறிஞர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் சிந்தாமணி பிற்காலக் காப்பியங்களுக்கெல்லாம் வழி காட்டியாய் விளங்குகின்றது என்பதைப் பின்வருமாறு கூறித் தெளிவுபடுத்தியுள்ளார்கள் :

''கம்பனது இராமாயணமும் தணிகைப் புராணம் சேது புராணம் முதலிய தமிழ் நலங்கெழுமிய தல புராணங்களும் தோன்றி நம்மனோர்க்கு இன்பம் சுரந்து வருவதற்கு வழிகாட்டியாகிய ஏற்றம் இச் சிந்தாமணிக்கு உண்டு''.

சீவக சிந்தாமணி–சுருக்கம் (1941) பக்கம்-34, 35.

**பெயர் :** சிந்தாமணி என்ற பெயர் கவிஞர்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளது. சீவக சிந்தாமணிக்குப் பின் தோன்றிய பல நூல்களுக்குச் ''சிந்தாமணி'' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது, மருத்துவம் சோதிடம் சமயம் இலக்கியம் இலக்கணம் ஆகிய பல்வேறு துறை நூல்களுக்குச் சிந்தாமணி என்ற பெயர் அமைந்துள்ளது.

விவேக சிந்தாமணி, சிற்ப சிந்தாமணி, வருண சிந்தாமணி, வைத்திய சிந்தாமணி, நீதி சிந்தாமணி, பதார்த்த குண சிந்தாமணி, சோதிட விளக்க சிந்தாமணி, கதா சிந்தாமணி, சாதக சிந்தாமணி, தமிழிலக்கண சிந்தாமணி, தனிச் செய்யுட் சிந்தாமணி, தைல வருக்க சிந்தாமணி, விட நிக்கரக சிந்தாமணி, வேதாந்தமனன சிந்தாமணி, அபிதான சிந்தாமணி என்ற பெயருடன் தோன்றின.

**மேற்கோள் :** பலப்பல உரையாசிரியர்கள் காலந்தோறும் சிந்தாமணிப் பாடல்களைத் தம் உரைகளில் மேற்கோள் காட்டியுள்ளனர். 'நாய் தேவனுயிற்று' — என்று இலக்கண உரைகள் காட்டும் தொடர் மொழிக்கு உரிய கதை நிகழ்ச்சி சீவக சிந்தாமணியில்தான் உள்ளது. பரிமேலழகர் சிந்தாமணிக் கதை நிகழ்ச்சியையும் பாடல்களையும் தம் உரைகளில் மேற்கோள் காட்டியுள்ளார் (384, 514, 771). தண்டியலங்கார நூலாசிரியர் காப்பியத்தின் உட்பிரிவாகக் கூறும் 'இலம்பகம்' சிந்தாமணியில் மட்டுமே உள்ளது.

**கருத்தின் ஒளி :** பட்டினத்தார், திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் (10), திருத்தக்க தேவர் கருத்தை எடுத்தாளுகின்றார்.

> பேதமை என்னும் வித்தில்
> பிறந்துபின் வினைகள் என்னும்
> வேதனை மரங்கள் நாறி
> வேட்கைவேர் வீழ்த்து முற்றிக்
> காதலும் களிப்பும் என்னும்
> கவடுவிட்டு அவலம் பூத்து
> மாதுயர் இடும்பை காய்த்து
> மரணமே கனிந்து நிற்கும்
>
> (சீவக சிந். 1389)

என்ற சிந்தாமணிப் பாடலின் கருத்தைப் பட்டினத்தார் தம் பாடலில் பின்வருமாறு அமைத்துள்ளார் :

''இச்சைவித்து உதிர்ந்துழி, யான்எனப் பெயரிய
நச்சு மாமரம் நனிமிக முளைத்துப்
பொய்யென் கவடுகள் போக்கிச் செய்யும்
பாவப் பல்தழை பரப்பிப் பூவெனக்
கொடுமை அரும்பி, கடுமை மலர்ந்து
துன்பப் பல் காய் தூக்கிப் பின்பு
மரணம் பழுத்து நரகிடை வீழ்ந்து
தமக்கும் பிறர்க்கும் உதவாது
இமைப்பில் கழியும் இயற்கையோர் உடைத்தே''

(மும்மணிக் கோவை-10)

சேக்கிழார், சிந்தாமணியில் உள்ள சில உவமைகளைத் தம் நூலில் எடுத்தாளுகின்றார். திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் (செய்யுள் 26) ஊர்கோளால் சூழப்பட்ட மதி உவமையாக வந்துள்ளது. இதே உவமையைச் சிந்தாமணி முன்னரே பயன்படுத்தியுள்ளது :

கட்டழற் கதிரை ஊர்கோள்
வளைத்தவா வளைத்துக் கொண்டார் சிந்தா. 1136.

சிந்தாமணியில், உடும்பின் வலிய பிடிப்பு உவமையாக வந்துள்ளது :

[illegible] தனைக்கிறப் பறித்த போதும்
தான்அளை விடுத்தல் செல்லா
திணைப்புடை உடும்பு அனுரை
யாதினால் நீக்க லாகும் சித்: 2887.

இந்த உவமையைப் பெரிய புராணத்தில் கண்ணப்பர் கதையில் சேக்கிழார் அமைத்துள்ளார்:

"வங்கினைப் பற்றிப் போதா
வல் உடும்பு என்ன நீங்கான் —பெரிய கண்ண 116.

கம்பர், திருத்தக்க தேவரின் சீவக சிந்தாமணியைப் போற்றிக் கற்றுள்ளார். பாடலின் ஓசை, உவமை, கருத்து, சொல்லும் முறை ஆகிய பல வழிகளிலும் கம்பர் திருத்தக்க தேவரைப் பின்பற்றுகின்றார். கம்பராமாயணப் பாடல்களில் பல சிந்தாமணிப் பாடல்களை நினைவூட்டுகின்றன. இரண்டிற்கும் பொதுவாய் உள்ள பகுதிகளைக் காண்போம்.

திருத்தக்க தேவர், ஏமாங்கத நாட்டின் வளத்தைப் பாடும்போது மருத நிலத்தின் மாண்பைப் பலவாறு புனைகின்றார். மருத நிலத்து உழவர்களைப் பற்றிப் பாடும்போது,

கண்எனக் குவளையுங் கட்டல் ஓம்பினர்;
வண்ணவாள் முகமென மரையினுள் புகார்;
பண்ணெழுத் தியல்படப் பரப்பி யிட்டனர்;
தண்வயல் உழவர்தம் தன்மை இன்னதே. (சீவக சித்-51)

என்று கூறுகின்றார். இப்பாடலின் கருத்தைக் கம்பர்,

பண்கள்வாய் மிழற்றும் இன்சொற்
கடைசியர் பரந்து நீண்ட
கண் கை கால் முகம் வாய் ஒக்கும்
களை அலால் களை இலாமை
உண்கள்வாய் கடைவாய் மள்ளர்
களைகலா(து) உலவி நிற்பார் (பால-நாட்டுப்-10)

என்ற பாடலில் அமைத்துள்ளார்.

நிலவின் தோற்றத்தை,

> கைவிளக்கு ஏந்தி யாங்கு
> வீறுயர் மதியம் தோன்ற (சீவக சிந்–1542)

என்று சிந்தாமணி ஆசிரியர் பாடுகின்றார். கம்பர் இவ்வுவமையைத் தம் பாடலில் மேற்கொள்ளுகின்றார் :

> வானம்
> கைவிளக்கு எடுத்தது என்ன
> வந்தது கடவுள்மா திங்கள் (தைலபாட்டுப்–49)

போர்க்களத்தில் குதிரை, குயவனின் திகிரிபோலச் சுழன்றது என்று திருத்தக்கதேவர் உரைக்கின்றார் :

> கூட்டுற முறுக்கி விட்ட
> குயமகன் திகிரி போல
> வாட்டிறல் தேவ தத்தன்
> கவினமா ... திரியும் அன்றே (சீவக சிந்–786)

இந்த உவமையைக் கம்பர் கையாளுகின்றார் :

> கொட்புறு கலினப் பாய்மா
> குலாள்மகன் முடுக்கி விட்ட
> மட்கலத் திகிரி போல—
> வாளியின் வருவ (மிதிக் காட்சி–13)

நகரத்துத் தெருவில் பல்வேறு மொழிபேசுவோர் கூடி இருந்து பேசுவது, பழுத்த மரத்தில் பலவேறு பறவைகள் கூடி ஒலிப்பதுபோல் இருக்கின்றது என்கிறார் தேவர் :

இட்டவள் நிலப்படா வகையின் ஈண்டிய
முட்டிலா மூவறு பாடை மாக்களால்
புட்பயில் பழுமரப் பொலிவிற் றாகிய
மட்டிலா வளநகர் வண்ணம் இன்னதே (சீவக சிந்-93)

தேவர் சொன்ன உவமையைக் கம்பர் போற்றித் தம் கவிதையில் அமைத்துக் கொள்ளுகின்றார் :

ஆரியம் முதலிய பதினெண் பாடையிற்
பூரியர் ஒருவழி புகுந்த போன்றன
ஓர்கில கிளவிகள் ஒன்றோடு ஒப்பில
சோர்விலா விளம்புபுள் துவன்று கின்றது (பம்பைப்-14)

உவமைகளை மட்டுமன்றி பாடலின் ஓசை, கருத்தை வெளியிடும் வகை ஆகியவற்றிலும் கம்பர் தேவரைப் பின் பற்றியுள்ளார் சிந்தாமணியில் சீவகனைப் பிரிந்த பதுமை,

திரைவீழ் அருவித் திமிர்பொன் சொரியும்
வரையே ! புனலே ! வழையே ! தழையே !
வரையார் பொழிலே ! விரிவெண் ணிலவே !
உரையீர் உயிர்கா வலனுள் வழியே ! (சீவக சிந்-1376)

என்று புலம்புவதாய்த் தேவர் பாடுகின்றார்.

கம்பர், சிந்தாமணிப் பாடலின் ஓசையையும் கருத்தை வெளியிடும் முறையையும் பின்பற்றி இராவணனால் கவர்ந்து செல்லப்படும் சீதை புலம்புவதாய்ப் பின்வரும் பாடலை அமைத்துள்ளார் :

மலையே! மரனே! மயிலே! குயிலே!
கலையே! பிணையே! களிறே! பிடியே!
நிலையா உயிரேன் நிலைதே றினர்போய்
உலையா வலியார் உழைநீர் உரையீர்! (சடாயுவுயிர்-77)

சீவக சிந்தாமணியில் பதுமை என்பாள் தன் காதலன் சீவகனைப் பிரிந்து வருந்தும்போது,

மையில் வாள்நெடுங் கண்வள ராதன
மெய்யெலாம் உடையாய்! மெய்ம்மை காண்டி நீ
ஐயன் சென்றுழிக் கூறுகென்று ஆய்மயில்
கையிறல் தொழுதாள் கயற் கண்ணினள் (சீவக சிந்-1366)

என்று அவள் மயிலை வேண்டுவதாய் ஒரு பாடல் உள்ளது. சீதையை இழந்து புலம்பும் இராமன்,

ஓடா நின்ற களிமயிலே
சாயற்கு ஒதுங்கி உள்ளழிந்து
கூடா தாரின் திரிகின்ற
நீயும் ஆகம் குளிர்ந்தாயோ?
தேடா நின்ற என் உயிரைத்
தெரியக் கண்டாய் சிந்தை உவந்(து)
ஆடா நின்றாய் ஆயிரங்கண்
உடையார்க்கு ஒளிக்கு மாறுண்டோ! (பம்பைப்-27)

என்று கூறுவதாய் உள்ளது. தேவரிடமிருந்து கம்பர் தம் பாடலுக்கு வேண்டிய கருத்தைப் பெற்றுள்ளார்.

செல்வம் நிலையில்லாதது என்ற கருத்தைச் சிந்தாமணி ஆசிரியர்,

புரிமுத்த மாலைப் பொற்கோல்
விளக்கினுள் பெய்த நெய்யும்
திரியும் செம(று) அற்ற போழ்தே
திருச்சுடர் தேம்பின் அல்லால்
எரிமொய்த்துப் பெருகல் உண்டோ ?
இருவினை சென்று தேய்ந்தால்
பரிவுற்றுக் கெடாமல் செல்வம்
பற்றியார் அதனை வைப்பார் ? (சீவக சிந்-2316)

என்ற பாடலில் கூறியுள்ள கருத்தையும் உவமையையும் கம்பர்,

புண்ணிய நறுநெயிற் பொருவில் காலமாம்
திண்ணிய திரியினில் விதியென் தீயினில்,
எண்ணிய விளக்கு அவை இரண்டும் எஞ்சினால்
அண்ணலே ! அவிவதற் கையம் யாவதோ ? (கிளைகண்டு-75)

என்ற தம் பாடலில் அமைத்துள்ளார்.

''எங்கள் வினையால்'' என்று தொடங்கும் சிந்தாமணிப் பாடலின் (1793),

எங்கெழிலென் ஞாயிறென
இன்னணம் வளர்ந்தேம்

என்ற ஈற்றடியைப் பிற்காலத்தில் சிந்தாமணிப் பயின்ற புலவர் ஒருவர் தாம் பாடிய தனிப்பாடலில் அமைத்துள்ளார் :

''திருத்தக்க தேவர்சிந் தாமணியும் கம்பர்
விருத்தக் கவித்திறமும் வேண்டேம்—உருத்தக்க
கொங்குவேள் மாக்கதையைக் கூறேம் குறளணுகேம்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கு''

நளவெண்பாவை இயற்றிய புகழேந்திப் புலவர் சீவக சிந்தாமணியைக் கற்று மகிழ்ந்துள்ளார். தம் நூலில் ஓரிடத்தில் திருத்தக்க தேவர் கருத்தைப் போற்றி மேற்கொண்டுள்ளார். நளன் தமயந்தியிடம் அன்னத்தைத் தூது அனுப்பிவிட்டு,

> ''இவ்வளவிற் செல்லுங்கொல் இவ்வளவிற் காணுங்கொல்
> இவ்வளவிற் காதல்இயம் பும்கொல்—இவ்வளவில்
> மீளுங்கொல் என்றுரையா விம்மினன் மும்மத நின்று
> ஆளுங்கொல் யானை அரசு'' (சுயம்வர-40)

என்று பலவகையாய் நினைத்ததாய்ப் புகழேந்தி பாடுகிறார். இப்பாடல் கீழ்வரும் சிந்தாமணிப் பாடலை நினைவூட்டுகின்றது :

> ''தன்துணைவி கோட்டியின் நீங்கித் தனியிடம் பார்த்து,
> இன்துணை வற்சேர்வான் இருந்ததுகொல் போந்ததுகொல்
> சென்றதுகொல் சேர்ந்ததுகொல் செவ்வி அறிந்துருகும்
> என்துணைவி மாற்றம் இஃது என்றதுகொல் பாவம்''
> (சீவக சிந்-1035)

சீவகனிடம், குணமாலை கிளியைத் தூது அனுப்பிவிட்டு எண்ணிய எண்ணங்களைத் திருத்தக்க தேவர் இப்பாடலில் குறிப்பிடுகின்றார்.

இத்தாலி நாட்டு அறிஞரும் தமிழறிந்த பெருமகனாரும் ஆகிய பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் உள்ளத்தில் சீவக சிந்தாமணி இடம் பெற்றுள்ளது. அவர் இயற்றியுள்ள தேம்பாவணி என்னும் நூலில், சில இடங்களில் திருத்தக்க தேவர் குரலின் எதிரொலி கேட்கின்றது : நெற்பயிரின் வளர்ச்சியை,

சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந்து ஈன்று, மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே (சீவக சிந்-53)

என்று திருத்தக்க தேவர் பாடியுள்ளார். இப்பாடலின் கருத்துத் தேம்பாவணியில்,

பூரியார் திருப்போல்தலை பசிய சூழ்நிறுவி
நீரினுர் தலை நேர நேர் வளை வொடு பழுத்த
ஆரமானும் நெல் லறுத்தரி கொண்டு போய் அங்கண்
போரிதா மெனக் களித்தனர் போர்பல புனைவார்

(தேம்பாவணி-நாட்டுப்படலம் 14)

என்ற பாடலில் உள்ளது.

தென்னை மரத்திலிருந்து காய் ஒன்று விழ, அதனுல் ஏற்படும் விளைவுகளைச் சிந்தாமணி ஆசிரியர்,

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங்கதம் என்று இசையால் திசை போய துண்டே

(சீவக சிந்-31)

என்ற பாடலில் குறிப்பிடுகின்றுர். இப்பாடலின் கருத்தை தேம்பாவணி ஆசிரியர் தம் நூலில் பின்வரும் பாடலில் அமைக்கின்றுர் :

பாய்ந்த தேங்கதின் பழங்கள் வீழ்தலால்
வாய்ந்த வாழைமா வருக்கை ஆசினி
சாய்ந்த தீங்கனி சரிந்ததேன் புனல்
தோய்ந்த வாயெலாம் இனிமை தோய்ந்தன

(தேம்பாவணி-நாட்டுப்படலம்-33)

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள், சீவக சிந்தாமணியில் உள்ள சில பாடல்களின் கருத்தைத் தம் கவிதைகளில் மேற்கொண்டுள்ளார். சீவக சிந்தாமணியின் கதைத் தலைவனாகிய சீவகன் ஒரு காட்டு வழியிற் செல்லுகையில், தம் மனைவியரோடு இருந்து தவம் செய்யும் தவசியரைக் காண்கின்றான்; அவர்களுக்கு, பின்வரும் அறிவுரைகளைக் கூறுகின்றான் :

''உறியில் தங்கி இருந்து காயும் பழமும் தின்றால் தீவினை அகலும் என்றால், மரத்தில் தொங்கும் வெளவால்களின் தீவினையும் அகலும் அல்லவா? அல்லிக் கொட்டையில் உள்ள அரிசியும் புல்லரிசியும் உண்டு, நெருப்பிடை நின்று தவமிருந்தால் வினைகள் தீரும் என்றால் கற்களை உண்டு காட்டில் வாழும் புறாக்களும் வினைகள் நீங்கி நற்பேறடைய வேண்டும் அல்லவா? சடை வளர்த்து நீரில் மூழ்கி உடம்பை வருத்தினால், நற்பேறு பெறலாம் என்றால், காட்டில் வாழும் கரடிகளும் அந்தப் பேறு பெற வேண்டாமா? மனைவியரோடு காட்டில் தங்கி இருந்து தவம் செய்தால் வீடுபேறு அடைய முடியும் என்னில், காட்டில் உள்ள குறவர்களும் வீடுபேறு அடைய முடியும் அல்லவா?

இக் கருத்துக்களைக் கூறும் பாடல் சிந்தாமணியில் (1429-1432) உள்ளன.

இப்பாடல்களின் கருத்துக்கள் கவிமணியின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளன. ஆதலின் அவற்றை அவர் 'அன்பின் வெற்றி' என்ற கதைப் பாடலில் அமைத்து மகிழ்கின்றார். அப்பாடல்களைக் கீழே காண்போம் :

நித்தம் நித்தம் நீராடில்
நெடுமால் அருளைப் பெறலாமேல்
தத்தும் தவளை மீன்களும் அத்
தனிப்பே றடைய வேண்டாவோ? — 7

காயும் கனியும் அருந்துவதால
கண்ணன் கழலைப் பெறலாமேல்,
ஆயும் கிளைவாழ் குரங்குகளும்
அப்பே றடைய வேண்டாவோ ? — 8

வாடும் புல்லைத் தின்பதனுல்
மாயன் கிருபை பெறலாமேல்,
ஆடும் மாடும் மான்களும் அவ்
அரும் பேறடைய வேண்டாவோ — 9

பெண்ணின் இன்பம் துறப்பதனுல்
பெருமான் பாதம் பெறலாமேல்,
மண்ணில் எல்லா அலிகளும்அம்
மாபே றடைய வேண்டாவோ ? — 10

பாலை நிதமும் குடிப்பதனுல்
பரமன் அடியைப் பெறலாமேல்,
ஞால மீது சிசுக் களும் அந்
நற்பே றடைய வேண்டாவோ — 11

கவிமணியின் பாடல்களில், திருத்தக்க தேவர் குரலின் எதிரொலியைக் கேட்கலாம்.

இவ்வாறு சிந்தாமணி தந்த ஒளி, தமிழ் இலக்கிய உலகில் காலந்தோறும் சிறப்புப்பெற்றுள்ளது.

# 21. காலத்தை வென்ற கலைச் செல்வம்

சீவக சிந்தாமணி தோன்றிய காலம் முதல் இன்றுவரை தமிழகத்தில் கணக்கற்ற மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. சமயப் பூசல் காழ் கொண்டு முற்றி வெறியாட்டமாடியிருக்கிறது. பிற நாட்டார் படையெடுப்பால் தமிழ் அரசியல் நிலை குலைந்து சிதறியிருக்கிறது. உள்நாட்டுக் கலகங்களால் தமிழ் நிலம் தாக்குண்டு அதிர்ந்து கீழ்நிலை அடைந்திருக்கின்றது. தமிழ்ப் பண்பாட்டை அழிக்கும் இடியும் மின்னலும் சூறுவளியும் பல முறை ஏற்பட்டிருக்கின்றன. கால வெள்ளம் எத்தனையோ முறை தன் போக்கை மாற்றிக் கொண்டு, சுழன்று பெருகி ஓடியிருக்கின்றது. இத்தனைக்கும் தப்பி, தேவர் காப்பியம் இன்றும் நம்மிடையே வாழ்ந்து வருகின்றது.

சமண சமயம் வலிமை குன்றிய போதும் சமண நூலாகிய சிந்தமாணி வாழ்கின்றது. சைவ சமயம் வளர்ந்து பெரிய புராணம் தோன்றிச் செல்வாக்குப் பெற்ற பின்னரும் சிந்தாமணி வாழ்கின்றது. சமணத்தை வெறுத்த சைவப்பெரியார் பலரும் சிந்தாமணியைக் கற்றிருக்கின்றனர். சமண சமயத்தின் செல்வாக்கால் சிந்தாமணி சிறந்து விளங்கிய காலம் ஒன்று இருந்தது ஆனல் இன்றும் இலக்கியச் சுவை அதை வாழ வைக்கின்றது. தமிழ் மொழியின் வளமும் கலைப்பொலிவும், கற்பனை இன்பமும் அக் காப்பியத்தை இனியும் வாழச் செய்யும்.

வருங்காலத்தில் ஒருவரையே போற்றிக் கொண்டாடும் 'வீர வழிபாடு' மக்களிடம் குறைந்துவிடும்.

> ''வீரவழிபாடு என்னும் பெயரால்
> தனித்தனி மனிதனைத் தலையில்தூக்கி
> வெறிகொண்டு ஆடல் அறிவாகாது'' —திரு வி.க.

என்று தெளிவுபடுத்தி மக்களுக்கு அறிவூட்டும் சான்றோர் பலர் தோன்றுவர். தன்னிகரில்லாத் தலைவனே காப்பியத் தலைவன் என்ற எண்ணம் மாறி, எளிய மக்களின் எளிய வாழ்க்கையில் உள்ளதை உள்ளதுபோலக் காட்டும் உரைநடைக் காப்பியம் படைக்கும் கலைஞர்கள் பலர் இன்று தோன்றி வருகின்றனர். எல்லோரிடமும் குறைநிறை காணும் பண்பு மக்களிடையே வளர்ந்து வருகின்றது. எல்லோரும் சமம், எல்லோருக்கும் எல்லாம் உரியவை—என்ற பொதுமை எண்ணம் மெல்ல மெல்ல வளர்ந்து வருகிறது. இவை எல்லாம் காலம் செய்துவரும் மாறுதல்கள் :

இத்தகைய எண்ணமும் கருத்தும் ஓங்கினால், வருங் காலத்தில் காப்பியத்திற்கு வாழ்வு உண்டா—என்ற வினா எழுகின்றது. காலப் போக்கில் கருத்துக்கள் எவ்வளவுதான் மாறினும் காப்பியத்தில் வரும் மக்கள் முற்றிலும் மாறுபட்ட பண்புடையவராகத் தோன்றார். காப்பிய மக்களின் உள்ளத்து உணர்ச்சியும், இன்ப துன்பங்களும் வேறுபட்டவையாய்த் தோன்ற. மேலும் இலக்கியச் சுவையும் கற்பனை இன்பமும் கருதிக காப்பியம் கற்கப்படும். முன்னோர் வாழ்ந்த வகையை அறிய விரும்புவோர் கற்றுப் பயனடைவர். ஆதலின் சிந்தாமணி, காலத்தை வென்ற கலைச்செல்வமாகப் பொலியும்.

**இலக்கியத்தின் அரசு :** இன்று நம் கையில் உள்ள சீவக சிந்தாமணி திருத்தக்க தேவர் தம் ஆற்றல் மிகுந்த பெருங்கைகளால் படைத்த காப்பியம். இது பின்னர்த் தோன்றிய காப்பியங்களுக்குத் தாய் போன்றது; தலைமை யானது. இதில் தமிழ்மணம் கமழ்கின்றது. முன்னோர்களின் புதுமைக் குரல் இதில் தெளிவாக ஒலிக்கின்றது. இந்த நூல் தரும் ஒளியால் சிறந்து விளங்கும் நூல்கள் பல உண்டு.

இது காப்பிய இலக்கணம் முழுதும் நிரம்பிய பெருங் காப்பியமாகும். இதன் அமைப்பு, கற்போர் ஆர்வத்தைத்

தூண்டுகிறது. இதன் வாயிலாகத் தேவர் புதிய உலகம் ஒன்றைப் படைத்துக் காட்டுகின்றார். தன்னேரில்லாத் தலைவனை அறிமுகப்படுத்தி அவன் பண்புகளைத் தெளிவுபடுத்துகின்றார்.

இக் காப்பியத்தைச் சொல்லழகுக்காக ஒருமுறை-கற்பனை ஓவியங்களைக் காண்பதற்காக ஒருமுறை-கருத்துக் கனிகளைச் சுவைப்பதற்காக ஒருமுறை-உவமை நயத்தில் ஈடுபட்டுத் திளைப்பதற்காக ஒருமுறை—ஓசை தரும் இன்பத்திற்காக ஒருமுறை-இலக்கியவானத்தில் கற்பனைச் சிறகு கொண்டு உயரப் பறந்து மகிழ்வதற்காக ஒருமுறை கற்க வேண்டும்.

இந் நூலில் இருப்பதாகக் கூறப்படும் குறைகளும், தேவர் மீது சுமத்தப்படும் குற்றங்களும் நடு நிலைமையான ஆராய்ச்சியால் மறைந்துவிடும். காலத்தை வென்ற கலைச் செல்வமாக இக் காப்பியம் என்றும் நின்று நிலவும்.

'சீவகன்'போல் வீரத்தைக் காதல் தன்னைச்
செப்புவதோர் நூலுண்டோ? தமிழர் நாட்டின்
பாவகன்ற இலக்கியத்தின் அரசு சிந்தா
மணி—என்று பகர்ந்திடுதல் மிகையே இல்லை!

—பாவேந்தர்-பாரதிதாசன்

## நூல்வாழ்க!

"திங்கள்மும் மாரி பெய்க!
திருவறம் வளர்க! செங்கோல்
நன்கினிது அரசன் ஆள்க!
நாடெலாம் விளைக! மற்றும்
எங்குள அறத்தி னோரும்
இனிதூழி வாழ்க எங்கள்
புங்கவன் பயந்த நன்னூல்
புகழொடும் பொலிக மிக்கே!"

# 22. நச்சினார்க்கினியர் பார்வையில் சிந்தாமணி

நச்சினார்க்கினியர், தமிழில் உள்ள தலைசிறந்த இலக்கண இலக்கிய நூல்களுக்கு உரை கண்ட சான்றோர். தொல் காப்பியம் பத்துப்பாட்டு கலித்தொகை ஆகிய நூல்களுக்கு நல்லுரை கண்ட இவர், பெருங்காப்பியமாகிய சீவக சிந்தா மணிக்கும் மிகச் சிறந்த உரையை எழுதியுள்ளார். தமிழிலக்கிய உலகில் உரையாசிரியராய்ச் சிறந்து விளங்கும் இவர் நல்ல நினைவாற்றல் உள்ளவர்; நூற்பயிற்சி மிக்கவர்; ஆராய்ச்சித் திறன் படைத்தவர்; உரை நடைச் செல்வர்; கலைச் சுவையை வெளிப்படுத்தும் கலைஞர். இத்தகைய பல நல்லியல்புகள் கொண்ட இவரை,

> "மதிநுட்பம் நூலோடு உடையார்"

என்றும்,

> கற்றோர் அறியா அறிவினர்; கற்றோர்க்குத்
> தாம்வரம் பாகிய தலைமையர்

என்றும் போற்றுவது தகும்.

திருத்தக்க தேவரின் காப்பியப் பெருங் கோயில், நச்சினார்க்கினியரின் உரையாகிய வண்ணச் சுடர் விளக்கால் புதிய ஒளி பெற்றுத் திகழ்கின்றது. காப்பியத்துள் நுழைந்து காண்பவர்களுக்கு, உரை தரும் ஒளி பேருதவி புரிந்து அங்குள்ள பலவகை உட்பொருள் செல்வங்களைக் கண்டு களிக்க வாய்ப்பளிக்கின்றது. சிந்தாமணிக்கு நச்சினார்க் கினியர் எழுதியுள்ள உரையின் திறத்தை

திருத்தகு முனிவன் கருத்து இது என்னப்
பருப்பொருள் கூடிந்து பொருள் தொடர்ப்படுத்து,
வினையொடு முடியப் புனையுரை உரைத்தும்

என்று உரைச் சிறப்புப் பாயிரம் போற்றுகின்றது.

சைவ சமயத்தைச் சேர்ந்த அந்தணரான நச்சினார்க்கினியர், ஜைன சமயக் காப்பியமாகிய சிந்தாமணிக்கு நடுநிலையோடு, சமயக் காழ்ப்பு இன்றி உரை வகுக்கும் பணியை மேற்கொண்டு செம்மையாய்ச் செய்து முடித்துள்ளார். முதலில் இவர் சிந்தாமணிக்கு ஓர் உரை இயற்றி, ஜைன சமயச் சான்றோர்களிடம் காட்டிய போது அவ்வுரை நன்கு அமையவில்லை என்று மறுத்தனர்; பின்னர் ஜைன சமயக் கருத்துக்களை நன்கு ஆய்ந்து தெளிந்து மீண்டும் புதிய உரை விளக்கம் எழுதி அச் சான்றோர்களின் பாராட்டைப் பெற்றார் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். நச்சினார்க்கினியர் இருமுறை உரை எழுதினார் என்ற கருத்தை டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் உடன்படுகின்றார். தமக்கு இரு வகையான உரை விளக்கங்கள் அமைந்த ஏட்டுப் பிரதிகள் கிடைத்தன என்று கூறி, உரை இரு வகையாக அமைந்திருப்பதற்குரிய காரணத்தைப் பின் வருமாறு தெளிவுபடுத்தியுள்ளார்:

"ஜைன அன்பர்களுடைய பழக்கத்தால் ஏட்டுப் பிரதிகள் இரண்டு வகையாக இருந்ததற்குக் காரணம் தெரிந்து கொண்டேன். நச்சினார்க்கினியர் முதலில் சிந்தாமணிக்கு ஓர் உரை எழுதினாராம். பிறகு அதை ஜைனர்களிடம் படித்துக் காட்டிய போது சம்பிரதாய விரோதமாகச் சில பகுதிகள் உள்ளன என்று சொன்னார்களாம். அதனால் அவர் தம்மை ஒரு ஜைனராகச் சொல்லிக் கொண்டு சிற்றாம்பூர் என்னும் இடத்திலுள்ள ஜைன மடத்திற்கு வந்து சில காலம் தங்கி ஜைன நூல்களையும் சைன சம்பிரதாயங்களையும் கற்றுச் சென்று மீட்டும் புதிய உரையை எழுதினாராம். விசேஷ உரை

யுடன் இருக்கும் பிரதியிலுள்ளது பின்பு எழுதிய உரை என்று தெரிய வந்தது''

(என் சரித்திரம் (1950) பக்கம் 741.)

நச்சினார்க்கினியர் அரிதின் முயன்று எழுதிய சிந்தாமணி உரையைக் காலந்தோறும் அறிஞர்கள் போற்றி வருகின்றனர். பவர் என்னும் ஆங்கிலப் பேராசிரியர், சிந்தாமணி உரைச் சிறப்பையும், நச்சினார்க்கினியர் புலமை மாண்பையும் பின் வருமாறு புகழ்ந்துள்ளார் :

''ஐரோப்பிய இலக்கியத் திறனாய்வாளர்களின் விளக்கத்தைப் போல, இவர் உரைப்போக்கு அமைந்துள்ளது. செய்யுளின் பொருளை விளக்கி இலக்கணத்தின் தனித் தன்மைகளைக் குறிப்பிடுகின்றார். தொல்காப்பியச் சூத்திரங்களைத் தம் உரை முழுதும் மேற்கோள் காட்டுகின்றார். சிறப்பான சொற்றொடர்களை விளக்குகின்றார். தம் காலத்தில் வழங்கி வந்த பல பாட வேறுபாடுகளைத் தருகின்றார். இவரது உரைநடை செறிவான போக்கில் உயர்வான மொழியில் அமைந்துள்ளது. பாகுபாடு செய்யும் பேராற்றலை இவரது படைப்பில் காணலாம்.''*

**இலக்கிய நோக்கு:** நச்சினார்க்கினியர், சிந்தாமணியைச் சிறந்த இலக்கியமாகக் கண்டு கற்றுப் போற்றியுள்ளார். நூலின் தொடக்கத்தில் முதற்பாட்டு உரையில், ''யாமும் இவ்விலக்கியம் இனிது முடிதற் பொருட்டு அவன் திருவடிகளை

---

*His Comments are Very much on the plan of European annotations. He paraphrases the text and points out grammatical peculiaritles· he quotes Tholkappia Sutrams through out, explains Obsolute terms and gives the Vari ous readings which existed in his day; but his style is Condensed and his language pedantic. His productions, however, "Show great powers of analysis"

—Rev. Dr. BOWER.
*History of Tamil literature—Page 256*
*M. S. PurnalingamPillai*

வணங்குவேம் என்றார் என்க'' என்றும், நூலின் இறுதியில் (3142), ''இவ்விலக்கியம் இடுக்கண் இன்றி இனிது முடிந்த மகிழ்ச்சியான், மீட்டும் வணங்கினார்'' என்றும் கூறியுள்ளார்.

சிந்தாமணியை ஆழ்ந்து கற்று, கலையழகில் ஈடுபட்டு, இலக்கியச் சுவையில் தம்மை மறந்து ஈடுபட்டவர் நச்சினார்க்கினியர். ஆதலின் சொற்களுக்குப் பொருத்தமான பொருளை உரைக்கின்றார்; பாட்டில் அமைந்திருக்கும் நுண்ணிய கருத்துக்களை வெளிப் படுத்துகின்றார்; உவமைகளின் பொருத்தத்தை விளக்குகின்றார்; இலக்கிய மரபுகளைப் பேணிக் காக்கின்றார்; உலகியலை உணர்த்தி நயவுரை எழுதுகின்றார்.

**சொற்பொருள் :** சிந்தாமணியில் உள்ள சொற்களும் சொற்றொடர்களும் நச்சினார்க்கினியர் விளக்கத்தால் சிறந்த பொருளை உணர்த்துகின்றன. அவற்றுள் சில கீழே தரப்படுகின்றன :

உயர்மிக்க தந்தை (478)—பிள்ளை உயர்ச்சி மிகுதற்குக் காரணமான தந்தை.

மன்னுடை வேல் (1200)—அரசர் கெடுதற்குக் காரணமான வேல்.

வாக்கு அமை உரு (1258)—கவிகளால் புகழ்தல் ஆகா வடிவு.

நன் குரங்கு (1997)—பொல்லாங்குக்கு நன்றான குரங்கு

இரும்பு உண்டு மிகுத்த மார்பு (2281)—இரும்பு (வாள் வேல் முதலியன) மேய்ந்து பசி தீர்ந்து மிகுத்து வைத்த மார்பு.

**நுண் கருத்து :** பாட்டில் அமைந்து கிடக்கும் நுண்ணிய கருத்துக்களை வெளிப்படுத்துவது நச்சினார்க்கினியர் இயல்பு. ''அம்மி மிதந்து ஆழ்ந்து சுரை வீழ்ந்தது'' (495)

என்பதற்கு, ''ஆழ்தற்குரிய அம்மி மிதந்து மிதத்தற்குரிய சுரை ஆழ்ந்து வீழ்ந்தது என்றது, உயர்ந்தோர் வாழாதே தாழ்ந்தோர் வாழ்ந்ததனை'' என்று விளக்கம் எழுதுகின்றார்.

குணமாலையும் சுரமஞ்சரியும் தந்த சுண்ணப் பொடிகளில் சிறந்ததைத் தேர்ந்தெடுக்கச் சீவகன் அழைத்த 'சுரும்பு வண்டு தேனீ மிஞிறு' (892) ஆகிய நால்வகையான 'தாதுண் பறவை'களை நச்சினார்க்கினியர், வேறுபாடு காட்டி விளக்கு கின்றார். அவற்றிற்குச் செவியுணர்வு உண்டா என்ற வினாவை எழுப்பிக் கொண்டு விடை கூறுகின்றார். இங்கே அவருடைய நுண்மாண் நுழைபுலம் வெளிப்படுகின்றது

நந்தட்டன், சீவகனைப் பேணிக் காக்கும் முறையைப் பதுமுகனுக்கு உரைக்கும்போது, ''பகைவர்கள் சீவகனுக்கு, சூடும்மாலை பூசும்சாந்து உடுக்கும் உடை அணி ஆகியவற்றில் நஞ்சு கலந்து விடுதல் கூடும். ஆதலின் அவற்றை அன்னத்தின் கண்ணிலும், சக்கரவாகப் பறவையின் முகத்திலும் ஒற்றி ஆராய்ந்து மேற்கொள்க; சீவகனுக்கு உண்ணத் தரும் நீரையும் அமுதையும் முன்னதாகக் கருங்குரங்கிற்கு இட்டு ஆராய்க'' என்கின்றான் (1898) இப்பகுதியை அறிந்து கொள்ள நச்சினார்க்கினியர் தரும் விளக்கமே உதவி செய் கின்றது. ''அன்னம் கண் குருதி காலும்; சக்கரவாகம் முகங் கடுக்கும்; கருங்குரங்கு உண்ணாது'' என்ற உரை விளக்கம் இன்றேல் பாடலின் நுண்கருத்து வெளிப்படாது.

முத்தி இலம்பகத்தில் 'வேள்வியாய்' (2787) என்று தொடங்கும் செய்யுளில், ''வாரணத்தின் ஈர்உரி போல் கோள் இமிழ்ப்பு நீள்வலைவாய்க் கண்படுத்தும்'' என்ற பகுதியை விளக்கும்போது நச்சினார்க்கினியர், ''யானையின் பசுந்தோல் பிறர் உடம்பில் பட்டால் கொல்லும் என்றுணர்க'' என்று எழுது கின்றார். இந்த விளக்கமே மேலே குறிப்பிட்ட பாடலுக்கு ஒளிதந்து மகிழ்வூட்டுகின்றது.

**உவமை விளக்கம்** உவமைகளின் பொருத்தத்தை நச்சினார்க்கினியர் நன்கு விளக்குகின்றார். எளிய உவமைகளும் இவர்தரும் விளக்கத்தால் சிறப்படைகின்றன. இவர் தரும் உவமை விளக்கம் சிலவற்றைக் காண்போம்:

சச்சந்த மன்னனைக் 'களிறு அ(ன்)னான்' (200) என்று சிறிய உவமையால் குறிப்பிடுகின்றார் தேவர். நச்சினார்க்கினியர், ''மதச் செருக்கால் (யானை), பாகன் தோட்டியை நீவுமாறு போலக் காமக்களிப்பால், தன் அமைச்சர் கூற்றைக் கடத்தல் நோக்கி, 'களிறு அனான்' என்றார்' என்று விளக்கம் தருகின்றார்.

கட்டியங்காரன் வயப்பட்ட சச்சந்தன் படையைத் தேவர்,

உப்புடைய முந்நீர் உடனறு கரை கொல்வது
ஒப்புடைய தானை (280)

என்று உவமையுடன் சிறப்பிக்கின்றார். அவ்வுவமையை, ''தனக்கு வேலியாகிய கரையைக் கடல் தானே கொல்லுகின்றாற்போல, தனக்குக் காவலாகிய அரசனைப் படை தாமே கொல்லுகின்றது என்றார்'' என்று உரையாசிரியர் விளக்குகின்றார்.

'கந்துக்கடன் மாரி போலவும் கற்பகம் போலவும் கொடை தந்தான்' என்று தேவர் கூறிய உவமைகள் (365), ''கார் வேண்டாமைக் கொடுத்தலும், கற்பகம் வேண்டக் கொடுத்தலும் இயல்பு'' என்ற நச்சினார்க்கினியர் விளக்கத்தால் சிறப்படைகின்றன.

சீவகனை 'ஈயின்றி இருந்த தேன்' என்று தேவர் குறிப்பிடுகின்றார் (712). உரையாசிரியர், ''இதற்கு முன்பு ஒரு மகளிரும் இவனை நுகராது இருந்தமை உணர்ந்து'' அங்ஙனம் கூறியதாகக் குறிப்பிடுகின்றார்.

'படநாகம் தோல் உரித்தாற் போல் துறந்து'

என்ற உவமைக்கு (1546), ''படநாகம் தோல் உரித்தாற் போல அகமும் புறமும் துறந்து'' என்றும், ''நாகம் தோல் உரிக்கும் பொழுது நஞ்சும்காலும்'' என்றும் விளக்கம் தருகின்றார்.

மதங் கொண்ட யானை,
'கடலென, காற்றென, கருங்கண் கூற்றென,
உடல்சின உருமென ஊழித் தீயெனத்' (973)

தோன்றியதாகத் தேவர் உரைக்கின்றார் நச்சினார்க்கினியர், ''முழக்காற் கடலென, கடுமையாற் காற்றென, கொடுமையாற் கூற்றென, கோபத்தால் இடியென, சேரக் கோறலின் ஊழித் தீயெனத் தோன்றிற்று'' என்று விளக்கும்போது உவமைகள் புதியனவாய்ப் பொலிகின்றன.

இலக்கணையைச் சீவகன்,
'கரும்பே தேனே அமிர்தே
காமர் மணியாழே
அரும்பார் மலர்மேல் அணங்கே
மழலை அன்னமே
சுரும்பார் சோலை மயிலே
குயிலே சுடர் வீசும்
பெரும்பூண் மன்னன் பாவாய்
பூவாய் பிணைமானே (2453)

என்று பலவாறு பாராட்டுகின்றான். இதற்கு நச்சினார்க்கினியர் எழுதும் உரைவிளக்கம் பலமுறை கற்று இன்புறத்தக்கதாய் உள்ளது:

''கணவற்கு மெய்ம் முழுதும் இனிதாய் இருத்தலின் கரும்பு. நல்லார் உறுப்பெல்லாம் கொண்டு இயற்றலின் தேன். இவ்வுலகில் இல்லாத மிக்க சுவையும் உறுதியும் கொடுத்தலின்

அமிர்து. காம வேட்கையை விளைவித்து இனிய பண் தோற்றலின், மழலையையுடையதொரு யாழ். கணவற்குச் செல்வத்தைக் கொடுத்தலின் திரு நடையால் அன்னம். சாயலால் மயில். காலமின்றியும் கேட்டார்க்கு இன்பம் செய்தலின் குயில். மன்னன் மகளே என்றல் புகழன்மையின் மன்னன் பாவாய் என்றது, அவன் கண்மணிப் பாவை என்பது உணர்த்திற்று; இனி இவள் கொல்லிப்பாவையல்லள், மன்னன் பாவை என்றுமாம் சேடியர் கற்பித்த கட்டளை தப்பாமற் கூறலின் பூவை. நோக்கத்தால் மான்''

**உலகியல் கூறுதல்:** பல பாடல்களை ஒரு தொடராக்கி உரை எழுதுவது நச்சினார்க்கினியர் பண்பு. இவ்வாறு எழுதுவதில் சிறந்த பயன் இருப்பதாய் இவர் கருதுகின்றார் பதுமை என்பாளைப் பாம்பு தீண்டிய செய்தியை, சீவகனும் உலோக பாலனும் இருக்குமிடத்திற்கு ஒருவன் வந்து கூறுகின்றான். இச்செய்தியைத் தேவர் எட்டுப் பாடல்களில் (1266—1278) அமைத்துள்ளார். பதுமையின் வரலாறு அழகு ஆகியவற்றை முதலில் கூறிப் பின், அவள் சோலையில் முல்லைக்கொடி வளர்த்த செய்தியை உரைத்து, அது பூத்த போது மலர் கொய்ய அவள் செல்ல அங்கே பாம்பு தீண்டிற்று என்று வந்தவன் கூறுவதாகத் தேவர் பாடியுள்ளார். பாடல்கள் இருக்கும் அமைப்பிலேயே பொருள் எழுதாமல் நச்சினார்க்கினியர், அப்பாடல்களை எல்லாம் ஒரே தொடராக இணைத்துப் பாம்பு கடித்த செய்தியை முதலில் கூறி மற்றச் செய்திகளைப் பின் கூறுவதாய் அமைத்துள்ளார். இவ்வாறு செய்ததற்குக் காரணம் கூறும்போது, ''இங்ஙனம் மாட்டு உறுப்பாகக் கூறுது செவ்வனே கூறின் பாம்பு கடித்தமை கடுகக் கூறிற்று ஆகாமை உணர்க'' என்று உலகியலை நினைவூட்டி விளக்குகின்றார்.

**விளக்காத கதைகள்** தமிழ்க் காப்பியங்களில் மேற்கோள் கதைகள் சில இடம் பெற்றுள்ளன. அவற்றுள் சில,

காப்பியங்கள் தோன்றிய காலத்தில் வாய்மொழியில் வழங்கி வந்த பழங்கதைகள்; சில பஞ்சதந்திரக் கதைகள். சீவக சிந்தாமணியில் அத்தகைய கதைகள் சில உள்ளன. பாடல் களுக்கு உரைவிளக்கம் எழுதும் நச்சிஞர்க்கினியர் அக் கதைகளை விளக்கவில்லை. அதனால் அக் கதைகளை நாம் தெளி வாக அறிந்து கொள்ள முடியவில்லை. சிந்தாமணியில் வரும்,

கடத்திடைக் காக்கை ஒன்றே
ஆயிரங் கோடி கூகை
இடைத்திடை அழுங்கச் சென்றங்கு
இன்னுயிர் செகுத்த தன்றே (1927)

என்ற கதை, பஞ்ச தந்திரக் கதைகளில் உள்ளது. இதே போன்று ''சிங்கத்தைக் கொன்ற முயல்'' கதை சிறிது வேறு பாட்டுடன் கூறப்படுகின்றது :

முழை யுறை சிங்கம் பொங்கி
முழங்கி மேற் பாய்ந்து மைதோய்
வழையுறை வனத்து வன்கண்
நரிவலைப் பட்டது அன்றே (1928)

என்ற வரிகளில் அந்தக் கதை இடம் பெறுகின்றது. இதில் சிங்கத்தை நரி வென்றதாகக் கூறப்பட்டுள்ளது. பஞ்ச தந்திரக் கதைகள், தேவர் சிந்தாமணியை இயற்றிய காலத்தில் தமிழ கத்தில் வழங்கி இருக்கலாம். சிங்கத்தை முயல் வென்ற கதை சிறிது மாறி, முயலுக்கு ஈடாக நரி இடம் பெற்றிருக்கலாம். தமிழ்நாட்டுப் பழங் கதைகளில், நரி தந்திரத்தில் வல்லதாய்— சூழ்ச்சி மிக்கதாய்—நுண்ணறிவு படைத்ததாய் வருகின்றது. ஆதலின் சிங்கத்தை நரி வென்றதாய்க் கதை ஒன்று வழங்கி இருக்கலாம். இக் கதையின் உண்மையான வடிவத்தைநம்மால் அறிந்து கொள்ள இயலவில்லை. இக் கதையை நச்சிஞர்க் கினியர் விளக்கி இருப்பின் பாடலின் பொருள் நன்கு வெளிப் பட்டிருக்கும்.

இவ்வாறே "வெள்ளிலை" என்று தொடங்கும் பாடலில்

"கள்ளரால் புலியை வேறு
காணிய காவல் மன்னன்"

என்ற வரிகளில் உள்ள கதையையும் உரையாசிரியர் விளக்க வில்லை. இதில் கூறப்பட்டுள்ள கதையை அறிந்து கொள்ள முடியாமல் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் பெரிதும் இடர்ப் பட்டார். ஒரு நாள் நண்பர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தபோது எதிர்பாராத வகையில் இக் கதைக்கு நண்பர் வாயிலாக விளக்கம் கிடைத்தது. இக் கதையையும், கதை அறிந்த வரலாற்றையும் அவர் 'நினைவு மஞ்சரி' (*II*, 1958-பக்கம் 106-113) என்னும் உரைநடை நூலில் எழுதியுள்ளார். பின்னர் வெளியிட்ட சிந்தாமணிப் பதிப்புகளில் இக் கதையை விளக்கமாக அடிக் குறிப்புகளில் சேர்ந்துள்ளார்.

இத்தகைய கதைகள் நச்சினார்க்கினியர் காலத்தில் நாடறிந்த பழங்கதைகளாக இருந்திருக்கலாம்; அதனால் அவற்றிற்கு விளக்கம் தேவையில்லை என்று கருதி எழுதாமல் விட்டிருக்காலம்.

**காப்பிய நோக்கு:** நச்சினார்க்கினியர், சிந்தாமணியைக் காப்பியமாக நோக்கி, உரைகண்டுள்ளார். காப்பியத்தைத் தொடர்நிலைச் செய்யுள் என்ற பெயரால் வழங்கி, அதன் இயல்புகளை முதற்பாடலின் உரையிலேயே பின்வருமாறு விளக்கியுள்ளார்:

"மெல்லென்ற சொல்லான் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் விழுமிய பொருள் பயப்பப் பழையதொரு கதை மேல் கொச்சகத்தால் கூறின், அது தோல் என்று (தொல்காப்பியர்) கூறினமையின் இச் செய்யுள் அங்ஙனம் கூறிய தோலாம் என்றுணர்க

காப்பியத்தின் கதைக்குரிய தலைவனை, "சீவகனை முற் கூறினார், கதைக்கு நாயகன் ஆதலின்"(6) என்று நூலின் தொடக்கத்திலேயே அறிமுகப்படுத்துகின்றார்.

திருத்தக்க தேவர், சீவகனைத் தன்னேரில்லாத தலைவனாய்ப் படைத்துள்ளார். அவன் இசைப் போட்டியில் காந்தருவதத்தையை வெல்கின்றான். தன்னேரில்லாத தலைவனாகிய சீவகன் ஒரு பெண்ணை வென்றான் என்று கூறுவதைத் திருத்தக்க தேவர் விரும்பவில்லை. ஆதலின் அவர் சீவகனுக்குக் காந்தருவதத்தை தோற்றாள் என்று மிகவும் நயம்படக் கூறுகின்றார் :

விஞ்சைக்கு இறைவன் மகள்
வீணையில் தோற்றவாறும் (11)

தோற்றனள் மடந்தை நல்யாழ்
தோன்றலுக்கு என்று நிற்பார் (702)

மாதர் இசை தோற்று இருந்தனளே (735)

என்று மூன்று இடங்களிலும் மறவாமல் தேவர் காந்தருவதத்தை தோற்றாள் என்றே கூறுகின்றார். ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்பதில் வல்லவராகிய நச்சினார்க்கினியர், "ஒரு மகளை வென்றான் என்றல் இவன் தலைமைக்கு இழிவு என்று அவள் செய்தியாகக் கூறினார்" (11) என்று கூறுகின்றார்.

சீவகனைக் கருணை மறவனாகத் தம் காப்பியத்தில் காட்டுகின்றார் தேவர். சீவகன், வேடர்கள் கவர்ந்து சென்ற ஆனிரையை மீட்கப் போரிட்டு அவர்களைக் கொல்லாமல் அச்சுறுத்தியே நிரையை மீட்கின்றான் நூலாசிரியரின் உள்ளக் கருத்தை அறிந்து கொண்ட உரையாசிரியர் போரின் தொடக்கத்தைக் கூறும் பாட்டின் (448) உரையிலேயே, "தனக்கு அவர் நிகரன்மையானும், தனது அருளும் வீரமும் மேம்படுத்துதற்குச்

சென்றான் ஆகலானும், அவரை அஞ்சப்பண்ணி நிரைமீட்டான் என்பதே தேவர் கருத்து; அது மேற்காண்க'' என்று கூறுகின்றார். மீண்டும் இக் கருத்தினைப் பல இடங்களிலும் வலியுறுத்துவதைக் காணலாம் :

''மறவரைக் கொல்லாது உயிரை வழங்குதலின் வள்ளல் என்றார்'' (11). ''அவர் உயிரைக் கொடுத்தலின் வள்ளல் என்றார். பொராதே தேரொலியாலே அவரை அஞ்சுவித்து நிரை மீட்கின்றான்'' (449). கொல்லாதிருத்தலின் மாரி போல் என்றார்'' (452). ''தம் உயிர்க்கு ஊறு செய்யாது எய்தமை கண்டு போகடுதலின், தூவுதலான் அறுத்தான் என்றார்'' (453). ''தேவர், ஈண்டு வேடர் எம் முறையினும் கொல்லத்தகாதவர் ஆதலின், கொலை இன்று என்பது தோன்றக் களத்துப் பாவம் போக்கினன் என்று கூறுராயினர் என்க'' (454).

சிந்தாமணிக் காப்பியத்தின் கட்டமைப்பு கதை நிகழ்ச்சி காப்பிய மாந்தர்களின் பண்பு வரலாறு ஆகியவற்றைக் கூர்ந்து நோக்கிய நச்சினார்க்கினியர், உரையில் தம் கருத்துக்களை ஆங்காங்கே வெளியிட்டுள்ளார். அத்தகைய இடங்களில் சிலவற்றைக் காண்போம்.

சீவகனுக்கு இசையில் தோற்ற காந்தருவதத்தை அவனுக்கு மாலையிடுகின்றாள். அதனைக் கண்டு பொறுமை கொண்ட கட்டியங்காரனும் மற்ற மன்னர்களும் சீவகனை எதிர்த்துப் போரிடுகின்றனர். சீவகன் அவர்களை வென்று வாகை சூடுகின்றான். இந்தப் போரில் காந்தருவதத்தையின் தந்தை கலுழவேகன் சீவகனுக்கு உதவி செய்திருக்கலாம். பலவகை ஆற்றல்கள் படைத்துள்ள அவன் போரில் ஈடுபட்டிருந்தால் கதை நிகழ்ச்சிகளில் தடைகள் பல ஏற்பட்டிருக்கும். ஆதலின் காப்பியம் படைத்த தேவர், கலுழவேகனைப் போரில் ஈடுபடுத்தவில்லை. இதனை உணர்ந்து கொண்ட நச்சினார்க்

கினியர், ''கலுழவேகன் வந்தால் சீவகன் கதை ஒன்றும் இன்றும்'' (846) என்று விளக்கியுள்ளார்.

சீவகனின் வளர்ப்புத் தந்தையாகிய கந்துக்கடன் இறந்து போன செய்தியை எவ்விடத்திலும் குறிப்பிடாத தேவர், அவன் மனைவி சுநந்தை துறவு பூண்டதை முத்தி இலம்பகத்தில் கூறுகின்றார் (2627). இவ்விடத்தில் நச்சினார்க்கினியர் ''கந்துக்கடன் இறந்தமை இத் தொடர்நிலைச் செய்யுளில் தேவர் கூறிற்றிலர், தகுதியன்று என்று கருதி; இத்துறவால் உயர்த்துணர வைத்தார்'' என்று விளக்கியுள்ளார். இத்தகைய இடங்களில் எல்லாம் நச்சினார்க்கினியரின் காப்பிய நோக்கு வெளிப்படுகின்றது.

தேவர் தந்த காப்பியச் சிந்தாமணியைச் சிறந்த இலக்கியமாய்—கலைத்திறன் மிக்க காப்பியமாய்க் கண்டு மகிழ்ந்த நச்சினார்க்கினியரின் உரைத்திறன் பலமுறை கற்றுப் போற்றத் தக்கதாகும். சிந்தாமணி, நச்சினார்க்கினியரால் பட்டை தீட்டப் பெற்று வண்ணச் சுடரொளியைப் பலவகையாய் வீசி மகிழ்விக்கின்றது. இவ்வுரை விளக்கம் தேவரின் புலமை மாண்பை நன்கு வெளிப்படுத்துகின்றது. தேவரின் புலமை வளத்தை அளந்து காணும் திறன் நச்சினார்க்கினியரிடம் உள்ளது.

''புலம் மிக்கவரைப் புலமை தெரிதல்
புலம் மிக்கவர்க்கே புலனாகும் —பழமொழி : 7

மறவுரையும், காமத்து உரையும், மயங்கிப்
பிறவுரையும் மல்கிய ஞாலத்து—அறவுரை
கேட்கும் திருவுடையாரே பிறவியை
நீக்கும் திருவுடை யார் —அறநெறிச்சாரம்—2